உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

மார்ச் 1971 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1.00

தொலைக் காட்சி புதிய முரசு

... ஆனால் அதன் செய்தி என்ன?

Photo Paolo Koch © Photo Researchers, New York

சிந்தனையின் அமைதி

சிந்தனையின் அமைதி தவழும் இப்பொன் வண்ண வெண்கலச் சிலை அவலோகிடீஸ்வரர் எனும் போதிசத்துவரின் சிலை. இது கொரியாவின் சில்லா காலச் சிலை (கி.பி. 7ஆம் நூற்றுண்டின் முற்பகுதி). இதன் உயரம் 90 செ.மீ. இது சியோல் (கொரியா குடியரசு) டக்சூ மாளிகை பொருட்காட்சி மனையில் உள்ளது. போதிசத்துவர்களை மக்கள் இரக்கம், மீட்பு இவற்றின் வடிவாக வணங்குகின்றனர். 2ஆம் நூற்றுண்டில் தொடங்கி அவலோகிடீஸ்வர் வழிபாடு ஆசியாவில் பரவலாக நடைபெறுகின்றது. மெய்யறிவின் அடையாளமான தாமரை தாங்கிய அவலோகிடீஸ்வர் ஆணும் பெண்ணும் ஆவர். சீனா, கொரியா, ஜப்பான் நாடுகளில் அவரை சிறப்பாக பெண் வடிவிலே வணங்கி வருகின்றனர்.

யுனெஸ்கோ கூரியர்

மார்ச் 1971

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டிஞல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவிஞல்
பதின்மூன்று பதிப்புகளாக
வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன
அமெரிக்க ஐக்கிய நாடு	

விற்பனை, விநியோக அலுவலகம் :
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.

ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப் படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் தஃபாண்டினுட்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் : ஸாண்டி காஃப்ளர்

உதவிப் பிரதம ஆசிரியர் : ரெனி காலோஸ்

பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி

நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு : ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு : ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு : அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு : விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு : ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு : அப்தல் மோனியம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு : ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு : மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு : கர்த்தார் சிங் துக்கல் [டில்லி]
ஹீப்ரு : அலெக்ஸாண்டர் பெலி [ஜெருசலம்]
பெர்சியப் பதிப்பு : ஃபெரெதூன் ஆர்தலன் [டெஹ்ரான்]
தமிழ்ப் பதிப்பு : நெ. து. சுந்தரவடிவேலு [சென்னை]
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள் :
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா

ஆராய்ச்சி : ஓல்கா ரோடல்

அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எதழுப்பட வேண்டும்.

The UNESCO Courier

MARCH 1971 No. 44

No. 2-1971 MC 71-2-263 A

பக்கங்கள்

4	**தொலைக்காட்சி இப் பத்தாண்டின் அறைகூவல் : அளவும் தரமும்** — மார்டின் எஸ்லின்
8	**அமெரிக்கத் தொலைக்காட்சியின் 'மாய'க் கல்விமுறை** குழந்தைகளுக்கான தொலைக்காட்சித் தொடரை இன்று ஐம்பது நாடுகளில் காணலாம்
12	**இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டில் யுனெஸ்கோ** — ஹாவர்டு பிராபின்
14	**தொலைக்காட்சியிலும் வெளியீட்டிலும் பெருக்கம்** யுனெஸ்கோ புள்ளிவிவர ஆண்டுத் தகவல் நூல் தரும் செய்தி
17	**வளர்ச்சியுறும் உலகின் உயிர்ப்பாதைகள்** கண்டங்களுக்கிடையேயான புதிய பெருஞ்சாலை அமைப்புமுறை — டபிள்யூ. எச். ஓவன்ஸ்
22	**அமைதி விழைவு** புனித போப்பாண்டவர் ஆருவது பாலின் அறிக்கை
25	**புயலையும் பிற இயற்கை அழிவுகளையும் பற்றி — புவிப் பௌதிக அறிஞரின் சிந்தனைகள்** — ஈ. எம். ஃபூர்னியர் டி ஆல்ப்
28	**உள்ளார்ந்த திறமைகள் : பெற்றோர் தீர்க்கக்கூடிய புதிர்** — போரிஸ் நிகிட்டின்
33	**யுனெஸ்கோ செய்தியறை**
2	**உலகக் கலைக் களஞ்சியம்** தியானத்தின் அமைதி (கொரியா)

அட்டைப்படம்

புதிய ''முரசு'' எனப்படும் தொலைக்காட்சியை ''உள்ளதும் இல்லதும் ஒன்ருகும் உலகம்'' என்றும் ''பொழுதுபோக்குத் தரத்திற்கேற்ப நல்லது தீயது என மதிப்பிடப்படும் உலகம்'' என்றும் கூறுவர். தொலைக்காட்சி பொழுதுபோக்குக் கருவியாகவும் செய்தியும் கல்வியும் அளிக்கும் சாதனமாகவும் ஒருங்கே பயன்பட முடியுமா? தேவைப்படும் அளவிற்கும் தரத்திற்கு மேற்ப அது நிகழ்ச்சிகளை அளித்து வருகின்றதா? 4ஆம் பக்க கட்டுரை சிக்கலான இப்பொருள்களை ஆய்கின்றது.

Photo Babout © Rapho, Paris

தொலைக்காட்சிப் பெட்டிகளும், பிடி மின் கருவிகளும் வீட்டுப் பொருள்களும் விற்கப் படும் டோக்கியோ பகுதியிலுள்ள கடை யில் ஏராளமான தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப் பட்டிருப்பதால் எதை வாங்குவது என்பது பிரச்சினையாகி வரு கின்றது. ஜப்பானில் 21 மில்லியன் தொலைக்காட்சிப் பெட்டிகளும் (5 பேருக்கு ஒன்று), 2600 காட்சி பரப்பும் கருவிகளும் உள்ளன.

Photo © Paul Almasy, Paris

தொலைக்காட்சி இப் பத்தாண்டின் அறைகூவல் அளவும் தரமும்

மார்டின் எஸ்லின்

தொலைக்காட்சி தலை சிறந்த செய்தித் தொடர்புக் கருவியாகும். தொலைக் காட்சி பரப்புவது போன்ற செய்திகள், கருத்துக்கள், பொழுதுபோக்குக் காட்சி கள், நாடகங்கள், மனிதப் பண்புகள் போன்றவற்றை இத்துணை அளவில் இத்தனை பேர் இதுவரை கண்டதும் கேட்டதுமில்லை.

உலகில் முதன் முதலில் (1936 இல்) தொலைக்காட்சிப் பணியைத் தொடக்கி வைத்து அதில் உயர் வளர்ச்சி பெற் றுள்ள பிரிட்டனில் மக்கள் தொகையில் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{8}$ பகுதியினர் தொலைக்காட்சி

மார்டின் எஸ்லின் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழக நாடகத் (வானொலி) தலைவர், பிரிட்டிஷ் கலைச் சங்க உறுப்பினரும் ஷேக்ஸ்பியர் குழு'வின் நாடகக் கதை அறிவுரையாளருமான இவர் தற்கால அரங்கு, நாடகாசிரியர்கள் பற்றி ''ப்ரெக்ட், எ சாய்ஸ் ஆஃப் ஈவில்ஸ்'' (1959), ''தி தியேட் டர் ஆஃப் தி அப்ஸர்ட்'' (1962), ''ஹெரால்டு பின்டர்'' (1967), ''தி ஜீனியஸ் ஆஃப் தி ஜெர் மன் தியேட்டர்'' (1968) போன்ற பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் ''பெக்கட்'' எனும் திறனாய் வுக் கட்டுரைத் தொகுதியின் ஆசிரியர். இக் கட்டுரை ''இம்பாக்ட் ஆப் சைன்ஸ் ஆன் சொசைட்டி'' எனும் யுனெஸ்கோ அறிவியல் காலாண்டு இதழில் வெளியான திரு. எஸ்லினின் ஆய்வுக் கட்டுரையின் தழுவல்.

பார்க்கின்றனர். மிகுதியான பேர் பார்க்கும் மாலை வேளையில் இத் தொகை 40 முதல் 50 சதவீதமாக உயர்கின்றது.

மக்கள் மிகுதியாகப் பார்க்க விரும்பும் ஒரு நாடகம், பொழுது போக்குக் காட்சி, தொடர் நிகழ்ச்சி ஆகியவற்றை மொத்த மக்கள் தொகையில் $\frac{1}{8}$ பகுதியினர், அதாவது 1.6 அல்லது 1.7 கோடி பேர் ஒரே நேரத்தில் பார்க்கக்கூடும்.

இத் தொகைகளை செய்தித் தொடர்புக் கருவிகள் தோன்றுவதற்கு முன்னால் ஒரே நிகழ்ச்சியை அல்லது கலைக்காட்சியைக் கண்ட மக்களின் தொகையோடு ஒப்பு நோக்க வேண்டும். கால் பந்து போட்டியை ஓர் இலட்சம் பேரும், 1000 பேர் கொள்ளக் கூடிய அரங்கில் வாரத்திற்கு 8 காட்சிகள் நடைபெற்றால் ஈராண்டுகளில் அந் நாடகத்தை 10 இலட்சம் பேரும் பார்த்திருப்பர்.

இவ்வாறாக பிரிட்டனில் மக்கள் விரும்பும் ஒரே தொலைக்காட்சி நாடகத்தைப் பார்ப்போரின் தொகை 30 ஆண்டுகளில் அரங்குகளில் கூடும் தொகைக்கு இணையாக இருக்கின்றது. இஃது அரிதாக நிகழ்வதன்று. தினமும், சிலவேளை ஒரே மாலையில் பல முறை நிகழ்கின்றது!

கடந்த காலத்தில் பிறருடைய எண்ணங்கள் மறைந்த புதிராக இருந்தன. இன்றோ வளர்ச்சியுற்ற நாடொன்றில் மக்கள் மிகுதியாக தொலைக்காட்சியைப் பார்க்கும் வேளையில் பிறருடைய எண்ணங்கள் பலவற்றை எளிதில் கண்டு கொள்ள முடிகின்றது.

மனிதன் உணர்வோடு எண்ணும் எண்ணங்களையும் உணரும் உணர்ச்சிகளையும் அவனது ஆளுமையின் தனி மறைவான பகுதியாகக் கொள்வோமானால், 20ஆம் நூற்றாண்டின் மனிதன் தினமும் சில மணி நேரம் தனது தனி உணர்வை மறந்து பொது உணர்வுக்கு இடமளிக்கிறான் எனச் சொல்லி செய்தி பரப்பும் கருவிகளின் விளைவை விளக்கலாம். இது நமக்கு மலைப்பையும் அச்சத்தையும் தருகின்றது.

95 சதவீதம் குடும்பங்களில் தொலைக் காட்சிப் பெட்டி இருக்கும் பிரிட்டனின் அனுபவத்திலிருந்து மேலே கூறிய முடிவுக்கு வருகின்றோம். பிற நாடுகள் இந் நிலையை இன்று அடையாவிடினும், ஒரு நாள் அடையுமென்பது திண்ணம்.

பிரிட்டனில் மூன்று காட்சி வழிகள் உள்ளன. பல நாடுகளில் இவை குறைவு. அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரிய நகர்களில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வழிகள்உள்ளன. அமெரிக்காவில் தொலைக் காட்சி விளம்பரத் துணையுடன் தனியார் துறையிலுள்ளது. ஆனால் பல நாடுகளில் நாட்டுடைமையாக இருக்கின்றது.

அமெரிக்காவில் விளம்பரத் தொலைக் காட்சி பல வழிகளைப் பயன்படுத்துவதால் பார்ப்போருக்கும் பல வகைக் காட்சிகளைக் காட்டுகிறது. ஆனால் இஃது உண்மையன்று.

பல வழிகளைப் பயன்படுத்தும் அமெரிக்க விள்ம்பரத் தொலைக்காட்சி முறை போன்றவை காட்சிவகைகளை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைக்கின்றன. ஏனெனில் விளம்பர ஆய்வை மிகுதியாகப் பயன்படுத்தி மக்களில் பெரும்பாலோர் எவ்வளவு காட்சிகளை அதிகமாக விரும்புகின்றனர் எனத் தீர்மானிக்கின்றனர்.

இதன் விளைவாக எல்லாக் காட்சி வழிகளிலும் வேடிக்கைத் தொடர், மேற்கு வாழ்க்கை முறை, கால்பந்து (அமெரிக்க வகை) போன்ற ஒரே வகை காட்சிகள் காட்டப்படுகின்றன. இதனால் காட்சிகளின் வகையும் தரமும் ஒன்று போல் அமையக் கூடும். ஆனால் பிரிட்டிஷ், ஜெர்மானிய முறைகளில் கருத்தாழமுள்ள நிகழ்ச்சிகளும் வேடிக்கைகளும், கலையும் விளையாட்டும், அறிவைத் தூண்டும் நிகழ்ச்சிகளும்

தொலைக்காட்சியில் புனைகதை

பொதுமக்கள் விரும்புவனவும் மாறி மாறி காட்டக்கூடிய முறையில் 2 அல்லது 3 வழிகள் திட்டமிடப் பெற்றுள்ளன.

ஒரே நேரத்தில் இலட்சக் கணக்கான பேர் ஒரே உணர்வைப் பெறுவதை எண்ணிப் பார்த்தால், தொலைக்காட்சியினால் ஏற்பட்டு வரும் பண்பாட்டுப் புரட்சியின் தன்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. ஆனால் இதைவிட அதிக வியப்புக்குரிய, புரட்சிகரமான இயல்பு ஒன்றுள்ளது. அதுதான் இசை நிகழ்ச்சி, விளையாட்டு, கால்பந்து போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குழாய் நீர் அல்லது மின்சாரம் போல் இடையறாது நிகழ்வது என்று எனக்குத் தோன்றுகிறது.

அமெரிக்கா தவிர உலகின் பெரும் பகுதிகளில் பகலும் இரவும் இவ்வாறு இடையறாது நிகழ்ச்சிகள் நிகழ்வதில்லை. ஆயினும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பிற்பகலிலும் மாலையிலும் மட்டும் காட்டப் பெறும் நாடுகளிலும் கூட, பெரும் பாலோர் ஓய்வு பெறும் அவ்வேளைகளில் அவற்றைக் காண முடிகிறது.

இடையறாத தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் முக்கிய விளைவு என்னவென்றால், சிறந்தவை அல்லது சிறந்தவையல்லாதவை எனும் மேலெழுந்தவாரியான வேறுபாடுகள் மட்டுமின்றி, அடிப்படை வேறுபாடுகளுமுள்ள பலவகை நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக, பார்ப்போரின் மனதில் ஒரே தரமுள்ளவைபோல் காட்டப் பெறுகின்றன. காட்சி காண்போர் தன்மையில் பெரும் வேறுபாடுகளுள்ள பல நிகழ்ச்சிகளின் கலவையை ஒரே வகைப் பொருளாகக் காண நேரிடுகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாம் முற்றிலும் உண்மையான நிகழ்ச்சி முதல் முழுக் கற்பனை வரை வரிசைப்படுத்தலாம். ஆகவே, முதலில் தொலைக்காட்சி நிறுவனங்களின் திட்டத்திற்குட்படாத போர் அல்லது இயற்கையழிவு போன்றவைபற்றிய செய்திப் படங்களில் தொடங்கலாம்.

அடுத்து, உண்மையான, ஆனால் எதிர்பார்த்துத் திட்டமிட்டு உருவாக்க வல்ல நிகழ்ச்சிகள் உள்ளன. இவை முடிசூட்டு விழா, படை அணிவகுப்பு, ஒலிம்பிக் பந்தயம் போன்ற விளையாட்டுகள் ஆகும்.

பிறகு, உண்மையான ஆட்கள் பங்கு பெறும், ஆனால் ஏற்கெனவே திட்டமிடப் பெற்று பொழுது போக்காகத் தயாரிக்கப்படும் உண்மை நிகழ்ச்சிகள். இவை, பரிசு பெறுவதற்காகப் பலர் கேள்விகளுக்கு விடையளிக்கும் விளையாட்டுகள், புகழ் பெற்றோர் பங்கு பெறும் விவாதங்கள் போன்றவை. இறுதியில், வரிசையின் கோடியில் நாடகம், தொடர் நிகழ்ச்சி, நீள் திரைப்படம் போன்ற முற்றிலும் கற்பனை நிகழ்ச்சிகள் உள்ளன.

இவை பொழுது போக்கிற்காகத் தொடர்ச்சியாகக் காட்டப்படுவதால் பலவகை நிகழ்ச்சிகளின் பண்பு வேறுபாடுகள் மங்கி மறையக்கூடும். வியட்நாமில் உண்மையான போர் வீரர்கள் உயிர் துறக்கும் உண்மைக் காட்சிக்குப் பின் அல்லது முன் நடிகர்கள் போர் புரிவதாக நடிக்கும் நாடகம் காட்டப் பெறலாம்; அல்லது மக்கள் தீர்மானிக்க வேண்டிய உண்மைப் பிரச்சினைகளை அரசியல்வாதி அலசுவதற்கு முன் அல்லது பின் விகட நடிகன் ஒருவன் பார்ப்போரைத் தனது திறமையினால் சிரிப்பூட்டி வேடிக்கை காட்டலாம்.

பொதுவாக, பார்ப்போருக்குத் தொலைக்காட்சி ஒரு பொழுது போக்காக இருக்கிறதென்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே உண்மைக்கும் கற்பனைக்குமுள்ள வேறுபாடு பார்ப்போரின் உள்ளத்தில் அவர்களை அறியாமலாவது மறைந்துவிடுகிறது. ஆனால் இதனால் ஏற்படும் பெரும் விளைவு என்னவென்றால், எது உண்மை, எது கற்பனை எனத்தெளிவாக அறியக் கூடியவர்களின் மனத்தில் கூட, இக் காட்சி நல்லதா கெட்டதா எனும் பண்பு பற்றிய முடிவு பொழுது போக்கின் அடிப்படையிலே எழுகின்றது.

இதனால் வியட்நாமில் உண்மையாகவே உயிர் துறக்கும் உண்மைப் போர் வீரர்கள் போர் நாடகத்தில் தோன்றும் நடிகரைப்போல் உணர்ச்சியைத் தூண்டி கருத்தைக் கவரக் கூடியவர்களாக இருக்கிறார்களா என்றும், அரசியல் வாதியின் செயல் விகட நடிகனின் நடிப்பைப்போல் சிரிப்பூட்டக் கூடியதாக இருக்கிறதா என்றும் பார்ப்போர் மதிப்பிடக் கூடும். மதிப்பிடவும் செய்வர்.

விகட நடிகரும் பிற தொலைக்காட்சிப் பெரு மக்களும் அரசியல் வாதிகளைப் போலவே நாட்டின் முக்கியமான, செல்வாக்குள்ள மனிதராகின்றனர். வாக்காளரும் விகட நடிகரிடமும் பிற தொலைக் காட்சி வல்லுநரிடமும் காணும் திறமைகளைக் கொண்டே அரசியல்வாதிகளை மதிப்பிடுகின்றனர் என்பதில் வியப்பில்லை.

முதலில் மனிதன் நிலாவில் இறங்கிய நிகழ்ச்சியைத் தொலைக் காட்சியில் கண்ட ஒரு குழந்தை நீண்ட காலத்துக்கு முன் அது போன்ற ஒரு சம்பவத்தை தொலைக்காட்சியில் ஒரு விஞ்ஞானத் தொடர் கதையின் அதைவிடக் கிளர்ச்சி தரும் முறையில் கண்டதாகக் கூறியது. இஃது ஓர் உண்மைப் பிரச்சினையாகும். இதனால் வருங்காலத்தில் பயங்கர விளைவுகள் ஏற்படும்.

ஏனெனில், எதிர்பாராமல், தாமாகவே நிகழும் சம்பவங்கள், அதாவது உண்மைச் சம்பவங்கள், தொலைக் காட்சித் தயாரிப்பாளரின் திட்டத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டவை. ஆகவே அக்காட்சிகளில் பொழுது போக்குப் பண்பும் திறமையும் குறைந்தே காணப்படும்; அவை நல்ல தொலைக் காட்சிகளாக அமையா. நிகழ்ச்சிகள் எவ்வளவு கற்பனை மிகுந்தவையாக உள்ளனவோ அதற்கேற்ப அவற்றைத் தொலைக் காட்சித் தயாரிப்பாளர் நல்ல முறையில் அமைக்க முடியும்.

ஆர்ப்பாட்டம் நடத்துகிறவர்கள் திரைக்கேற்ற வகையில் அமையும் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெறுமெனத் தொலைக்காட்சி செய்தி நிறுவனங்களுக்கு ஏற்கெனவே அறிவித்து விடுகின்றனர். இவர்கள் தொலைக்காட்சியின் அடிப்படை பிரச்சினையைப் பயன்படுத்துகின்றனர். அந் நிகழ்ச்சியை முன்னேற்பாட்டோடு திட்டமிட்டுத் தயாரிக்க முடியுமாதலால் அது பார்ப்போரின் உள்ளத்தில் சாதாரணமாகத் தோன்றாமல், முக்கியமான நிகழச்சி போல் தெரியும்.

பிரெஞ்சு நாடக ஆசிரியரான கிளாட் ஆலியர் செய்தி பரப்பும் கருவிகளின் இவ்வியல்பை விளக்கும் வானொலி நாடகமொன்றில், கவர்ச்சிகரமான முறையில் செய்தி பரப்ப விரும்பிய ஒலி பரப்பும் நிலையமொன்று அரசின் தலைவரைக் கொல்லும் ஏற்பாடுகளைத் தானே செய்திருந்ததாகத் தீட்டுகிறார். ஆஃப்ரிக்க உள்நாட்டுப் போரில் தொலைக் காட்சிக்கென்றே தூக்குத் தண்டனையைத் தள்ளி வைப்பது அல்லது ஏற்பாடு செய்வது பற்றி அடிக்கடி வரும் செய்திகள் மேலே குறிப்பிட்ட நாடக ஆசிரியரின் கூற்று வெறும் கற்பனையன்று என்பதைக் காட்டுகிறது

பொது வாழ்வையும் அரசியலையும் அரங்கிற்கேற்பத் திரித்தல், ஒப்பனைக்கேற்ற முகமுள்ளவர்களைத் தெரிந்தெடுத்தல், தேர்தல் விளம்பரங்களை அவற்றின் உண்மைத் தன்மைக்கேற்ப காட்டாமல் தொலைக்காட்சிக் கேற்ப மாற்றியமைத்தல் ஆகியவை எல்லாம் தொலைக்காட்சி மக்களுக்குப் பொழுது போக்குக் காட்சிகளையே காட்ட விரும்புவதை எண்பிக்கின்றன.

ஆனால் உண்மையான, ஓரளவு உண்மையான நிகழ்ச்சிகளைத் தொலைக் காட்சி ஏராளமாக காட்டி வருவதனால் விளையும் நன்மைகளை நாம் மறந்து விடக் கூடாது. இப் பொழுதுபோக்குச் சாதனம் அரசியல் நிகழ்ச்சி பற்றிய காட்சிகளைக் காட்டி வருவதால் முன்னர் அவற்றைப் பற்றி நினையாத இலட்சக் கணக்கான மக்கள் இப்போது அவற்றை அறிகின்றனர்.

திரைப்பட நடிகர் புகழ் பெறுவது போலவே வேட்பாளரும் தெரிந்தெடுக்கப்படலாம். ஆனால், தொலைக்காட்சி தோன்றுவதற்கு முன் காலத்தில் அரசியல் ஆர்வம் பெறாத மக்கள் இப்போது திரை நடிகரிடம் காட்டும் அதே ஆர்வத்தை அவரிடமும் காட்டுகின்றனர். வியட்நாம் போர் போன்ற செய்திப் படங்களை மிகுதியாகக் காட்டுவதனால் அதைப் பற்றிய கருத்து மக்களிடையே உருவாகியுள்ளதென முடிந்த முடிபாகக் கூற முடியவில்லையெனினும், ஓரளவு உறுதியாகக் கூற முடியும்.

இவை எல்லாம் தொலைக்காட்சி காட்டும் உண்மை நிகழ்ச்சி பற்றியவை ஆகும். ஆனால் உண்மை ஆட்களைக் கொண்டு நிகழ்த்தப்படும் அரங்கு நிகழ்ச்சிகளின் விளைவு யாது?

உண்மை நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுத் தயாரிக்க முடியாது. முற்றிலும் கற்பனை நிகழ்ச்சிகளைத் தயாரிக்க எழுத்தாளர்களும் நடிகர்களும் தேவை. இவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். மேலும் இவற்றைத் தயாரிக்க செலவும் அதிகம். ஏனெனில் இவற்றிற்கு நீண்ட ஒத்திகை, விலையுயர்ந்த அமைப்புகள், உடைகள் தேவை. ஆனால் காட்சி அறைப் பேட்டி போன்ற நிகழ்ச்சிகளில் பெரியார் ஒருவரைப் பேட்டிகாணல், இன்னும் இது போன்ற பல நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு, ஒத்திகை நேரம் போன்ற பலவற்றில் குறைந்த செலவில் தயாரிக்க முடியும்.

தொலைக்காட்சி எவ்வளவு மிகுதியாக நிகழ்ச்சிகளை அளிக்கின்றதோ அதற்

கேற்ப இந்நிகழ்ச்சிகளை அளிக்கப்பெற வேண்டும்.

பண்பாட்டுக் கோணத்திலிருந்து பார்த்தால் இவை தொலைக்காட்சியின் சிறந்த நிகழ்ச்சிகளாகா. இவை வெறும் பொழுதுபோக்குகள் தாம். இவற்றில் செய்திச் செறிவோ அறிவு முதிர்ச்சியோ இருப்பதில்லை. மேலும் இவை பெரும் பரிசுகள் பெறும் ஆவலை மக்களிடையே தூண்டுவதால், பேராசையை வளர்த்து எவ்வகையிலாவது புகழ் பெறும் ஆர்வத்தை வளர்க்கின்றன. ஆகவே இவை தீங்கற்ற பொழுது போக்கு ஆகா.

இது போலவே பல பேட்டி காட்சிகளிலும் ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து வருபவர்களை ஆய்வுக் கேள்விகள் பல கேட்டு பிறகு பொதுவான மிகச் சாதாரண உரையாடலில் பங்கு பெறச் செய்கின்றனர். இவற்றில் வெறுமையைத் தவிர வேறொன்றுமில்லை. இவற்றைப் பார்ப்போர் தமது உணர்வுநிலை மறந்து இவற்றைக் காணும்போது ஆன்மிக அல்லது அறிவுக் கருத்துகள் எதுவும் பெறுவதில்லை.

ஆயினும் இடைவேளைகளை நிரப்புவதற்காக எதிர்பார்க்கக் கூடிய சில நிகழ்ச்சிகளைத் திட்டமிடும் போது தொலைக்காட்சி சிலவேளை சமூகத்திற்குப் பயன்படக்கூடிய் நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது. எடுத்துக் காட்டாக, பிரிட்டனில் காட்சிஅறை நிகழ்ச்சியொன்றில் பொருட்காட்சிமனைப் பொருள்கள் சிலவற்றின் தோற்றம், தன்மை, காலம் ஆகியவற்றைப்பற்றி சில தொல்பொருளாய்வாளர்களைக் கேட்ட கேள்விகள் தொல்பொருளாய்வில் மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி, அண்மை இடங்களை ஆயத் தூண்டியதுமல்லாமல், தொல்பொருளாய்வுபற்றிய நூல்களின் விற்பனையையும் அதிகரித்தன.

பார்ப்போரின் கருத்திற்கேற்ப தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்று சிறந்ததா என அறிய வேண்டுமானால், அது நல்ல பொழுது போக்காக இருக்கிறதா சலிப்பூட்டுகிறதா எனப் பார்த்தால் போதும்.

சமூகத்தில் அல்லது பண்பாட்டில் ஏற்படும் நீண்ட கால விளைவை நடுநிலையுடன் எண்ணிப் பார்க்கும் ஒருவருக்கு, தொலைக்காட்சி நிகழ்ச்சி சமூகத்திற்கு நன்மை பயக்குமாயின் நல்லதாகவும், நாளடைவில் பண்பாட்டுத் தரத்தைத் தாழ்த்தவோ, அரசியல் நலனைக் கெடுக்கவோ செய்யுமாயின் தீயதாகவும் தோன்றும்.

முற்றிலும் திட்டமிட்டுத் தயாரிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், அதாவது கலைப்பண்புகளை வெளிப்படுத்தி, தாமே கலையாகவும் தோன்றும் நிகழ்ச்சிகளில் தரம், அதாவது நல்லவையா இல்லையா என்பது கலை இயல்பில் வெற்றியா தோல்வியா என்பதைப் பொறுத்ததாகும்.

காட்சிகளைப் பார்ப்போர் பெரும்பாலும் பொழுதுபோக்கிற்காகவே பார்க்கின்றனர். ஆகவே இத்தகைய நிகழ்ச்சிகளின் தரம் பார்ப்போருக்கு எளிதில் புலனாகின்றது. தொலைக் காட்சியில் மிகுதியான நிகழ்ச்சிகள் காட்டப்படுவதால் அவற்றை மதிப்பிடுவது அரிதாகின்றது. அற்ப அறைக்காட்சி நிகழ்ச்சி

Photo Charles W. Sanders © DPI, New York

இன்றைய குழந்தைகளை ''மூன்று பெற்றோர் வளர்க்கும் முதல் தலைமுறை'' எனக் கூறலாம். அறையின் மூலையிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டியே ''மூன்றாவது பெற்றோர்''. தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் பயிலும் (6 முதல் 16 வயது) குழந்தை வாரத்திற்கு 12 முதல் 24 மணி வரை தொலைக்காட்சி முன் செலவழிக்கிறதெனப் பல நாடுகளிலும் கணித்துள்ளனர். அமெரிக்காவில் பல வீடுகளில் 3 வயது குழந்தை நாள்தோறும் ''மின்ம குழந்தை தாதி'' யாகிய தொலைக்காட்சியின் முன் 45 நிமிடங்கள் செலவழிக்கிறதெனக் கணித்துள்ளனர்.

அமெரிக்க தொலைக்காட்சியின் "மாயக்" கல்விமுறை



மேலே : ''மாயத் தெரு'' குழுவினர் வானவூர்தி 'D' எழுதுவதை திரைப்படம் எடுக்கின்றனர். இது பாடம் தயாரிக்கும் பல முறைகளுள் ஒன்று. இம்முறையில் எளிதாகக் கற்கின்றனர். கீழே : மிட்டாய் கடையிலுள்ள பொம்மைகள் விலைகள் மூலம் எண்களைக் கற்றுக்கொடுக்கின்றனர்.

Photos USIS, Paris



Photo © Look Magazine, New York

உலகின் பல பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு 'மாயத் தெரு' எனும் பெயர் விளையாட்டையும் வீரச்செயலையும் மகிழ்ச்சியுடன் கல்வி கற்பதையும் குறிக்கின்றது. தொலைக்காட்சியின் வரலாற்றில் தலைசிறந்த குழந்தைக் காட்சி என அமெரிக்காவில் புகழ்பெற்ற இந்நிகழ்ச்சியை இவ்வாண்டு 50 நாடுகளில் குழந்தைகளும் பெரியோரும் பார்ப்பர். இவ்வேடிக்கை விளையாட்டு நிகழ்ச்சி அக்டோபர் 1969இல் அமெரிக்க தொலைக்காட்சியில் பரிசோதனைக்காகத் தொடங்கப்பெற்றது. இதற்கு கார்னகி நிதி நிறுவனம், ஃபோர்டு நிதி நிறுவனம், அமெரிக்க கல்வி அலுவலகம், இன்னும் பல நிறுவனங்கள் மொத்தம் 80 இலட்சம் டாலர் உதவி அளித்தன. 6 மாதங்களில் 190 நிலையங்கள் இந்நிகழ்ச்சியை இன்னும் பள்ளிக்குச் செல்லாத 60 இலட்சம் அமெரிக்க குழந்தைகளுக்குக் காட்டின. 'மாயத் தெரு' நிகழ்ச்சி குழந்தைகளின் பொது நிகழ்ச்சியினின்று வேறுபட்டது. முதலாவதாக பல நாடுகளில் காட்டப்படும் வன்முறைக் காட்சிகளுக்குப் பதிலாக, இது கூட்டுறவே சிக்கல்களைத் தீர்க்கும் வழியெனும் செய்தியை விளையாட்டாக வலியுறுத்துகின்றது. இரண்டாவது, சொல்லாற்றலையும் அறிவாற்றலையும் வியப்பார்வத்தையும் தூண்டுவதற்காக குழந்தைகளுக்கு எழுத்து, எண், எண்ணும் வகை ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கின்றது. இது பரந்த நிகழ்ச்சியாக இருந்த போதிலும், பாடங்களை எளிதாகவும் வேடிக்கையாகவும் கற்றுக் கொடுப்பதற்காக நன்கு திட்டமிடப் பெற்று அரிய தொலைக்காட்சி நுட்பங்களுடன் காட்டப்படுகின்றது. இதைப் பார்த்த குழந்தைகளை ஆய்ந்தவர்கள், எண்ணுவதிலும் அறிவைப் பயன்படுத்துவதிலும் இதைப் பார்த்த குழந்தைகள் பாராத குழந்தைகளைவிட $2\frac{1}{2}$ மடங்கு திறமை பெற்றுள்ளனரெனக் கண்டுள்ளனர். ''மாயத் தெரு''வை ''உண்மையான பன்னாட்டுத் தொலைக்காட்சி'' என்று கூறுகின்றனர். அதைக் தொடங்கிய நாடுகளில் எல்லாம் அது வெற்றிகரமாகவே நடை பெற்று வருகின்றது. இவ்வாண்டு அது 7 முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகளுக்கெனக் ''குறுந் தெரு'' நிகழ்ச்சி தொடங்குகிறது.

''மாயத் தெரு'' கற்பனைத் தெருச்சூழலில் (வலப் புறம்) அமைந்திருப்பதால் அப்பெயர் பெற்றுள்ளது. பழுப்புநிற வீடுகளும் கடைகளும் சந்துமுள்ள தெருவில் (மேலே வலப் புறம்) இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் நால்வர் வாழ்கின்றனர். (முன்னணியில்) கணவனும் மனைவியும், (இடப்புறம்) ஆசிரியரும் (படிக்கட்டில் மேல் துணியணிந்த) மிட்டாய் கடைக் காரரும் காணப்படுகின்றனர்.

அமெரிக்க, தொலைக் காட்சியில் ''வணிக'' விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. ''மாயத் தெரு'' நிகழ்ச்சியில் எழுத்துகளையும் எண்களையும் ''விற்கும்'' விளையாட்டு விளம்பரங்கள் 15 வினாடி காட்டப்பெறுகின்றன. இடப்புறம்: ('லஞ்ச் பாக்ஸை'க் குறிக்கும்) 'L' எனும் எழுத்தை இக் கேலிப்படம் கற்றுக்கொடுக்கிறது. இப்பாடம் எதிர் பாரா வகையில் வேடிக்கையாக முடிகிறது.

தொலைக்காட்சி : 20ஆம் நூற்றுண்டின் புதிய மக்கள் கலை

50 ஆண்டுகளில் இறவாத படைப்பாகக் கருதப் படக்கூடிய கலை நிகழ்ச்சியை விட மிக வேடிக்கையான பொழுது போக்காக அமையக்கூடும். இதனுல் தான் மதிப்பீடு அரிதாகின்றது.

கலைத்திறமை தொலைக்காட்சிக்கு மிக இன்றியமையாததாக இருக்கின்றது. தொலைக்காட்சி தோன்றுவதற்கு முன் ஆண்டுதோறும் நாடக அரங்குகளுக்கு ஏறக்குறைய 100 அல்லது 200 புதிய நாடகங்கள் தேவைப்பட்டன. இன்று மூன்று தொலைக்காட்சி வழிகளைக் கொண்ட ஒரு நாட்டில் ஒவ்வொரு நாள் மாலையிலும் 6 அல்லது அதற்கு அதிகமான நாடக நிகழ்ச்சிகள் (நாடகங்கள், தொடர்கதைகள், விகட நாடகங்கள்) காட்டப் பெறுகின்றன, இதனுல் ஆண்டுக்கு 2000 நாடகங்கள் தேவைப் படுகின்றன. இது மிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.

இக் குறுகிய, ஆகவே எளிதில் ஆராயக்கூடிய நாடகத் துறையில், மேலே கூறியது நடிர்களுக்கும் பொருந்தும்.

தொலைக்காட்சி தோன்றுவதற்கு முன்னுல், வெற்றிகரமாக நடைபெறும் நாடகமொன்றில் புதிய பாகத்தை நடிப்பவன், ஒரே அரங்கில் நூறு முறை அதே பாகத்தை நடித்து, பிறகு நாட்டின் பிற பகுதிகளுக்கும் சென்று நடிக்க வாய்ப்பிருந்தது.

தொலைக்காட்சியில் ஒரே நிகழ்ச்சியை நாட்டு மக்கள் அனைவரும் பார்த்து விடுகின்றனர். மேலும் குறுகிய காலத்தில் ஒரே நடிகரைப் பல பண்புருக்களில் பார்க்க மக்கள் விரும்புவதில்லை. ஆகவே மிகுதியான நடிகர்கள் தேவைப்படுகின்றனர்.

எத்தனை தலைசிறந்த நாடக ஆசிரியர்கள், நடிகர்கள் ஒரு நாட்டில் தோன்ற முடியும்? முழு தொலைக்காட்சிப் பணிக்கும் போதிய நிகழ்ச்சிகள் அளிக்க எத்தனை பேர் தேவை? திறமை வரையிறந்ததாக இருக்கமுடியாது. எனவே இங்கு தேவையான அளவுக்கேற்ற தரம் அமைவதில்லை.

இதனுல் சிறிய நாடுகளில் அல்லது மொழிப் பகுதிகளில் பெரும் பண்பாட்டு விளைவுகள் தோன்றுகின்றன. 30 அல்லது 40 இலட்சம் பேர் வாழும் நாடுகளில் தொலைக்காட்சிக்குத் தேவைப் படும் நிகழ்ச்சிகளில் ஒரு சிறுபகுதியைக் கூட தரக்கூடிய போதுமான நடிகர்களும் நாடக ஆசிரியர்களும் இல்லாமலிருக்கலாம்.

ஆகவே அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, ஒளிப்பதிவு செய்து அல்லது தலைப்புகள் தந்து இப்பிரச்சினையைத் தீர்க்கின்றனர். ஆனுல் இதனுல் நாளடைவில் அந்நாட்டின் பண்பாட்டுத் தனித்தன்மைக்கு ஊறு விளைகின்றது. தொலைக்காட்சி பெரும் பண்பாட்டு அலகுகளை உண்டு பண்ணுகிறது எனலாம்.

ஆங்கிலம், ஸ்பானிய மொழிகள் பேசப்படும் பெரிய மொழிப் பகுதிகளில் இதன் விளைவுகளை ஒரு சிலர் எதிர்த்த போதிலும், இப் பண்பாட்டு விளைவானது சமூக அமைப்பில் ஏற்படும் அடிப்படை மாற்றத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது.

சிறு நாடுகளின் பண்பாடுகளைப் பொறுத்த வரையில் நீண்ட கால விளைவுகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். இஃது ஆற்றல் மிகுந்த அண்டை நாடுகள் சூழ்ந்த சிறு நாடுகளுக்கு மிகப் பொருந்தும். எடுத்துக்காட்டாக, சுவிட்ஸர்லாந்தில் ஜெர்மானிய, பிரெஞ்சு, இத்தாலிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அம்மொழிகளைப் பேசும் பகுதிகளில் மக்கள் காணக் கூடும்.

வளர்ச்சியுற்ற ஐரோப்பிய நாடுகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்வதால் இத்தகைய விளைவுகள் ஏற்படுமெனில், தொலைக்காட்சியை அமைத்தல் புதிதாக விடுதலைபெற்ற நாடுகளுக்கு மதிப்பளிப்பதாகக் கருதப்படும் வளர்ச்சியுறும் நாடுகளில், தேவையான திறமைகளும் பயிற்சி பெற்ற நடிகரும் இல்லாமையால் இத்தகைய விளைவுகள் மிகுதியாகத் தோன்றி வருங்காலத்தில் கேட்டை விளைவிக்கும்,

இந் நாடுகளில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை நடத்துவோர் தமது பண்பாட்டுத் தனித் தன்மையை இழப்பதைத் தவிர்க்க, அல்லது குறைக்கவாவது, முயல வேண்டும். இதற்கு திறமையும் அறிவும் தேவை. இதற்கென அவர்கள் பல பகுதிகளிலிருந்து இறக்குமதியாகும் நிகழ்ச்சிகளைத் திறமையுடன் கலக்கலாம். மேலும் தம் நாட்டுப் பண்பாட்டைக் காட்டும் நிகழ்ச்சிகளை மிகுதியாகப் பயன்படுத்தலாம். இவை சாதாரணமான உள்நாட்டுக் கதையாகவும் கிராமியப் பாடலாகவும் இருக்கலாம். ஆனுல் இவை நாட்டின் மரபில் ஆழமாக ஊன்றியவை.

நாடகம், விகட நாடகம், இசை, நடனம் போன்ற காட்சிகளை—பெரிய பண்பாட்டுப் பகுதிகளிலாவது—மக்கள் விரும்புவதனுல் தீமை விளையுமென நினைப்பது தவறு. மக்கள் அவற்றை மிகுதியாக விரும்புவதனுல் திறமை வளரும். கலையின் வரலாற்றில் முழுவதும் மக்கள் விருப்பத்தை நிறைவேற்ற கலைஞர்களும் கைவினைஞர்களும் உழைத்தபோது தான் மிக உயர்ந்த கலைப்படைப்புகள் தோன்றின. ஹாலந்தில் செல்வர்கள் ஓவியங்களை விரும்பியதனுல் ஓவியர் கழகங்கள் பல தோன்றின. அப்போதுதான் ரெம்பிராண்டின் ஓவியங்கள் மலர்ந்தன. நாடகங்களை மக்கள் மிகுதியாக விரும்பிய காலத்தில்தான் ஷேக்ஸ்பியரும் மார்லோவும், கால்டரானுப் லோப் டி வேகாவும், ரசீனும் மாலியேரும் பண்பாட்டுச் சிகரங்களாக இலங்கினர்.

இது போலவே தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகள் தேவைப்படுவதாலே திறமைகள் வளர்கின்றன. இல்லையெனில் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இத்தனை திரைப்பட இயக்குநரும் புகைப்பட வல்லுநரும் தோன்றியிருக்க மாட்டார்கள்.

இதன் விளைவை திரைப்படம் போன்ற பிற கலைத்துறைகளிலும் காணலாம். திரைப்படத் தயாரிப்பாளர் பலர் தொலைக் காட்சியில்தான் தமது கலை வாழ்வைத் தொடங்கினர். வரலாற்றுக் கண் கொண்டு நோக்கின், திரைப்படமே நமது நூற்றுண்டின் தலைசிறந்த கலைத் துறைச் சாதனையாக விளங்கும். இதை இங்கு வலியுறுத்த வேண்டும்.

இது பிரிட்டன், ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு போன்ற நாடுகளில் நாடகத்துக்கும் பொருந்தும். தொலைக் காட்சிக்கு மிகுதியான நாடகங்கள் தேவைப்படுவது, பிரிட்டனில் நாடகத் திறமை வளர்ச்சியடைந்துள்ளதற்கு ஒரு காரணமாகும்.

இதற்கு மாருக, அமெரிக்காவில் தொலைக்காட்சி வணிக முறையில் நடைபெறுவதால் நாடக வளர்ச்சி நலிவுற்றுள்ளது. பார்ப்போரின் தொகைக் கேற்ப நாடகங்களைத் தயாரிப்பது அதிக செலவாகின்றது. விளம்பர வருவாய் பார்ப்போரின் தொகையைப் பொறுத்துள்ளது. பல ஐரோப்பிய நாடுகளில் தொலைக்காட்சியைப் பொதுப்பணியாகக் கருதுவதால் பார்ப்போரின் தொகையை மிக முக்கியமானதாகக் கருதுவதில்லை.

தொலைக்காட்சி நாடகங்களை மிகுதியாக மக்கள் விரும்புவதால் பல நன்மைகளும் தீமைகளும் விளைந்துள்ளன. தொடர்ச்சியாகக் காட்டப்படும் நாடகங்களில் அதே பண்போவியங்கள் திரும்பத் திரும்ப தோன்றுதல் தொலைக்காட்சியின் முக்கிய இயல்பு. இஃது இக்காலப் பண்பாட்டுப் பிரச்சினைகளில் முக்கியமானவற்றுள் ஒன்ருகும்.

முக்கியமான நாடுகளில் இத்தகைய நாடகங்களையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். அவற்றில் வரும் பண்போவியங்கள் புராண வீரர்கள் போலாகின்றனர். அவர்களின் பண்புகளும் வாழ்க்கையும் மிகைப்படுத்தப் படுகின்றன. அவர்களே இருபதாம் நூற்ருண்டு மனிதனின் கூட்டு உணர்வுக்கும், கூட்டு உணர்வின்மைக்கும் முன் மாதிரியாகின்றனர்.

தொலைக் காட்சிக்கு ஏராளமான நிகழ்ச்சிகள் தேவைப்படுவதன் தவிர்க்க முடியாத, இயல்பான விளைவே இந் நாடகங்கள். இவற்றில் அதே பண்போவியங்கள், அதே முக்கிய நடிகர், அதே வகையான கதை எல்லாம் திரும்பத் திரும்ப மாதங்களாக, ஆண்டுகளாகத் தோன்றி வருவதைக் காணலாம்.

இந் நாடகங்கள் தாம் இருபதாம் நூற்ருண்டின் வீர காவியங்கள். இவை, பண்டைய சமுதாயங்களில் குல வீரர்களின் ஒரே வகையான வீரச் சொல்களைப்பற்றிக் கவிஞர்களும் இசைவாணரும் புனைந்த கதைகள் போன்றவை. குறிப்பாக மேல்நாடுகளில் காட்டப்படும் நாடகங்கள் முற்றிலும் இவை போன்றே தோன்றுகின்றன.

மனிதன் பண்டைய குலச் சமுதாயத்தினின்று வெளியேறியபின், இப்போது தான் முதல் முறையாக பொதுமக்களின் விருப்பமானது பண்பாட்டு வளர்ச்சியில் அனைவரையும் பங்கு பெறச் செய்கிறது. பண்டை காலத்திற்குப்பின் ஒவ்வொரு சமுதாயத்திலும் சிறுபான்மையினரான செல்வரின் தேவைகளுக்கேற்ப பண்பாட்டுப் படைப்புகள் தோன்றின. இக்கால பொதுமக்கள் விருப்பமும், (மார்ஷல் மக்லுஹான் மின்ம கிராமப் படைப்பெனக் கூறும்) மின்ம செய்தி பரப்புக் கருவிகளின் வாயிலாக நாடுகளுக்கிடையேயுள்ள தூரம் மறைந்து

வருவதும் பண்டைய மனிதனின் பண்பாட்டு நிலையை ஓரளவு உருவாக்கி வருகின்றன.

முன்போல் இப்போதும் தலைவன் தனது குடிகள் அனைவரிடமும் பேசவும், அனைவரும் அவனை உடனே அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகிறது. சமுதாயம் முழுவதும் வீரர்களின் அருஞ் சாதனைகளில் பங்கு பெறுகின்றது. இவர்கள் செய்திச் சுருளில் தோன்றும் போர்க்கள வீரர்கள் அல்லது நமது சமூகத்தின் மந்திரவாதிகளான தொலைக் காட்சி வல்லுநர்கள் போன்ற உண்மை வீரர்களும், கற்பனைக் காட்சிகளில் தோன்றும் இக்கால வீரகாவிய மனிதருமாவர்.

இங்கு ஒப்புமை முற்றிலும் பொருத்தமாக உள்ளது. ஆனால் இது நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதா அல்லது அச்சுறுத்துவதாக இருக்கிறதா? இரண்டும் இல்லை என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் இதில் நல்லியல்புகளும் தீய இயல்புகளும் உள்ளன. பண்டைக்கால வீரர்களைப் பற்றிய புராணக் கதைகளிலிருந்து தானே ‘இலியட்’, ‘ஆடிஸி’ போன்ற இறவாத காவியங்கள் தோன்றின!

தொலைக்காட்சி தற்கால பொதுமக்கள் கலையாக இருக்கின்றது; அல்லது அவ்வாறு மாறவாவது கூடும். அது காட்டும் எண்ணற்ற காட்சிகள், பயன்படுத்தும் ஏராளமான மக்களின் தொகை, அதைப் பொது மக்கள் கலையாக மாற்றுகின்றன. ஏனெனில் அது பொது மக்களின் தேவைக்கேற்ப இயங்குகிறதேயொழிய ஒரு சில செல்வரின் விருப்பத்திற்கிணங்க இயங்கவில்லை.

பண்டைய மனிதனின் குலத்தையும் கிராமத்தையும் இன்றைய நிலைக்கு ஒப்பிடுவதில் தீமைகளும் உள்ளன. தற்கால மனிதன் பண்டைய நிலையில் இல்லை. அவனது உலகும் மின்மக் கிராமமாக இருக்கிறதேயன்றி உண்மை கிராமமாக இல்லை. தொலைக்காட்சியின் மூலமாக பொதுமக்களின் கருத்தை மாற்றமுடியும் என்பது தெளிவு. தனியார் துறைச் சமூகத்தில் வாணிகத்திற்கும் பொதுவுடமை நாடுகளில் அரசியலுக்கும் இதைப் பயன்படுத்தலாம். இஃது உண்மையிலே அச்சந்தருவதாக இருக்கின்றது. ஆயினும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் அளவானது இதற்கு எதிராகப் பாதுகாப்பளிக்கின்றது என நினைக்கிறேன். தொலைக்காட்சியின் வணிக நிகழ்ச்சிகள் விற்பனையை மிகுதியாக்கலாம். ஆயினும் நாளடைவில், மக்கள் அவற்றை ஊன்றிக் கவனிக்க மாட்டார்கள். குறைந்தது சொல் விளைவு ஒரு நாள் செயல்படத் தொடங்கி விடும்.

மின்மக் கிராமத்தில் பொழியும் நிகழ்ச்சிகள் பல தலைமுறைகளில், நூற்றுண்டுகளில் திறனாய்வு மிகுந்த சமுதாயத்தை, மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தன்னை மயக்க முயல்வோருக்கு இணங்காத சமூகத்தை உருவாக்கும் அத்தகைய எதிர்ப்பையும் திறனாய்வையும் வளர்ப்பது நீண்டகால சிந்தனைத் திறனுள்ளோர் உடனே செய்ய வேண்டிய அலுவலாகும்.

உண்மையான குடியாட்சி நிலவும் சமுதாயத்தில் செய்தி பரப்பும் கருவிகள்

(தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)



Photo Georges Bourdelon © Productions du Dragon, Paris

பாலை நிலத்தில் வானோக்கி நிற்கும் இந்த டெல்ஸ்டார் நிலையம் செயற்கைக் கோள் அஞ்சல் செய்யும் நிகழ்ச்சிகளை குவைத்தில் தொலைக்காட்சிகளில் காட்டுகிறது. இந்த எண்ணெய் வனத் தீவிலுள்ள 5,40,000 (1968) மக்களில் 1000 பேருக்கு 185 வீதம் தொலைக்காட்சிகள் உள்ளன. கனடாவில் ஆயிரம் பேருக்கு 294ம், பிரிட்டனில் 280ம், பிரான்சில் 185ம், இத்தாலியில் 158ம், அர்ஜண்டைனாவில் 106ம், கியூபாவில் 71ம், ஐக்கிய அராபிய குடியரசில் 13ம், சூடானில் ஒன்றும் இருப்பது இங்கு ஒப்பு நோக்கற்பாலது.



Photo Dominique Roger - Unesco

அர்ஜென்டீனாவின் முன்னாள் தேசிய கல்வி அமைச்சரான **அட்டிலியோ டெல்லோரோ மாய்னி** யுனெஸ்கோ பொது மாநாட்டின் தலைவர். 1970 நவம்பரில் மாநாட்டின் இறுதி அமர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டார். யுனெஸ்கோவின் 125 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பொது மாநாடு இந்த ஐ.நா. நிறுவனத்தின் முழு அதிகாரமுள்ள அவையாகும். இஃது ஈராண்டுகளுக்கு ஒருமுறை கூடி நிறுவனத்தின் திட்டங்களையும், வரவு செலவுத் திட்டத்தையும் ஆயும். இது நிருவாக குழுவின் உறுப்பினரையும் யுனெஸ்கோ செயலகப் பொது இயக்குநரையும் தேர்ந்தெடுக்கும்.

இந்திய கல்வி அமைச்சின் முன்னாள் நிரந்தர செயலாளரான **பிரேம் என். கிர்பால்** யுனெஸ்கோ நிருவாக குழுத் தலைவர். இக்குழுவில் 24 உறுப்பினர் உள்ளனர். இவர்கள் பொது மாநாட்டின் அமர்வுக் காலங்களுக் கிடையில் யுனெஸ்கோ திட்டங்களையும் வரவு செலவையும் மேற்பார்வையிடுவர். இஃது ஒவ்வோர் ஆண்டும் பலமுறை கூடும்.



Photo R. Lesage - Unesco

இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டில் யுனெஸ்கோ

இலையுதிர் காலத்தின் கடைசி இலைகள் தய்ங்கித் தயங்கி மறைவது போல், பாரிஸ் நகரின் குளிர் காற்றில் ஐந்து வாரங்களாகப் பறந்து கொண்டிருந்த 125 நாடுகளின் கொடிகள், யுனெஸ்கோவின் 16வது பொது மாநாட்டின் முடிவில், 1970 நவம்பர் 14ஆம் தேதியன்று கொடிக் கம்பங்களிலிருந்து இறக்கப்பட்டன.

ஆனால் அடுத்துவரும் மாரிக்காலத்துக்கு ஆயத்தம் செய்வதன் அறிகுறியாய், இலையுதிர்காலக் காற்று மரங்களிலிருந்து இலைகளைப் பறித்து உதிர்த்துக் கொண்டிருந்த நேரத்தில், யுனெஸ்கோ தலைமைச் செயலகத்தின் தாழ்வாரங்களிலும் மாநாட்டு அறைகளிலும், மாறுதலெனும் பலமான காற்று ஓங்கி வீசி ஒலித்துக் கொண்டிருந்தது. யுனெஸ்கோ, 25வயது நிறைவு பெற்றுக் கனிந்த நிலைமை அடைந்துள்ள போதிலும், அதன் நடவடிக்கைகளின் வேகம் வலுத்து வருகின்றது. எத்தனையோ பணிகள் காத்து நிற்கும் வேளையில், ஓய்வெடுத்து வாளாவிருக்க இது நேரமல்ல.

அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு, மிகவும் முற்போக்கான, புதுமையான, பல மாறுதல்களைப் புகுத்தவிருக்கும் யுனெஸ்கோவின் நீண்டகால உருவரைத் திட்டத்தை அறிமுகம் செய்து, யுனெஸ்கோவின் இயக்குநர்-தளபதி ரெனே மேகுவின் உரை மாறுதலின் அவசியத்தை வலியுறுத்துவதாய் அமைந்தது. யுனெஸ்கோ இப்பொழுது மேற்கொண்டுள்ள பொறுப்புக்களைப் பகுதி பகுதியாக இரண்டாண்டுக்கு ஒரு முறையாகத் திட்டம் வகுத்துச் செயல்படுத்த முடியாது. அப் பொறுப்புக்கள் விரிவானவை; அடிப்படையானவை; நீண்டகாலத் திட்டம் வகுப்பதன் அவசியத்தை அவை வலியுறுத்துகின்றன. உயர்ந்த குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டுமானால், தொடர்ந்து செயலாற்ற வேண்டும். அதே சமயத்தில் நிலைமைக்கேற்ப வளைந்து கொடுத்து முன்னேறிச் செல்ல வேண்டும். இந்த இரண்டு தேவைகளுக்கும் வசதி செய்துதரும் வகையில் தான், நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.



இந்தியரான மால்கம் எஸ். ஆதிசேஷையா யுனெஸ்கோ செயலகத்தில் 22 ஆண்டுகள் பணிபுரிந்து 1970இன் இறுதியில் யுனெஸ்கோ துணைப் பொது இயக்குநராக ஓய்வு பெற்றார். இப்போது சென்னை வளர்ச்சி ஆய்வு நிலைய இயக்குநர்.

ஹோவர்டு பிராபின்

பிரெஞ்சு நாட்டவரான ரெனே மாஹூ 1962 லிருந்து யுனெஸ்கோ பொது இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். இப்போது 2வது பதவிக் கால நடுப்பகுதியிலிருக்கின்றார். பொது இயக்குநரே செயலகத்தின் தலைமை நிருவாகி. அவரது பதவிக் காலம் 6 ஆண்டு. வரவு செலவுத் திட்டங்களை நிறைவேற்றுவதும், செயலக அலுவலரைத் தெரிந்தெடுத்து நிருவகிப்பதும் அவரது பொறுப்பு.

அமெரிக்கரான ஜான் இ. ஃபோப்ஸ் ஜனவரி 1, 1971இல் துணைப் பொது இயக்குநராகப் பதவியேற்றார். அவர் நிருவாக துணைப் பொது இயக்குநராக யுனெஸ்கோவில் 1964இல் சேர்வதற்கு முன், அமெரிக்க உதவித் திட்டங்களையும் பன்னாட்டு நிறுவனங்கள் பற்றிய அமெரிக்க கொள்கைகளையும் தீட்டி செயல்படுத்துவதில் பல ஆண்டுகள் ஈடுபட்டு வந்தார்.

Photos Dominique Roger - Unesco

"யுனெஸ்கோவின் பொறுப்பு, அடிப்படையில் கலாச்சாரப் பொறுப்பு என்று நான் உறுதியாக நம்புகிறேன். இப்பொழுது அது கல்வியையே மையமாகக் கொண்டிருக்கிறது. சில காலத்துக்குப் பின், அந் நிலை மாறிக் கல்வியிலிருந்து அறிவியலையும், அறிவியலிலிருந்து கலாச்சாரத்தையும் மையாமாகக் கொள்ளும் நிலை உருவாகுமென்றும், இந்த மாறுதலின் சமூக அறிவியல்களுக்கு முக்கியமான பங்கு இருக்குமென்றும், நான் திடமாக நம்புகின்றேன்," என்று மேகு எடுத்துக் காட்டினார்.

இரண்டாண்டுக்கு ஒரு முறை, பொது மாநாட்டில் 125 உறுப்பினர் நாடுகளால் வகுக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் வரவுசெலவுத் திட்டத்திலும், வேலைத் திட்டத்திலும், மாறுதல் காணும் இந்த ஆர்வம் மேலிட்டது. 71-72ஆம் ஆண்டுத் திட்டத்தில், 89.898,560 டாலர் மொத்தச் செலவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்ற இரண்டாண்டு ஒதுக்கீட்டைவிட, இது 16.1 விழுக்காடு அதிகம். இதற்கு மேலாக, யுனெஸ்கோவின் செயல்முறைத் திட்டங்களுக்காக, இரண்டாண்டுகளில், 69,422,000 டாலர் செலவு செய்ய, ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டம் நிதியுதவி செய்யும்.

அறிவியலை மையமாகக் கொண்டு மாறும் போக்கின் அறிகுறியாக, 'யுனிஸிஸ்ட்' என்ற நிறுவனத்தை அமைப்பதில் யுனெஸ்கோ, தீவிரமாக, முறையாகப் பங்கு கொண்டது. ஐக்கிய நாடுகளின் அறிவியல், தொழில் நுட்பத் தகவல் முறையை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கம். உலகெங்கும் பல நீண்டகால விளைவுகளை உருவாக்க வல்ல மகத்தான முயற்சி இது. அறிவியல், தொழில் நுட்ப, தகவல், ஓரிடத்தில் ஒன்று திரட்டப்படுவதால், வெவ்வேறு நாடுகள் தனித்தனியாக ஆராய்ச்சி நடத்தி, நேரத்தையும் முயற்சியையும் விரயமாக்கும் நிலை தவிர்க்கப்படும்.

தற்போதுள்ள நிலையில், மொழியிலும் ஆராய்ச்சி நியதிகளிலும் உள்ள பல்வேறு வேறுபாடுகளின் காரணமாக, அறிவியல் உண்மைகள், பெரும்பாலும் அந்தந்த நாடுகளுக்குள்ளாகவே சிறைபட்டுக் கிடக்கின்றன. முதல் முயற்சியாகக் கம்ப்யூட்டர் இயந்திரங்கள் பயன்படுத்தக் கூடிய பொதுவான இடுகுறிகளை, எல்லா நாடுகளுக்கும் மொழிகளுக்கும் பொதுவாக உருவாக்க, யுனிஸிஸ்ட் உத்தேசித்துள்ளது. ரோமன் முகட்டெழுத்துக்கள், 10 இலக்கங்கள், வேறு ஒன்பது குறிகள் ஆகியவை அடங்கிய 45 இடுகுறிகள் கொண்ட அடிப்படைத் தொகுதி ஒன்று முதற்படியாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்பணியில் மேலும் முன்னேற்றம் காணவும், இம்முறையில் தேர்ச்சி பெற, வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் அறிவியல் நிபுணர்களுக்கு வாய்ப்பளிக்கவும், இந்த ஆண்டு, யுனெஸ்கோவால், அனைத்து அரசு மாநாடு ஒன்று கூட்டப்படும்.

பல்வேறு நியதிகளையும் இறிகுறிகளையும், ஒருசீராக அளவுபடுத்திப் பொதுவான இறிகுறி இலக்கணம் வகுப்பதன் மூலம், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குத் தொலைபேசி மூலம் பேசுவது போலவே எளிதாக, ஒரு நாட்டின் அறிவியல் வளர்ச்சியுடன் மற்ற நாடுகள் தொடர்பு கொள்ளும் நிலையைக் காலப் போக்கில் உருவாக்க இயலுமென்று யுனிஸிஸ்ட் எதிர்பார்க்கின்றது.

இந்தப் பூமண்டலத்தில் உயிரினங்கள்

வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ள குறுகிய வாயு, நீர், நிலப் பரப்பை மாசுபடுத்தி, அதன் விளைவாகப் பல ஆபத்துக்களை உண்டாக்கும் பல்வேறு தீங்குகளைத் திறமையுடன் கட்டுப்படுத்துவதில், இன்று முக்கிய தடையாக உள்ளது, போதிய தகவல் இல்லாத குறையே.

காற்றை மேலும் களங்கப்படுத்துவதிலும், எண்ணெய்களை மேலும் மேலும் கடலில் கொட்டுவதிலும், பத்தாண்டுக்கு ஒரு முறை நாம் பயன்படுத்தும் ஆற்றலின் அளவு இரட்டிக்கச் செய்வதிலும், நமக்கு உள்ள ஆபத்துகளை எடுத்துக் காட்டுவதில் யுனெஸ்கோ முன்னணியில் இருந்துள்ளது. இந்த ஆபத்துக்களை நாம் பெருமளவு உணர்ந்துள்ளோம். ஆனால் அந்த ஆபத்தை உணர்வது ஒரு கட்டம். அதை சமாளிக்க உருவான நடவடிக்கைகள் மேற்கொள்வது, அடுத்த கட்டம். அவை இரண்டுக்கும் இடையே பெரும் இடைவெளி இன்று காணப்படுகிறது.

இதை மனத்திற் கொண்டு தான், பல்வேறு அரசுகளும் பங்கு கொள்ளும் நீண்டகாலத் திட்டமொன்றை 'மனிதனும் உயிர்க்களமும்' என்ற திட்டத்தை, யுனெஸ்கோ செயல்படுத்த முனைந்துள்ளது. 25 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட, அனைத்து நாட்டு ஒருமுகச் செயற்குழு ஒன்று, இந்த ஆண்டு வேலை செய்யத் தொடங்கும். 1972 தொடக்கத்தில், ஸ்டாக்ஹோமில், 'மனிதச் சூழ்நிலை' பற்றிய, யுனெஸ்கோ மாநாடு ஒன்று கூட்டப்படுவதற்குள், இத்திட்டம் வேகமாகச் செயல்படும் நிலையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களை அளவிடும் முறைகளைக் கண்டுபிடிப்பதும், ஒத்த நிலை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதும், இப்போதுள்ள கண்காணிப்பு முறைகள் பற்றிய தகவல்களைப் பரிவர்த்தனை செய்வதும், வருங்காலப் போக்குகளைத் துல்லியமாக மதிப்பிடும் முறைகளை வகுப்பதும், இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்திலும், உலக சுகாதார நிறுவனம், உணவு வேளாண்மை நிறுவனம் போன்ற சிறப்புக் குழுக்களுடனும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்துடனும், யுனெஸ்கோ நெருங்கிய ஒத்துழைப்பை மேற்கொள்ளும்.

அனைத்து நாட்டுக் கடல் கமிஷனுடன் ஒத்துழைத்து யுனெஸ்கோ ஆற்றும் பணியை விரிவாக்கிக் கடல் ஆராய்ச்சிக்கும் ஆய்வுக்கும் நீண்டகாலத்திட்டம் ஒன்று வகுக்கப்படும். தானியங்கும் மிதவைகளைக் கடலில் நிலைநாட்டி, உலகக் கண்காணிப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படும். ஒருங்கிணைந்த உலகக் கடல் நிலைய முறை என்றும், சுருக்கமாக ஆங்கிலத்தில் 'இகாஸ்' என்னும், இத்திட்டம் அழைக்கப்படும்.

கலாச்சாரம் பற்றிய நோக்கில் மாறுதல்கள் அண்மையில் சில ஆண்டுகளாகப் பெரிதும் பரவியுள்ளன. இவை யுனெஸ்கோவின் வரவு செலவுத் திட்டத்திலும் வேலைத்திட்டத்திலும் பிரதிபலிக்கின்றன. ''கலாச்சாரம், அடித்தளப் பிரளயக் குழப்பம் ஏற்படும் நேரத்தில், நாம் அந்த இறுதிச் சுவர்மேல் தான் சாய்ந்து ஆதரவு பெற முடியும்,'' என்று ஆங்கிலேயக் கட்டுரையாளர் ஜான் கூப்பர் பொவிஸ் கூறுகிறார். இந்த மதிப்பீட்டை யுனெஸ்கோவின் பொது மாநாடு முற்றிலும் ஏற்றுக் கொண்டது என்று கூற முடியாவிடிலும், யுனெஸ்கோவின் கொள்கை முழுவதற்கும் உயிர்நாடியாய் அமைந்துள்ளவை, கலாச்சாரமும் கலாச்சார வளர்ச்சியும் என்பதை மாநாடு தெளிவாக உணர்ந்துள்ளது என்பது புலனாயிற்று.

சென்ற ஆண்டு கோடையில் வெனிஸில், கலாச்சாரக் கொள்கைகள் பற்றிய அனைத்து அரசு மாநாட்டில் கூடி, 85 நாடுகளின் பிரதிநிதிகள் செய்த பரிந்துரைகளைப் பொது மாநாடு ஆர்வத்துடன் வலியுறுத்தியது.

உலகில் தொலைக்காட்சியிலும் நூல் மொழிபெயர்ப்

அண்மையில் ஏதாவது நல்ல நூல்கள் படித்தீர்களா? ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. 1968இல் 4,87,000 நூல்கள் வெளியாகின; அதாவது கடந்த 13ஆண்டுகளில் 70 சதவீத உயர்வு ஏற்பற்டுள்ளது.

நூல் வெளியீட்டிலும் தொலைக்காட்சியிலும் பெருக்கம் ஒருங்கே நிகழ்ந்துள்ளது. 1968இல் 2·2கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்யப் பெற்றதால் உலக மொத்தம் 23·6கோடியானது. இது 1953இல் இருந்ததைப்போல் 8 மடங்கு.

படிப்பதற்கும் பார்ப்பதற்கும் காலம் தேவைப்படுவதால், நாம் வாழுமிடத்திற்கேற்ப, திரைப்படம் பார்ப்பதைக் குறைக்கக் கூடும். 1868இல் பிரிட்டனில் ஒவ்வொருவரும் சராசரி 4 முறையே திரைப்படம் பார்த்தனர். இது 1967இல் பார்த்ததை விட ஒருமுறை குறைவு. 9,800 திரை அரங்குகளும் காரில் அமர்ந்தவாறே பார்க்கும் 3,600 அரங்குகளும் உள்ள அமெரிக்காவில் மக்கள் 1967இல் சராசரி 7 முறையும், பல்கேரியாவில் 1968இல் அதைப்போல் இரு மடங்கும், (உலகின் திரை அரங்குகளுள் பாதிக்கு மேலுள்ள) ரஷ்யாவில் 20 முறையும் சென்றனர்.

எல்லோரையும்விட மிகுதியாகத் திரைப்படம்பார்ப்பவர்கள் டைவன் மக்கள். 1967இல் சராசரி 66 முறை பார்த்தனர். 1968ஐப் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் வாரத்திற்கொருமுறை செல்வதும் தவறக் கூடாத படம் வந்தால் மிகுதியாகச் செல்வதும் தெரிந்திருக்கும்.

அண்மையில் வெளியான யுனெஸ்கோ ஆண்டுத் தகவல் 1969 (1) வெளியீட்டில் இவ் விவரங்கள் தரப்பெற்றுள்ளன. இவை உலகின் எழுச்சியையும் ஒரு சார்பான முன்னேற்றத்தையும் காட்டுகின்றன.

மிகுதியான நூல்கள், வானொலிப் பெட்டிகள், பல்கலைக் கழக மாணவர் தொகை, பண்பாட்டுச் செயல்களுக்குப் பயன்படும் தாளின் அளவு 1950இலிருந்து 3 மடங்காகியுள்ள நிலை எல்லாம் எழுச்சியூட்டுகின்றன.

ஆயினும் இப் பெருக்கத்தினால் நம்மில் 3,483,000,000 பேருள் சிறுபான்மையினரே பலன் பெறுகின்றனர் என்பது ஒரு சார்பான முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

நூல் வெளியீட்டைப் பொறுத்த வரையில் உலக மக்களுள் 13 சதவீதம் பேர் மட்டும் வாழும் ஐரோப்பா 44 சதவீத நூல்களை வெளியிடுகிறது; 10 சதவீம் பேர் வாழும் ஆஃப்ரிக்கா 1·6 சதவீத நூல்களும், 55·9 சதவீதம் பேர் வாழும் ஆசியா 20·5 சதவீத நூல்களும் வெளியிடுகின்றன. 1968இல் வட அமெரிக்கா 14·4 சதவீதம் வெளியிட்டது. இது 1967ஐ விட 2 சதவீம் குறை. ரஷ்யா 15·6 சதவீம் வெளியிட்டது. இஃது ஒரு சதவீதம் அதிகம். ஆயினும் 1960லிருந்த 20·9சதவீதத்தை இன்னும் அடையவில்லை.

ஆஃப்ரிக்காவில் திரைப்படம் பார்க்கும் வாய்ப்புகள் குறைவு. மொரீஷியஸிலும் சார்பரசுகளிலும் ஆண்டுக்கு 9முறையும் ஸ்பானில் சகாராவில் 8முறையும் மக்கள் திரைப்படம் பார்க்கின்றனர். ஆஃப்ரிக்கர்கள் ஆண்டுக்கொருமுறை திரைப்படம் பார்ப்பது அரிது. அல்ஜீரியாவில் மிகப் பெருந்தொகையான 322 திரை அரங்குகள் இருப்பினும் 1000 பேருக்கு 13 இடங்களே உள்ளன. மேல் வால்டாவில் 1000 பேருக்கு ஓரிடமும், மாலியிலும் புருண்டியிலும் இன்னும் குறைவாகவும் உள்ளன.

தினத்தாள்கள் வாசிப்பதிலும் இந்நிலையே காண்கிறோம். ஸ்வீடன் மக்கள் அவற்றை மிகுதியாக வாசிக்கின்றனர். அவற்றின் தொகை குறைந்திருப்பினும் வாங்குவோரின் தொகை 1000க்கு 492 பிரதிகளும் 1954இல் மிக உயர்ந்த தொகையாகிய 1000க்கு 573 இருந்த பிரிட்டனில் 463ம், கிழக்கு ஜெர்மனியில் 445ம், ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசில் 328ம், வாசிக்கப்படுகின்றன. நார்வே, நெதர்லாந்து, நியூஸீலத்து, ரஷ்யா ஆகியவற்றில் அத்தொகை 300-லிருந்து 400-க்குள்ளும், பல ஐரோப்பிய நாடுகளில் 200-லிருந்து 300-க்குள்ளும் இருக்கிறது.

பிற இடங்களில் வாங்குவோர் தொகை குறைவு. பாகிஸ்தானில் 1000க்கு 6 தினத்தாள்களும் இலங்கையில் 44ம் மலேசியாவில் 75ம் எனக் கணக்கிடப் பெற்றுள்ளன. ஆஃப்ரிக்கா மொரீஷியஸ், சார்பரசுகளில் எல்லாம் 1000க்கு 96; டாஹோமியில் 2000க்கு ஒன்றுக்கும் குறைவு. மாலியில்

(1) யுனெஸ்கோ ஆண்டுத் தகவல் வெளியீடு 1969, பாரிஸ்

கலாச்சாரம் மனிதனின் பிறப்புரிமை என்றால், கலாச்சாரத்தை எய்தக் குடிமக்களுக்கு வாய்ப்புகள் அளிக்கும் பொறுப்பு அரசைச் சாருமென்பதை வெனிஸ் மாநாடு ஏற்றுக் கொண்டது. இந்தப் பொறுப்பு யுனெஸ்கோவின் வேலைத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கலாச்சாரக் கொள்கைகள் பற்றி மண்டல மட்டத்தில் அரசுகள் மாநாடு ஐரோப்பாவில் அடுத்த ஆண்டு கூடுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. 1973இல் ஆசியாவிலும், 1975இல் ஆஃப்ரிக்காவிலும், மாநாடுகள் கூடவிருக்கின்றன. பொருளாதார, சமூகக் குறிக்கோள்களுடன், கலாச்சாரமும், ஒரு நாட்டு வளர்ச்சியின் அடிப்படை அம்சம் என்பதை வெனிஸ் மாநாடு வலியுறுத்தியது. கலாச்சார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல், சட்டங்கள் இயற்றுதல், கலாச்சாரப் புள்ளி விவரங்கள் திரட்டுதல், ஆகியவை பற்றி ஆய்வு நடத்துவதுடன், கலாசாரத்தை ஜனநாயகமயமாக்குவது பற்றியும், குறிப்பாக கலாச்சார வளர்ச்சிக்குப் பொதுத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது பற்றியும் ஆய்வுகள் செய்யப்படும். (யுனெஸ்கோ கூரியின் 1971 பிப்ரவரி சிறப்பு இதழைக் காண்க.)

‘அயல் நாட்டுப் பயண அனுமதிச் சீட்டு’ முறையைப் புகுத்தி, அச் சீட்டு இல்லாமல் கலாச்சார வளங்களைச் சட்டபூர்வமாய் ஏற்றுமதி செய்ய முடியாதென்று நிபந்தனை விதித்துச் சட்டவிரோதக் கலாச்சாரப் போக்குவரத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று நாடுகள் வகுத்துக்கொண்டிருந்த சம்பிரதாயத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம், நம் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்க, யுனெஸ்கோ பொது மாநாடு முக்கியமான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டது.

மேலும் பாகிஸ்தானில் மொகெஞ்சோதாரோ, ஐக்கிய அரபுக் குடியரசில் பிளே, இந்தோனேசியாவில் போரோபுதூர் ஆகிய இடங்களையும் தொல்கலைச் சின்னங்களையும் பாதுகாக்கச் சர்வதேசத் தொழில் நுட்ப ஒத்துழைப்பையும் உதவியையும் திரட்ட வேண்டியுள்ளது. மாநாடு நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே, போரோபுதூரை மீட்க ஒன்றரை மிலியன் டாலருக்கு மேலாக நிதியுதவி செய்வதாக ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு அறிவித்தது. நெதர்லாண்ட்ஸ் 150,000 டாலர் நன்கொடையுடன் முன்வந்தது. நிதி திரட்டும் இயக்கம் ஒன்றைத் தொடங்குவதாக ஜப்பான் வாக்களித்தது. இத்திட்டச் செலவுக்காக ஒரு மிலியன் டாலர் ஒதுக்கீடு செய்வதாக, இந்தோனேசிய அரசாங்கம் அறிவித்தது.

கட்டடங்களையும் தொல் பொருட் சின்னங்களையும் பாதுகாப்பது மட்டுமல்ல, யுனெஸ்கோவின் கலாச்சாரப் பணி. ‘ஆஃப்ரிக்கப் பொது வரலாறு’ ஒன்றைத் தயாரிக்கவும், ஆஃப்ரிக்க வாய்மொழி மரபுவளங்களைத் தொகுத்துப் பதிப்பிக்கவும், கலாச்சாரத்தை வளர்க்கவும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கல்வியை வளர்க்கவும் வகை செய்யும் முறையில் ஆஃப்ரிக்க மொழிகளில் முன்னேற்றம் காணவும் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

சமூக அறிவியல்கள் பற்றிப் பொது மாநாடு விவாதிக்கையில், யுனெஸ்கோவின் நடவடிக்கைகள் அனைத்திலுமே சமூக அறிவியல்களின் துணையில்லாமல் செயல்பட முயல்வது, மாலுமியில்லாமல் கப்பலைக் கரை சேர்க்க முயல்வதை ஒக்கும். திட்டங்களில் சமூக அறிவியல் வல்லுநரின் பங்கு, ‘அறிவுக் குழாய்களைப் பழுது பார்ப்பதோடு மட்டும் நிற்பதில்லை’ என்பதையும், திட்டங்களின் கொள்கைத் தெளிவு, செயல்திறமை, முழுவதையுமே அது வளர்க்கக் கூடியது என்பதையும், துணைத் தலைமை இயக்குநர் ரிச்சர்டு ஹோகார்ட், எடுத்துக் காட்டியுள்ளார்.

...பிலும் பெருக்கம் –யுனெஸ்கோ ஆண்டுத்தகவல் நூல் தரும் செய்தி

1000க்கு 0·6 முன் கணிப்பின்போது 44 நாடுகளில் தினத்தாள் இல்லை. இப்போது போட்ஸ்வானா ஒன்று தொடங்கியுள்ளது.

பொதுவாக வளர்ச்சியுறும் நாடுகள் யாவும் வளர்ச்சியுற்ற நாடுகள் குறைவாகவும் திரைப்படங்களைத் தயாரிக்கின்றன. ஆயினும் இங்கும் ஒரு சார்புள்ள நிலை காணப்படுகின்றது. 1968இல் இந்தியா, ஜப்பானைத் தவிர பிற நாடுகளைவிட மிகுதியாக—350—திரைப்படங்களைத் தயாரித்தது. இஃது அமெரிக்க 1950-லிருந்த நிலை போன்றுள்ளது. ஆயினும் இறுதி விவரப்படி இந்தியன் ஆண்டுக்கு சராசரி 4 முறைதான் திரைப்படம் பார்க்கின்றான்.

ஆண்டுத் தகவல் நூல் இன்றைய அமெரிக்க படத் தயாரிப்பு பற்றிய விவரங்களைத் தரவில்லை. 1967இல் 215 தயாரிக்கப் பெற்றன. 1968இல் இத்தாலியில் 254ம், கிரீஸில் 192ம்; ரஷ்யாவில் 163ம், ஹாங்காங்கில் 156ம் பாகிஸ்தானில் 133ம் தயாரிக்கப் பெற்றன. ஐக்கிய அராபியக் குடியரசும் (54) அல்ஜீரியாவுமே (3) நீளமான படமெடுக்கும் ஆஃப்ரிக்க நாடுகளெனக் குறிப்பிடபட்டுள்ளன.

பள்ளியில் சேரும் மாணவரின் தொகை ஊக்கமளிப்பதாக இருக்கின்றது. 1967இல் கல்வி நிலை மூன்றிலும் சேர்ந்து 1·5 கோடி மாணவர் அதிகமாகச் சேர்ந்தனர். இதனால் மொத்த தொகை 45 கோடியாகச் உயர்ந்தது. இவர்களுள் 32 கோடி முதல் நிலையிலும் 10கோடி 2ஆவது நிலையிலும் 2·1 முதல் 2·2 கோடிவரை 3ஆம் நிலையிலும் இருந்தனர்.

ஆண்டுத் தகவல் நூல் முதல் முறையாக பற்பல நாட்டு முறைகளுக்கும் வெவ்வேறு நாடுகளில் மாணவரின் வயதுக்கு மேற்ப விவரங்களைத் தந்துள்ளது. இதனால் நாடுகளுக்கிடையேயுள்ள நிலையை ஒப்பிட முடிகிறது. பள்ளியில் சேரும் பெண்களின் தொகை ஒப்பிடுவோம். 20 கோடியாக இருக்கும்போதே பெண்கள் உலகின் மொத்த தொகையில் பாதிக்கு குறைவாக இருக்கின்றனர். ஆயினும் வளர்ச்சியுறும் நாடுகளில் பின்தங்கிய நிலையிலுள்ளனர். வட, தென் அமெரிக்காவில் பள்ளியில் சேரும் 10·8கோடியில் 5·2கோடி பெண்கள்; ஆசியாவில் 16·4கோடியில் 6·2கோடிதான். ஆஃப்ரிக்காவில் பெண்கள் மிகுதியாகப் பள்ளியில் சேர்ந்தாலும் சதவீதம் ஆசியாவைப்போல் 38 ஆகவே இருக்கின்றது.

வானொலிப் பெட்டி வாங்குவதிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. உலகிலுள்ள 67·4 கோடி பெட்டிகளில் பாதி வட அமெரிக்காவிலிருந்த போதிலும் அதைப் பயன்படுத்துவோர் தொகை எங்கும் அதிகரித்துள்ளது. மொராக்கோவில் 1950இல் 1000க்கு 15ஆக இருந்தது 1968இல் 57ஆகவும் கீன்யாவில் 49ஆகவும், காபனில் 104ஆகவும், கோசலனில் 204ஆகவும் உயர்ந்தது. சுதந்திர ஆஃப்ரிக்க நாட்டின் மிகக் குறைந்த தொகைகூட மாலியிலும் ருவாண்டாவிலும் 1000க்கு 9; 20 ஆண்டுகளுக்கு முன் பல நாடுகளிலிருந்ததைவிட மிக அதிகம். தென் அமெரிக்காவில் மிகக் குறைந்தது பிரெஞ்சு கயானாவில் 82 மிக உயர்ந்தது அர்ஜெண்டீனாவிலும் உருகுவேயிலும் 381. ஆசியாவில் பாஹ்ரீனில் 1000க்கு 1075 (ஜப்பானைப்போல் 4 மடங்கு) முதல் பூட்டானில் 4வரை வேறுபட்டுள்ளது.

அறிவியல், தொழில் நுட்ப பகுதிகள் மனித வளத்தை நாடுகள் எவ்வாறு பயன்படுத்துகின்றன எனக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆராய்ச்சிக்கென செலவிடப்படும் தொகையை நாட்டின் மொத்த ஆக்கத்துடன் ஒப்பிட்டால் நாடுகள் முன்னேற்றமடைந்துள்ளது தெரிகின்றது. 1967இல் அமெரிக்கா தனது மொத்த ஆக்கத்தில் 3 சதவீதமும் வளர்ச்சியுற்ற பிறநாடுகள் 1 அல்லது 2 சதவீதமும் செலவழித்தன. வளர்ச்சியிலும் ஆஃப்ரிக்க, ஆசிய இலத்தீன் அமெரிக்க நாடுகள் 0·5 சதவீதத்துக்கு குறைவாகவும் செலவழித்தன

ஆயினும் வருங்காலத்தில் நிலைமாறும் என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் இளம் நாடுகள் பல ஆராய்ச்சிக்கென 2 அல்லது 3 மடங்கு அதிகமாகச் செலவிட்டுள்ளன. ஆயினும் அவற்றின் வளர்ச்சித் தேவைகளைப் பார்க்கும்போது இது மிகக் குறைவாகவே தோன்றுகிறது.

புதிய பகுதியொன்று வெவ்வேறு வகையான பண்பாட்டுச் செலவுகள் பற்றி விளக்குகிறது. தினத்தாள் ஒன்று தொடங்கிய போட்ஸ்வானா பத்திரிகைகளுக்கென மிகுதியாகச் செலவிடுகின்றது. ஆஸ்திரேலியா, டென்மார்க், ஹங்கேரி, நைஜர், நார்வே, போலந்து, ரஷ்யா ஆகியவற்றில் வானொலியும் தொலைக் காட்சியும் முதலிடம் பெறுகின்றன, நுண்கலைகள் எங்கும் சிறப்பிடம் பெறுவதில்லை. செக்கோஸ்லாவாகியாவிலும் ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசிலும் மட்டும் நடிப்புத்துறை முதலிடம் பெற்றுள்ளது.

மனிதனின் உரிமைகளையும் உயர்தகுதியையும் உணர்தல்

மனித நல உரிமைகளை வளர்ப்பதிலும் சமாதானத்தைப் போற்றுவதிலும். சமூக அறிவியல் திட்டம் தலையாய கவனம் செலுத்தும். மக்கள் தொகைப் பிரச்சினைகளும் சூழ்நிலைப்பிரச்சினைகளும் ஆராயப்படும். மனிதவியல் சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிப் போக்குகள் பரிசீலிக்கப்பட்டு, அந்த மதிப்பீடு வெளியிடப்படும்.

அறிவியல், கலாச்சாரம், ஆகியவற்றின்படி மேலும் மேலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற போதிலும், யுனெஸ்கோவின் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி கல்விக்கே தொடர்ந்து செலவு செய்யப்பட்டு வருகிறது. உலக மக்கள் தொகை உயர்ந்து வருவதாலும், இளைஞர்களின் எண்ணிக்கை பெருகி வருவதாலும், இது குறித்து வியப்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக. மேற்கு சமோவாவில், மக்கள் தொகையில் 51 விழுக்காட்டினர் பள்ளி செல்லும் வயதில் உள்ளனர். பார்படோஸ், நாட்டின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 20 விழுக்காடு அளவுக்குக் கல்விக்கு மட்டுமே செலவு செய்து வருகிறது.

மேலும் மேலும் கல்விக்கான வாய்ப்புக்களைப் பெருக்குவது மட்டுமல்ல, இன்றையத் தேவை, என்பதை வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் அனுபவம் நமக்கு உணர்த்துகிறது. தெஹோமே நாட்டில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முதல் வகுப்பில் சேர்ந்த குழந்தைகளில் ஆயிரத்தில் ஏழு பேர் தான், முழுப் பள்ளிப் படிப்பான பதின்மூன்று ஆண்டுகளும் தொடர்ந்து படிக்கக் கூடும். பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 37,000 குழந்தைகளில், பாதிப் பேர் கூட, தொடக்கப் பள்ளிப் படிப்பை முடிக்க மாட்டார்கள். ஸாம்பியா நாட்டுப் பிரச்சினை, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் பலவற்றையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையே. தொடக்கப்பள்ளிப் படிப்பை முடித்து, 1969இல் வெளியே வந்தவர்களில் 50,000 பேருக்கு நடுநிலைப் பள்ளிகளில் இடம் கிடைக்கவில்லை. அவர்களில் மிகச் சிலரைத் தவிர, மற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. கல்விப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுவிட்டால், நிச்சயமாக நல்ல வேலை கிடைக்கும் என்ற நிலை, ஸாம்பியாவிலும் மற்ற ஆஃப்ரிக்க நாடுகளிலும் கடந்து விட்டது.

அண்மையில் சில ஆண்டுகளாகவும், குறிப்பாக, சர்வதேசக்கல்வி ஆண்டான 1970-வும், கல்வியின் குறிக்கோள்கள், முறைகள், பற்றிய மறு ஆய்வில் யுனெஸ்கோ ஈடுபட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி, வாழ்நாள் முழுவதும் தொடரும் கல்வி ஆகியவற்றில் சிறப்பான கவனம் செலுத்தி, இந்த மறுஆய்வு தொடர்ந்து நடக்கும். கல்வி பெறப் பெண்களுக்கான வாய்ப்புக்கள், ஊனமுற்றோரின் தனித் தேவைகள், பற்றிய பிரச்சினைகளிலும் குறிப்பாகக் கவனம் செலுத்தப்படும்.

1971இல் ஆசியாவிலும், 1972இல் இலத்தீன் அமெரிக்காவிலும், 1973இல் ஐரோப்பாவிலும் நடைபெறவிருக்கும் மண்டல மாநாடுகளில் கல்வி அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் தனித்தனியாகக் கல்வி அமைப்புகளை வளர்க்கத் திட்டம் வகுக்கப்பலநாட்டு நிபுணர்கள் கொண்ட ஒரு கமிஷன் நிறுவப்பட்டுள்ளது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்குத் திட்டம் வகுப்பதில் உதவக்கூடிய ஓர் அறிக்கை இந்த ஆண்டு கோடைக் காலத்திற்குள் தயாராகும். இவ்வாண்டு வேலையைத் தொடங்கும் மற்றொரு கமிஷன், உள்நாட்டில் தேவைப்படும் தேர்ச்சிகளை வளர்க்க, வெளிநாடுகளில் பயிற்சிக்கான வாய்ப்புக்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது பற்றி வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ஆலோசனை கூறும்.

இதுவரை மேற்கொள்ளப்படாத புது முயற்சியாக பாடத்திட்டங்களை வகுப்பதில் உறுப்பினர் நாடுகளுக்கு உதவ, நிபுணர் குழுக்களைக் குறுகிய காலத்திற்கு உடனடியாக அனுப்ப யுனெஸ்கோ முடிவு செய்துள்ளது. இன்றைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, வேகமாக ஏற்பட்டு வரும் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப, பள்ளிப் பாடத் திட்டத்தை எப்படித் திருத்தி அமைப்பது என்பது. சில நாடுகளில் பாடத் திட்டங்கள் இன்றுள்ள நிலைக்கு அடியோடு தொடர்ப்ற்றவையாகி விட்டன. வேறு சில நாடுகளில், குறிப்பாக, முன்பு காலனி நாடுகளாக இருந்தவற்றில், அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாடத் திட்டங்கள் எப்பொழுதுமே நாட்டு நிலைக்கு ஏற்பனவாக இருந்ததில்லை. மிக அண்மைக் காலம் வரை, முன்னேற விரும்பிய ஆஃப்ரிக்க மாணவர்கள், 19வது நூற்றாண்டு இங்கிலாந்தில் உயர் நிலை, நடுத்தர வர்க்கத்தினர் வாழ்க்கையை ஜேன் ஆர்டன் சித்திரித்திருந்ததை படிக்குமாறு கட்டாயப்படுத்தப் பட்டனர். ஆனால் அவர்கள் சொந்த நாட்டுச் சமூகப் பிரச்சினைகளோ அடியோடு புறக்கணிக்கப்பட்டன. வேளாண்மையைப் பெரிதும் நம்பியிருந்த நாடுகளில், பள்ளிப் பாடத்திட்டத்தில், வேளாண்மைப் பிரச்சினைகள் அறவே ஒதுக்கப்பட்டிருந்த அதே நேரத்தில், ஐரோப்பிய இயந்திரத்தொழில் பிரச்சினைகளை ஆராயப் பல மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

பல ஆண்டுகளாக உறுதியான நடவடிக்கைகள் பல மேற் கொள்ளப்பட்ட பின்பும், இல்லாமை, உலகின் மிகச் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றாக இன்றும் காணப்படுகிறது. மொத்த மக்கள் தொகையில் கல்வியறிவு பெறாதவரின் விழுக்காடு குறைந்துள்ள போதிலும், கல்லாதவரின் மொத்த எண்ணிக்கை பெருகியேயுள்ளது.

ஈக்குவடார் முதல் தான்ஸானியா வரையுள்ள பல நாடுகளைத் தழுவும் 12 பெரிய திட்டங்களின் கீழ் யுனெஸ்கோவின் பரீட்சார்த்த உலகக் கல்வியறிவுத் திட்டம் தொடர்ந்து செயல்படும். எடுத்துக் காட்டாக இந்தியாவில் உள்ள 11.5 கோடிக் கல்லாதாரின் எண்ணிக்கையை அடுத்த பத்து ஆண்டுகளில் பாதியாகக் குறைக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பொருளாதார சமூக வளர்ச்சியில் இளைஞர் பங்கு கொள்ள ஊக்குவிக்கும் திட்டங்கள் பலவும், உலகக் கல்வியறிவுத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

இடைவிடாது நடக்க விருக்கும் இப்போராட்டத்தில், நவீன தொழில் நுட்பச் சாதனங்களும் பயன்படுத்தப்படும். கல்வியில் கம்ப்யூட்டர் இயந்திரங்களை எந்தெந்த வழிகளில் பயன்படுத்த முடியும் என்பதை யுனெஸ்கோ நிபுணர்கள் இவ்வாண்டு பரிசீலிப்பார்கள். டெலிவிஷன் போன்ற சாதனங்களைக் கல்வியில் பயன்படுத்தி, பிரெஞ்சு மொழி பேசும் ஆஃப்ரிக்காபோல் கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட பகுதிகள், மண்டலத் திட்டங்களைச் செயல் படுத்திக் கல்வியின் செலவு விகிதத்தைக் குறைப்பது பற்றியும் நீண்டகாலமாக ஆராய்ச்சிகள் நடக்கும். ஆர்ஜென்டினா, பொலிவியா, சிலி, கொலம்பியா, ஈக்குவடார், பராகுவே, பெரு, வெனிஸுலா ஆகிய நாடுகளுக்கு மண்டலத் துணைக்கோள் கல்வி முறையை வகுப்பது பற்றி இருபது நிபுணர்கள், சாந்தியோகாவைத் தலைமை நிலையமாகக் கொண்டு 800,000 டாலர் செலவில் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றில் முனைந்துள்ளனர். கல்வியில் பொதுச் செய்திச் சாதனங்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்து, ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்துத் தேசியத் திட்டங்களுக்குத் துணை செய்ய, நிபுணர் குழுக்களைக் குறுகிய காலத்திற்கு அனுப்பும் முயற்சிபற்றி ஆராய்ச்சி நடத்தும், கல்விச் சாதன இலத்தீன் அமெரிக்க நிலையத்துக்கு உதவி செய்ய 200,000 டாலர் செலவு செய்யப்பட்டு வருகிறது.

கல்வித் திட்டங்களில் பொதுத் தொடர்புச் சாதனங்களைப் பெருமளவில் பயன்படுத்த வகுக்கப் பட்டுள்ள திட்டம், பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, ஒருமுகமான நடவடிக்கை எடுக்க யுனெஸ்கோ முற்பட்டுள்ளதற்கு ஓர் அறிகுறியாகும். பத்திரிகையாளருக்கும் டெலிவிஷன் ஊழியர்களுக்கும் பயிற்சி தருவது, புத்தக வெளியீடு, விநியோகம் ஆகியவற்றிற்கு ஊக்கமளிப்பது, ஆகிய முக்கியப் பொறுப்புக்களை மேற்கொள்வதோடு யுனெஸ்கோவின் பொதுத் தொடர்புத் துறை இப்பொழுது திருப்தி அடைவதில்லை. இன்று அமெரிக்கக் குழந்தைகள், தங்கள் புத்தகங்களோடு செலவு செய்யும் நேரத்தை விட அதிக நேரத்தை டெலிவிஷன் பார்ப்பதில் செலவு செய்கின்றனர். ஆகவே அவர்கள் கல்வியறிவைப் பெருக்குவதில் டெலிவிஷன் ஏற்கெனவே மிக முக்கிய பங்கு கொண்டுள்ளது. இத் தொடர்பை உணர்ந்து இதைப் பயன்படுத்திக் கொள்வது, யுனெஸ்கோவின் பொதுத் தொடர்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

வல்லமை மிக்க இப்புதிய சாதனங்களில் பதுங்கி நிற்கும் ஆபத்துகளையும், பொதுமாநாடு உணரத் தவறவில்லை. ஒரு சில நாடுகள், தங்கள் கலாச்சார, கல்வி, அரசியல், தகுதிகளையும் நெறிகளையும் உலகத்தின் பெரும்பகுதி மீது திணித்துச் சுமத்தக்கூடிய நிலை வெகு விரைவில் உருவாகும். அந்த நிலையில் எழும் ஆபத்துகளைத் தடுக்கும் பொருட்டு தொலைச் செய்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான ஆபத்துகளைத் தடுக்கும்பொருட்டு, ஒருசில அடிப்படை நெறி நியதிகள் அடங்கிய சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

கல்வியில் நவீன முற்போக்கான சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஆராய்வதில் முனைந்துள்ள அதே நேரத்தில், பொதுத்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

வளர்ச்சியுறும் உலகின் உயிர்ப்பாதைகள்

டபிள்யூ. எச். ஓவன்ஸ்

Photo © Attilio Gaudio, Paris

அல்ஜீரிய சகாராவின் வறண்ட மணல்வெளியில் பழைய ஒட்டகப் பாதையின் ஓரமாக சரளைக்கல் நெடுஞ்சாலைகள் வளைந்து செல்கின்றன. மேலே: அல்ஜியர்ஸுக்கு 500 கி. மீ. தெற்கே ஊஆர்க்லா, கார்டாயா, எல் கொலியாவை இணைக்கும் புதிய பாதைகளின் சந்திப்பு.

உலக மக்களில் பெரும் பகுதியினர் பழங்காலத்துப் போக்குவரத்து வசதிகளையே உடைய கிராமங்களில் வாழ்கிறார்கள். தற்காலப் போக்குவரத்து வசதி இன்மையால் மற்றவர்களுடன் அவர்களுக்கு வாணிகத் தொடர்பும் சமூகத் தொடர்பும் இல்லாமல் போகின்றன. மோட்டார் போக்குவரத்துக்கு ஏற்ற சாலைகள் முக்கிய நகரங்களையும் பேரூர்களையும் தாம் இணைக்கின்றன. இந்தச் சாலைகள் கூட மழைக் காலத்தில் பயன்படுவதில்லை.

இப்போது, ஆசியா, ஆஃப்ரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களைச் சேர்ந்த முன்னேறி வரும் நாடுகளில், கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரமும், பொருளியல் நிலையும் உயர்வதற்காகச் சாலைகள் அமைத்துப் பேணிக் காக்கும் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்நாடுகளிடம் போதிய பண வசதி இன்மையால், உலக பாங்கும், அதனோடு ஒட்டிய அனைத்துலக அபிவிருத்திக் கழகம், அனைத்துலக பாங்கு, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்ட நிதி ஆகியவையும் உதவுகின்றன.

முன்னாள்களில், பெருமளவிலான சாலைத் திட்டங்களுக்கு மட்டுமே பண உதவி அளிக்கப்பட்டு வந்தது. இப்போது, பெரும்பான்மையான மக்களுக்குப் பயன்படக் கூடிய கிராமங்களை இணைக்கும் சாலைகள் போடவும், விளை நிலங்களிலிருந்து சரக்குகளைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான சாலைகள் அமைக்கவும் மேலும் மேலும் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகின்றது.

அனைத்துலக வகைப் பாங்குகள் அண்மையில் கிராமப்புறச் சாலை அமைப்புக்கென்று கடன்கள் வழங்கி வருகின்றன. எடுத்துக்காட்டாக, அனைத்துலக அமெரிக்க முன்னேற்றப் பாங்கு என்பது, மெக்ஸிகோ நாட்டில் 1,500 மைல் நீள

டபிள்யு. எச். ஓவன்ஸ் பிரிட்டிஷ் பத்திரிகை எழுத்தாளர். பொருளாதார வளர்ச்சி, இயற்கை வள ஆய்வு ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

நெடுஞ்சாலைகள் அமைத்தல்

அமெரிக்கக் கண்ட நெடுஞ்சாலை, ஆப்பிரிக்கக் கண்ட குறுக்கு நெடுஞ்சாலை போன்ற 3 பெரும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இவற்றினால் வளர்ச்சியுறும் நாடுகளில் சமூகத் தொடர்பும் வாணிப வாய்ப்புகளும் பெருகும். அலாஸ்காவிலுள்ள ஃபேர்பாங்க்ஸிலிருந்து அர்ஜெண்டினாவின் தென் முனையிலுள்ள டியரா டி ப்யூகோ வரை சென்று இரு கண்டங்களையும் இணைக்கும் அமெரிக்கக் கண்ட நெடுஞ்சாலை இப்போது முற்றுப் பெற்றுவிட்டது. எதிரே : சிலியில் இந் நெடுஞ்சாலை ஆற்றைக் கடந்து செல்லும் பாலம். கீழே : ஆப்கானிஸ்தானில் காபூலில் கிளைப்பாதை அமைக்கின்றனர். இங்கு ஆசிய நெடுஞ்சாலையில் ஒரு பகுதி செல்கிறது. உலக கிராமங்களை இந்நெடுஞ் சாலைகளுடன் இணைக்கும் கிளைப்பாதைகள் வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய பகுதியாகும். வலப்புறம் : நைஜீரியாவில் லாகோஸிலுள்ள பேருந்து நிலையம். இது கிராம, நகர வாணிகத்தை இணைக்கும் நிலையம்.



Photo Marc Riboud - Magnum, New York

Photo © Paul Almasy, Paris



Photo © Paul Almasy, Paris

3,500 அடி பாஸ்போரஸ் பாலம்—ஐரோப்பிய, ஆசிய சாலைகளை இணைக்கும் வருங்காலப் பிணைப்பு

முள்ள கிராமப்புறச் சாலைகள் அமைத்து, நூற்றுக்கணக்கான கிராமங்களை தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதற்குத் தற்சமயம் உதவி வருவதைக் குறிப்பிடலாம். மெக்ஸிகோ அரசு செய்த மதிப்பீட்டின்படி வளமிக்க பகுதிகளில் அமைக்கப்படும் ஒவ்வொரு மைல் நீளச் சாலையும் 500 பேருக்குப் பண்ணைவேலை வாய்ப்பளிக்கும் என்று தெரிகிறது. தவிர, பொருளியல் நலன்களும் சமூக நன்மைகளும் பல உண்டு.

இந்தியாவில், கிராமப்புறச் சாலை அமைப்பு, விரிவான நெடுஞ்சாலைத் திட்டத்தின் முக்கிய பாகமாகக் கருதப்படுகிறது. கால் நூற்ருண்டுக்கு முன்பு, முதல் சாலை அபிவிருத்தித் திட்டம் (நாகபுரித் திட்டம்) உருவானதிலிருந்து இந்தியாவின் சாலைப் போக்குவரத்து நிரம்பவும் கணிசமான அளவில் முன்னேறி யுள்ளது. நாகபுரித் திட்டத்தின் குறியளவை முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் விஞ்சியாகி விட்டது. அப்படியிருந்தும், முக்கிய பாதைகளுக்கு இன்னும் இணைப்புச் சாலைகள் அமையவில்லை. மிகப் பரந்த இந்திய நிலப்பரப்பில், நவீன சாலைகள் அமைப்பதென்பது மாபெரும் காரியமே.

இந்தியாவின் இருபதாண்டு (1961-81) சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மொத்த சாலை நீளத்தை முன்னிருந்ததில் மூன்றிலொரு பங்கு பெருக்கி, 6,57,000 மைல் ஆக்குவதாயுள்ளது. முக்கியமான கிராமங்களையெல்லாம், ஆங்காங்குள்ள விற்பனைக் கேந்திரங்கள் அல்லது மாவட்டத் தலைநகர்கள் இவற்றுடன் இணைத்து வேளாண்மைப் பொருள்களை விரைவாகப் பல இடங்களுக்குக் கொண்டு செல்ல வசதி உண்டாக்குவது இன்றைய இத்திட்டத்தின் நோக்கம். தெளிவாகச் சொன்னால், முன்னேற்றமடைந்த பகுதிகளிலும், வேளாண்மை மிக்க பகுதிகளிலும் விளங்கும் ஒவ்வொரு கிராமமும், கப்பிபோட்ட சாலையிலிருந்து நான்கு மைலுக்குள்ளும் வர வேண்டும் என்பதும், பாதி முன்னேறியுள்ள பகுதிக் கிராமம் ஒவ்வொன்றும் கப்பிச்சாலையிலிருந்து எட்டு மைலுக்குள்ளும், மற்றெந்தச் சாலையிலிருந்தும் மூன்று மைலுக்குள்ளும் வர வேண்டும் என்பதும், முன்னேற்றமும் விளைச்சலும் இல்லாப் பகுதிக் கிராமம் ஒவ்வொன்றும் கப்பிச் சாலையிலிருந்து பன்னிரண்டு மைலுக்குள்ளும்; மற்றெந்தச் சாலையிலிருந்தும் ஐந்து மைலுக்குள்ளும் வருதல் வேண்டும் என்பதும் குறிக்கோள்கள்.

இவ்வகையில், சமுதாய அபிவிருத்தித் திட்டம் இந்திய நாட்டில் குறைந்த செலவில் ஆயிரக்கணக்கான மைல் நீளச்சாலைகள் அமைத்து நற்பணி ஆற்றியுள்ளது.

துருக்கி தேசத்து மக்களுள் மூன்றில் இரண்டு பங்கான இரண்டு கோடிப் பேர் கிராமங்களில் ஆங்காங்கு துண்டுபட்டு வாழ்கிருர்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர 93,000 மைல் நீளக் கிராமப்புறச் சாலைகள் அமைக்க வேண்டும். அளவான பண வசதியைக் கொண்டு குறைந்த காலத்தில் அதிக பட்ச அளவு சாலை போடுவதற்கென்று கிராமங்களைத் தொகுதி தொகுதியாக எடுத்துக்கொண்டு பணியாற்றுகிருர்கள். இந்தத்திட்டம் 35,000 கிராமங்களுக்குச் சாலை இணைப்பு அளிக்கும்;

துருக்கி நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் பாஸ்போரஸ் பாலம் அதிசயமான தொன்ருகும். பாலத்தின் கண் 3,523 அடி நீளம் உள்ளது. நீளமான கண் அமைந்த உலகப் பாலங்களில் இது நான்காவதாக வருகிறது. இந்த அற்புதமான பாலம் 1973ஆம் ஆண்டில் கட்டி முடியும்போது, ஐரோப்பிய சாலைகளுடன் இப்போது உருவாகி வரும் ஆசிய நெடுஞ்சாலை அமைப்பை இணைத்து நிற்கும்.

ஆசிய நெடுஞ்சாலைத் திட்டம் என்பது பல நாடுகளை வலை இணைப்பாகச் சாலைக் கயிற்ருல் இணைப்பனவாகும். சீனு நீங்கலாக, மேற்கே ஈரானிலிருந்து, கிழக்கே வியட்நாம் சிங்கப்பூர் வரை மோட்டார் செல்லக் கூடிய வசதி உண்டாகும். ஆசியாவிற்கும் தூரக் கிழக்குச் சீமைக்குமாக ஐக்கிய நாடுகள் சபை அமைத்த பொருளியல் ஆணைக்குழு இத்திட்டத்தை 1958இல் தொடங்கி வைத்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதையை நெடுஞ்சாலைத் தரத்தில் அமைத்து வெகுவான முன்னேற்றம் கண்டுள்ளார்கள்.

1960-70 ஆண்டுகளை முதல் பத்தாண்டாக வைத்து அதற்குள் எல்லா ஆசிய நாடுகளையும் இணைக்கும் முழுமையான பாதை ஒன்ருவது அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டது அநேகமாக வெற்றி கண்டுள்ளது. பர்மா மட்டிலும் பாக்கி நிற்கிறது. வெகு விரைவில் பர்மாவிலும், தென்கிழக்கு ஆசியாவில் விடுபட்டிருக்கிற பகுதிகளிலும் பூர்த்தியாகிவிடும் என்று நம்பலாம்.

ஈரான் நாட்டு மசூதிகளைப் பார்த்துவிட்டு, பர்மா தாய்லாந்து கோவில்களுக்கும், ஆப்கானிஸ்தான் பீடபூமியைப் பார்த்தபின் மலேசியாவின் காடு மலைகளுக்கும் சுற்றுப் பயணிகள் செல்வதற்குச் சிறந்த பாதையாக ஆசிய நெடுஞ்சாலை திகழப் போகிறது. ஆனல் அச்சாலை அமைப்பதன் முக்கிய நோக்கம், உலகப்பரப்பில் கால் பங்காக உள்ள அப்பகுதியில் முன்னேற்றமில்லாதிருப்பதால் பொருளியல் வளர்ச்சியும் வாழ்க்கைத்தர உயர்வும் விளைவிப்பதாகும்.

ஆசிய நெடுஞ்சாலையினல் விளையும் பொருளியல் பலன் பெரிதாகவே இருக்கும். வறண்ட பகுதிகளில் நீர்ப்பாசனத்திற்கும், குடியமர்விற்கும் வழி பிறக்கும். தேயிலை, ரப்பர் போன்ற இயற்கைதரும் பொருள்களை குறைந்த செலவில் கொண்டு செல்ல இயலும், வான்வழி மட்டுமே நீண்ட தொலைவு போக முடியும் என்றிருந்த பகுதியில், சாலை வழியாக மூலப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உற்பத்திப் பொருள்கள் முதலியவற்றைப் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லலாம். ஆங்காங்கிருந்து வந்து இணையும் சிறு சாலைகள் வேளாண்மைப் பொருள்களைப் பற்ருக்குறைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல உதவும்.

ஆசிய நெடுஞ்சாலையுடன் ஒப்பிடக் கூடிய சாலை அமைப்பு உலகின் மேற்குக் கோளப் பகுதியில் விளங்கும் பான் அமெரிக்க நெடுஞ்சாலையாகும். தென், வட அமெரிக்கக் கண்டங்களிலுள்ள எல்லா நாடுகளையும், முக்கிய நகரங்களையும், இணைத்து நிற்பது அது. வடக்கே அலாஸ்காவிலுள்ள பேர்பாங்கிலிருந்து, தென் கடைசியில் பெட்டகோனியாவிலுள்ள டியராடெல்பியூகோ வரை தொடர்ச்சியாக அமைய வேண்டிய சாலையில், விடுபட்டிருக்குமிடம் பனுமாவிலும் கொலம்பியாவிலும் பரந்திருக்கும் டாரியன் பகுதியாகும். பனுமா டாரியன் பகுதியில் சிவப்பிந்தியப் பழங்குடியினர் மட்டும் வாழ்கின்றனர். அண்மைக் காலம் வரை பிறர் அங்கு கால் வைக்கவில்லை. வெல்ல முடியாதது என ஒரு காலத்தில் தோன்றிய அந்தச் சில நூறு மைல் தூரமும், சாலைபோடப்பட்டு, 1970-80-க்குள் போக்குவரத்துக்கு வந்துவிடும்.

அப்பகுதியில் சாலை பூர்த்தியான பின் விளையும் பலன்களைப் பற்றி அப்பகுதித் தலைமை இஞ்சினியர் காமிலோ ஆர்.கார்லெஸ் பேசுகையில், ‘‘செவ்வனமிருந்தும் டாரியன் பகுதி போக்குவரத்து வசதி இன்மையின் முன்னேற்றமில்லாதிருக்கிறது. சாலை போட்டு வரும் போதே நாட்டு வளம் உடனுக்குடன் பயனுகி வரும். சிவப்பிந்தியர் நாட்டினத்துடன் இணைவார்கள். வேளாண்மை பெருகும். கால் நடை விருத்தியாகும். வனவளம் பயன்படும். கல்வி, வாணிகம் யாவும் விரிவுறும். கிளைச் சாலைகள் போடப்பட்டு தொலை தூர இடங்களும் இணைப்புறும். டாரியன் பகுதி இவ்வாறு பெரு முன்னேற்றம் காணும்’’ என்று குறிப்பிட்டார்.

ஆஃப்ரிக்கக் கண்டத்தில், நாடுகளிடை வாணிகமும், அரசுகளிடைப் பொருளியல் கூட்டுறவும் வளர்வதற்குச் சாலைகள் முக்கியத் தேவையாயுள்ளன. முற்காலத்தில், குடியேற்றப் பகுதிகளில் முக்கிய இடங்களுக்குச் செல்வதற்கும், ரயில் போடப்படுமிடங்கள், துறைமுகங்கள் இவற்றை இணைப்பதற்கும் சில நெடுஞ்சாலைகள் போடப்பட்டன. எனவே, முழுவதாக இணைப்பு அமையாமல் பல சாலைகள் ஆங்காங்கு தனித்தனியே உள்ளன. ஆஃப்ரிக்க நாடுகள் பலவற்றுக்கு அண்டை நாடுகளுடன் சாலைத் தொடர்பு இல்லை.

1969ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எத்தியோப்பிய நாட்டு அடிஸ் அபாபா நகரில் நடைபெற்ற ஆஃப்ரிக்க நெடுஞ்சாலை மாநாட்டில் 49 நாடுகளிலிருந்து ஐநூறுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்து ஒற்றுமையும் முன்னேற்றமும் விளையச் சாலை அமைப்பு எவ்வாறு உதவுமென்று ஆராய்ந்து விவாதித்தனர்.

நாடுகளிடைத் தரைவழித் தொடர்புக்காகச் சாலை இணைப்புச் செல்வது முக்கிய பிரச்சினையில் பாதிதான் என்று மாநாட்டில் கூறப்பட்டது. மற்றொரு பாதி ஆஃப்ரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் 80 சதவிகிதமாக விளங்கும் கிராம சமுதாயங்கள் எல்லாப் பருவகாலங்களிலும் சரக்குகளைச் சிரமமின்றிக் கொண்டுசென்று வாணிகம் செய்வதற்கு வசதியாய் விற்பனைக்கேந்திரங்களை இணைக்கும் சாலை அமைப்பு உண்டாக்குவதாகும் என்று பேசப்பட்டது.

புதுச்சாலைகள் போடுவது ஒருபுறமிருக்க, அமைத்த சாலைகளைப் பேணிக் காப்பது மிக முக்கியம், அனைத்துலகக் கடன் நிதியங்களின் ஒரு பகுதி முன்னேறும் நாடுகளில் சாலைகளைப் பேணிக் காக்கும் பணியை விருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னேறிய நாடுகளின் சாலை நிபுணர்கள் உதவியுண்டு. நவீன சாலை அமைப்பு இயந்திரங்களைப் பழுது பார்ப்போர், ஓட்டுவோர் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் கருவிகள் வாங்குவதற்கும், தொழிற்கூடங்கள், கிடங்குகள் முதலியவற்றிற்கு நிதி உதவி உண்டு.

முன்னேறும் நாடுகள் யாவற்றிலும் நெடுஞ்சாலைப் பணிகளுக்கு வேண்டிய தொழில் நுட்ப உதவி அளிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் உயர்தரப் பயிற்சி பெறுவதற்கு அத்திட்டம் வாய்ப்பளித்து உதவுகின்றது,

உலகின் பல நாடுகளிலுமுள்ள இளம் சாலை இஞ்சினியர்களின் பயிற்சிக்கு வகை செய்யும் மற்றொரு நிறுவன அமைப்பு, அனைத்துலகச் சாலைத்துறை ஒன்றிணைந்த சங்கம் என்பதாகும். இது சாலைப் போக்குவரத்துக் காரியங்கள் யாவும் குறித்து ஐக்கிய நாடுகள்சபைக்கு ஆலோசனை சொல்கிறது. ஆஃப்ரிக்க நெடுஞ்சாலை மாநாடு கூடியதற்கும், கடந்த இருபதாண்டுகளாக ஆங்காங்கு பல நாடுகளில் தனித் தனியேயும், உலக அளவிலும் நெடுஞ்சாலை வல்லுநர்கள் மாநாடாகக் கூடியதற்கும் காரணமாயிருந்தது இதுவே. இதன் பயிற்சித் திட்டத்தின் கீழ், பல முன்னேறி வரும் நாடுகள் உள்பட எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இளம் இஞ்சினியர்கள் அமெரிக்காவின் தலை சிறந்த பல்கலைக் கழகங்களிலும், உயர் தொழில் நுட்பப் பள்ளிகளிலும் ஓராண்டுக்கால நெடுஞ்சாலை அமைப்பு நுட்பக் கல்வி பெற்றூர்கள், மிக உயர்ந்த பயிற்சிபெற்ற இவர்கள் வருநாள்களில் தங்கள் தங்கள் நாடுகளிலே சாலை அமைப்புத் திட்டப் பொறுப்புகளை ஏற்றுச் சீரிய பணிபுரிவார்கள்.

தமிழில்: கு. ராஜாராம்

Photo © Photo Researchers, New York

மேலே: ஸாம்பியாவின் சாலைகளில் வழக்கமாக ஏற்படும் இடர்கள் தவிர அசைந்தாடிச் செல்லும் பெரிய விலங்குகளும் இடர் தருவதுண்டு. பெரும் ஆசிய நெடுஞ்சாலை ஆப்கானிஸ்தானத்திலிருந்து பாகிஸ்தானுக்கு கைபர் கணவாய் வழியாகச் செல்கிறது. கீழே: தெற்கு பாகிஸ்தானில், நடந்து செல்லும் மனிதனே விலங்கோ தன் பாதையில் தீங்கின்றிச் செல்லலாம். அப்பாதை ஊர்திகள் செல்லும் ஆசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒதுங்கியுள்ளது. படத்தின் இடக் கோடியில் நெடுஞ்சாலையின் ஒரு பகுதி தெரிகின்றது.

Photo Paul Almasy, Paris



இனவெறியையும் இன வேறுபாட்டையும் எதிர்த்துச் செயலாற்றும் பன்னாட்டு ஆண்டு

ஐ.நா. பொதுப் பேரவை 1971ஆம் ஆண்டை இன வெறியையும் இன வேறுபாட்டையும் எதிர்த்துச் செயலாற்றும் பன்னாட்டு ஆண்டாக அறிவித்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளாக யுனெஸ்கோ இவ்விரு கேடுகளையும் எதிர்த்துப் போராடி வந்துள்ளது. இன ஒற்றுமையை வளர்க்க பொது மக்களையும் அரசாங்கங்களையும் பன்னாட்டு நிறுவனங்களையும் ஊக்குவிக்க 1971இல் தனி முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. யுனெஸ்கோ, பாரிஸ் தலைமை அலுவலகத்தில் மார்ச் 22 முதல் 26 வரை ''இனமும் சமூகமும்'' என்பது பற்றி மாநாடு நடைபெறும். இதில் பன்னாட்டுப் புகழ் பெற்ற பலர் பேசுவர். அதில் கலந்து கொள்ளவும் பலர் அழைக்கப்படுவர். 1956இல் முதலில் வெளியான யுனெஸ்கோவின் ''தி ரேஸ் குவெஸ்டியன் இன் மாடர்ன் சொசைட்டி'' (தற்கால சமூகத்தில் இனப் பிரச்சினை) நூலை இப்போது திருத்தி எழுதுகின்றனர். புதிய இயல்களைச் சேர்த்து ஆங்கில, பிரெஞ்சுப் பதிப்புகளை மே மாதம் வெளியிடுவர். 1967இல் வெளியான இனப் பிரிவினை அறிக்கையின் புதிய பதிப்பும் தயாராகின்றது.

புனித—போப்பாண்டவர் ஆறுவது பால் ''அமைதி நாளா''கிய ஜனவரி 1, 1971இல் உலகிற்கு விடுத்த செய்தியில் இன, மத வேறுபாடுகளின் வளர்ச்சி பற்றியும் அவற்றினால் உலக அமைதிக்கேற்படும் ஊறு பற்றியும் குறிப்பிட்டார். அப்பேச்சின் பெரும் பகுதியைக் கீழே காணலாம்.

அமைதி விழைவு

புனித போப்பாண்டவர் ஆறுவது பாலின் அறிக்கை

நாம் சொல்வதைக் கேளுங்கள். அது வீணாகாது. வழக்கம் போல் அமைதி பற்றியே பேசுகிறோம். அமைதி உலகிற்குத் தேவை; உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆகவே திரும்பவும் அமைதிபற்றிப் பேசுகிறோம்.

இப்புத்தாண்டுப் பிறப்பன்று உலகையும் மக்களையும் குடும்பங்களையும் தனி மனிதரையும் பாதித்துவரும் இரு வகையான நிகழ்ச்சிகளைக் கண் திறந்து பார்ப்போம். இவை நமது வருங் காலத்தை நேரடியாகப் பெரிதும் பாதிக்குமென நினைக்கிறோம். இவை நம் ஒவ்வொருவரையும் பாதிக்கக்கூடும்.

முதல் வகை நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். எங்கும் குழப்பம். போரின் துயர நிகழ்ச்சிகள் ஒழிக்கவல்லது. ஒழித்திருக்க வேண்டிய எண்ணங்களும் செயல்களுமே திரும்பவும் தோன்றியுள்ளன என்பதை இவை காட்டுகின்றன. போரின் முடிவில் எல்லோரும் ''போதும்'' என்றனர். எது போதும்? படுகொலையும் பயங்கர அழிவும் போதும். இறந்தோரைப் புதைத்து, புண்களை ஆற்றி, அழிந்ததைப் புதுப்பித்து, உலகை வளப்படுத்தினால் மட்டும் போதாது. அப்பேரழிவின் காரணங்களையே ஒழிக்க வேண்டுமெனப் போரின் முடிவில் இத் தலைமுறையின் தொடக்கத்தில் மனித இனம் திடீரென உணர்ந்தது.

காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை ஒழிப்பது நல்ல திட்டம். ஆகவே உலகம் ஆறுதலடைந்தது. அனைத்துலக அமைதியின் புது ஊழி பிறப்பது போல் தோன்றியது. புதிய பூசல்களைத் தவிர்ப்பதற்காக எல்லோரும் தீவிர மாற்றங்களை ஏற்கத் தயாராக இருந்தனர்.

அரசியல், சமூக, பொருளாதார அமைப்புகளுக்காக புதிய அறநிலை, சமூக மாற்றங்கள் தீட்டப்பெற்றன. நீதி, மனித உரிமைகள், எளியோர் நலன், ஒழுங்கமைதி, ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு, உலக ஐக்கியம் பற்றியெல்லாம் மக்கள் பேசினர்.

பெரும் முயற்சிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற நாடுகள் தோல்வியடைந்தவற்றிற்கு உதவ முன்வந்தன. மாபெரும் நிறுவனங்கள் தோன்றின. ஒற்றுமை, பொது நலம் என்ற அடிப்படையில் உலகம் அமையத் தொடங்கியது.

உலக வாழ்வின் அடிப்படையாக அமையக் கூடிய அமைதிக்கு வழி வகுக்கப் பெற்று விட்டது போல் தோன்றியது.

ஆனால் 25 ஆண்டுகள் உலகியல் துறையில் இந்த இலட்சிய முன்னேற்றம் ஏற்படும். இன்று என்ன காண்கிறோம்? முதலில் அங்குமிங்கும் போர் மூண்டு கொள்ளை நோய் போல் பிற பகுதிகளுக்கும் பரவுவதைக் காண்கிறோம். சமூக, இன, மத வேறுபாடுகள் இன்னும் நிலவுவதையும், சில இடங்களில் வளர்வதையும் பார்க்கிறோம். பழைய உளப்பாங்கே திரும்பத் தலை தூக்குகிறது, கடந்த கால உளவியல், அரசியல் குழிகளிலே மனிதன் புதைந்துகிடக்கின்றான்.

இறந்தகாலம் பேயுருக்கள் உயிர் பெற்று எழுகின்றன. எளியோரை வாட்டும் பொருளாதார நலங்கள் மேலோங்கி வருகின்றன. வகுப்புப் பகையும் வகுப்புப் போரும் முளைத்து பன்னாட்டு, உள்நாடடுப் பூசல்கள் தழைக்கின்றன, நாட்டுமதிப்பு, அரசியல் அதிகாரம் சார்ந்த போராட்டங்கள் தோன்றி வருகின்றன. முரண்பாடான ஆவல்களினால் எழும் பிணக்குகளும், ஆழ்ந்த இன, கருத்தியல் வேற்றுமைகளும் திரும்பவும் காணப்படுகின்றன. கொடுமையையும் வல்லாட்சியையும் மக்கள் நாடுகின்றனர். குற்றமும் வன்முறையும் உயர் குறிக்கோள்களாகின்றன. அவற்றின் விளைவுகளை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. அமைதியைப் படைக்கலங்கள், வலிய ஆற்றல்கள் ஆகியவற்றின் சமநிலையாகக் கருதுகின்றனர். விவேகமின்மையால் பெருங் கேடு விளைந்து பேரழிவு ஏற்படுமோ என மக்கள் அஞ்சி நடுங்குகின்றனர்.

இன்று என்ன நடைபெறுகின்றது? நாம் எங்கு செல்கிறோம்? என்ன தவறு நடந்துவிட்டது? அல்லது என்ன தேவைப்படுகின்றது? நீதியும் நிரந்தரமுள்ள அமைதியை நிலைநாட்ட முடியாதென்றோ, புதிய தலைமுறையின் கல்வித் திட்டத்தில் அமைதியின் நம்பிக்கையையும் மனப்பாங்கையும் இணைக்க முடியாதென்றோ நாம் ஐயுற்று நம்பிக்கை இழக்க வேண்டுமா?

நல்ல வேளையாக புதிய கருத்துகளும் நிகழ்ச்சிகளும் தோன்றியுள்ளன. அவை அமைதியின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. என்ன நடப்பினும் அமைதி முன்னேறிச் செல்கிறது. அதன் பாதையில் தடங்கல்களும் முரண்பாடுகளும் இடர்களும் தோன்றலாம். ஆயினும் அஃது அழியாதவாறு உலகில் நிலை பெற்று வருகின்றது.

அமைதி தேவையென எல்லோருக்கும் தெரியும். ஒற்றுமையை வளர்க்கும் அறநிலை முன்னேற்றம் அதைச் சார்ந்துள்ளது. ஒற்றுமையும் அமைதியும், உரிமையினால் இணைக்கப்படும்போது, உடன் பிறந்தோராகின்றன.

போர் பயனற்றதென்றும். பிணக்குகளைத் தீர்ப்பதற்குத் தவிர்க்க முடியாத வழியல்லவென்றும் மக்கள் கருதுவது அமைதிக்குத் துணை புரிகின்றது.

பண்பாடு, பொருளாதாரம், வாணிகம், விளையாட்டு, சுற்றுலா போன்ற துறைகளில் மக்களிடையே நிலவும் தொடர்புகளினால் அமைதி

வளர்ச்சியடைகின்றது. நாம் இணைந்து வாழ வேண்டும். ஒருவரொருவரை அறிந்து, மதித்து உதவ முன்வர வேண்டும்.

அடிப்படையான ஒற்றுமை உலகில் உருவாகி வருகின்றது. இதனால் அமைதி பயன் பெறுகின்றது. பன்னாட்டுத் தொடர்புகள் வளர்ச்சியுறுகின்றன. அவை ஒற்றுமையைத் தோற்றுவிப்பது மல்லாமல் அதற்கு உறுதியுமளிக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் மனித இனத்தின் அமைதியையும் ஒற்றுமையையும் தோற்றுவித்து நிறைவேற்றுகின்றமையால் அவற்றை நாம் நற்பேறாகக் கொள்ள வேண்டும்.

இவ்விரு கருத்துக்களுக்கு நடுவிலும் நமக்கு மிக விருப்பமான கருத்தாகிய அமைதிக்கு முரணான ஆற்றல்கள் பல தோன்றியுள்ளன. இதிலிருந்து நாம் இரு முக முடிவொன்றிற்கு வரலாம். உலகில் இன்று காணப்படும் இரு வகையான தோற்றத்தைப்பற்றி இரு கேள்விகள் கேட்போம்.

ஏன் இன்று அமைதி குறைந்து வருகின்றது?

ஏன் இன்று அமைதி வளர்ந்து வருகின்றது?

இந்த கேள்விகளுக்கு நேராகவோ எதிர் மறைவாகவோ தோன்றும் விடை என்ன? மனிதன் முதல் நிலையில் மனிதன் தாழ்ந்தும் இரண்டாவது நிலையில் உயர்ந்தும் தோன்றுகிறான்.
ஒரு சொல்லைத் துணிந்து பயன்படுத்துவோம். அதன் பொருள் தெளிவற்றதாகத் தோன்றலாம். ஆனால் அதன் முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கும்போது அதன் சிறப்பும் மேன்மையும் தெரிகின்றது. அது தான் ‘அன்பு’, உலக வாழ்வின் உயர்ந்த கொள்கையாகிய மனித அன்பு. அன்பும், அமைதியும் ஒன்றாகவே விளைந்திருக்கும்.

அமைதியானது அன்பின், அதாவது உண்மையான அன்பின், மனித அன்பின் விளைவு. அமைதிக்கு ஒரே நோக்கம் தேவை. அதுவே நட்பு.

அமைதி ஏற்பட வேண்டுமானால், அதை உறவுகளற்ற (மனித உறவுகள் தவிர்க்க முடியாதவை; தேவையானவை), தன்னல உறவுகளிலும் (இவை உறுதியற்றவை; ஏமாற்றுபவை) பண்பாட்டு அல்லது தற்செயலான உறவுகளிலும் (இவை அமைதிக்கும் போருக்கும் பயன்படலாம்) அமைக்க கூடாது.

உண்மையான அமைதியானது நீதியிலும், மனிதனின் புலனாகாத உயர் மதிப்பிலும், மனிதரிடையே நிலையான சமத்துவம் நிலவ வேண்டுமென ஏற்பதிலும், மனித சகோதரத்துவம், அதாவது ஒவ்வொரு மனிதனையும் மனிதனாகக் கருதி அன்பும் மதிப்பும் காட்ட வேண்டுமெனும் அடிப்படைக் கொள்கையிலும் நிறுவப்பட வேண்டும். இதில் ‘‘ஏனெனில் அவன் ஒரு சகோதரன், என் சகோதரன், நமது சகோதரன்’’, எனும் வெற்றிக் குரல் கிளம்புகிறது.

அனைத்துலக மனித சகோதரத்துவம் எனும் உணர்வு, கொள்கை அளவிலாவது நம் உலகில் வளர்ந்து வருகின்றது.

ஒவ்வொரு மனிதனும் நமது சகோதரன் எனும் நம்பிக்கையை இளைஞரிடையே உணர்த்தி வரும் எவரும் அமைதிக்கு அடிக்கல் நாட்டுபவராவர்.



Photo © Look Magazine, New York

மனித சகோதரத்துவம் எனும் உணர்வை மக்கள் கருத்தில் விதைப்பவன் உலகின் வாழ்வை வளப்படுத்துகிறான்.

பகையையும் போரையும் தூண்டாமல், சமூக வாழ்வுக்குத் தேவையான முறையில் அரசியல் நலன்களைக் காக்க விழைபவன் மனித சமூகத்தில் பொது நன்மையை வளர்க்கிறான்.

பிறரிடத்தில், இன இயல்புகளைத் தவிர தன்னைப் போன்ற மனிதனைக் காண துணை செய்பவன் உலகில் பிரிவு, எதிர்ப்பு, நன்றியின்மை, பழி ஆகியவற்றை நீக்கி சமூக ஒத்துழைப்பை வளர்க்கின்றான். மனிதரிடையே சகோதரத்துவத்தை அடிப்படையிலே மறுத்தால் அமைதி அடியோடு அழிந்து விடும்.

ஆயினும் அமைதியே உண்மையான, தற்கால மனித இயல்பைப் பிரதிபலிக்கிறது. அது தனக்கேற்படும் காலத்திற்கொவ்வாத இன்னல்களைப் புறங்கண்டு வருகின்றது. தாம் சகோதரரர் என்பதனால் ஒன்றாக வாழ வேண்டுமென்று விரும்புவோரிடையே அமைதி அன்பைப் போற்றி வருகின்றது.

இதுவே நமது 1971ஆம் ஆண்டுச் செய்தி. இது சமூகத்தின் மனச்சான்றிலிருந்து மீண்டும் எழும் குரல்போல் ‘‘எல்லோரும் உரிமையுடன் பிறக்கின்றனர். மதிப்பும் உரிமைகளும் எல்லோருக்கும் சமம். அனைவருக்கும் பகுத்தறிவும் மனச்சான்றும் உண்டு. ஆகவே ஒருவருக்கொருவர் சகோதர உணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும்’’ எனும் மனித உரிமைகளின் அறிக்கையை எதிரொலிக்கிறது. நாகரிகம் கற்றுத்தரும் மிக உயர்ந்த பாடம் இதுவே.

இதிலிருந்து நாம் பின்வாங்க வேண்டாம். இக் கருத்தியல் வெற்றியின் பயனை நாம் இழக்கத் தேவையில்லை. ‘‘ஒவ்வொருவனும் எனது சகோதரன்’’ எனும் இம் மேற்கோளை, மனித முன்னேற்றத்தின் குறிக்கோளை, உறுதியுடன் வலியுறுத்துவோம். இது அமைதியை நிலைநாட்டும், உருவாக்கும்; அனைவருக்கும் நன்மை பயக்கும்.

Photo Ihrt © Stern - Black Star, New York

சென்ற ஆண்டு நவம்பர் 12-13 இரவில் கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய புயல் இந் நூற்றாண்டின் மிகப் பெரிய இயற்கை அழிவாகும். நெல் வயலின் நடுவில் கரை தட்டிய கப்பலும் (மேலே), சிதைந்த கிராமமும் (வலப்புறம்) 5 இலட்சம் பேரைக் கொன்ற புயலின் கொடுமையை ஓரளவு காட்டுகின்றன. உலகின் பல பகுதிகளிலிருந்தும் உணவும் மருந்தும் பிற பொருள்களும் விரைந்து அனுப்பப் பெற்றபோது, போக்குவரவு துணிக்கப் பட்டிருந்தது பெரும் இடையூறாக இருந்தது. ‘‘கடந்த காலத்தில் செய்து வந்ததுபோல், இறந்தோரைப் புதைத்து, காயப் பட்டோரைப் பேணி, பிழைத்தோருக்கு உணவு, உடை, இருப்பிடம் அளித்து அழிவுகளைக் கடந்து செல்வதைத் தவிர அவை இனிமேல் நிகழா வண்ணம் தடுக்க முடியாதா? அல்லது நம் பகுத்தறிவைப் பயன்படுத்தி விஞ்ஞான, தொழில் நுட்ப பொருளாதார வளங்களை இதற்கெனச் செயல்படுத்தலாமா?’’ என டாக்டர் ஃபூர்னியர் டி ஆல்ப் எதிர்ப்புறக் கட்டுரையில் கேட்கின்றார்.

புயலையும் பிற இயற்கை அழிவுகளையும் பற்றி—புவிப் பௌதிக அறிஞரின் சிந்தனைகள்

ஈ. எம். ∴பூர்னியர் டி ஆல்ப்

ஈ. எம். ஃபூர்னியர் டி ஆல்ப் யுனெஸ்கோவின் சூழ்நிலை ஆய்வு நூல் துறை வல்லுநர். இயற்கை அழிவுகளைத் தடுக்கும் புவிப் பௌதிகத் திட்டங்களில் ஈடுபட்டிருப்பவர். யுனெஸ்கோ தலைமை அலுவலகத்தில் சேருமுன் இவர் பாகிஸ்தானில் பல யுனெஸ்கோ திட்டங்களை செயல் படுத்தினார். நிலநடுக்கம் நிகழும் குவெட்டா பகுதியிலும் மெக்ஸிகோ தேசியப் பல்கலைக் கழகத்திலும் புவிப்பௌதிக ஆய்வுக்கூடம் அமைக்க உதவினார்.

வருமுன்னர்க் காத்தல் வேண்டும் என்பதை அறிவுறுத்த இயற்கை அன்னை 1970ஆம் ஆண்டில் மனிதனுக்கு இரண்டு கடுமையான பாடங்களைப் புகட்டினாள்.

முதல் நிகழ்ச்சி, அந்த ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் நடந்தது. தென் அமெரிக்காவில் பெரு என்னும் துறை முகத்தை அடுத்த கடலினடியில் 55 கிலோ மீட்டர் ஆழத்தில் நில நடுக்கம் விளைந்து உண்டான அதிர்ச்சி அலைகள், அருகே ஆண்டிஸ் மலைப்பகுதியில் உயரத்தில் அமைந்துள்ள ''கல்லேஜான் டி ஹியூலாஸ்'' என்னும் எழில் வாய்ந்த பள்ளத்தாக்கிற்கு அன்று மாலை 3.24 மணிக்கு வந்துற்றன, வந்து சேர்ந்த 90 வினாடிக்குள், அங்கு விளங்கிய ஹூராஸ் என்னும் பெரிய நகரத்தின் கட்டடங்கள் பாதிக்குமேல் நொறுங்கி வீழ்ந்தன. இடிபாடுகளிடையே அகப்பட்டு 15,000 மக்கள் மாண்டனர். நிலநடுக்கம் முழு மலையையே அசைக்கவும் முடியும் என்று காட்டியது. மலை உச்சியின் மேற்கு முகப்பிலிருந்து எழுபது எண்பது இலட்சம் கன மீட்டர் அளவிருக்கக்கூடிய பெரும் பாறை பெயர்ந்து, அதன்மேல் படிந்திருந்த பத்துலட்சம் டன் எடையுள்ள பனிக்கட்டியுடன் சேர்ந்து, அறுநூறு மீட்டருக்குக் கீழே படிந்துள்ள பனியின் மீது வளரும் வேகத்தோடு இறங்கி வீழ்ந்தது, அடுத்து ஒரு நிமிடத்தில் அங்கிருந்து இன்னும் அதிக வேகத்துடன் ஹூயலாஸ் பள்ளத்தாக்கில் விழுந்து அடிவாரத்திற்கு இறங்கியது. வழியில் 150 மீட்டர் உயரமிருந்த முகடு ஒன்றைத் தாவிக்கொண்டு அவ்வளவு வேகத்துடன் விழுந்தது, அடிவாரத்திலிருந்த யுங்கே என்ற நகரத்தை அழித்து, ஐந்து மீட்டர் ஆழத்திற்கு மண்ணால் மூடியது. அங்கு வாழ்ந்த 20,000 மக்கள் ஒரு சிலரே உயிர் தப்பினர்.

Photo © Associated Press, Paris

இரண்டாவது நிகழ்ச்சியின் நிலைக்களம் பாகிஸ்தான். 1970 நவம்பர் 12, 13 தேதிகளில் வங்காளக் குடாக் கடலின் மேல் பெரும் புயல் வீசிக் கங்கை பிரம்மபுத்திரா கழிமுகப் பகுதிக்குச் சென்றது. குறைந்த காற்றழுத்தமும், புயல்வேகக் காற்றுகளும், பருவ காலத்து இறுதியில் பெருமளவு வந்த நதிகளின் நீரும், கடலில் எழுந்த பொங்கு அலையுடன் சேர்ந்துகொண்டு பேரலையாக வந்து பல தீவுகளை மூழ்கடித்தது. கடற்கரைப் பகுதி முழுவதிலும் ஆறு மீட்டர் ஆழத்திற்கு வெள்ளம் பரவியது. 2,800 சதுர மைலில் வாழ்ந்த 2,50,000லிருந்து 5,00,000 எண்ணிக்கையுள்ள மக்கள் மூழ்கிப்போயினர், சுமார் 2,35,000 வீடுகள் அழிந்தன. மொத்தத்தில் பாதிப்புற்ற மனிதரின் எண்ணிக்கை முப்பது இலட்சம் ஆகும். எண்ணற்ற கால்நடைச் செல்வம் அழிந்தது. 6,00,000 டன் அளவு பயிர்ச் செல்வம் நீரில் போயிற்று, பத்து இலட்சம் ஏக்கருக்குமேல் பயிர் நிலம் பாழாயிற்று.

அவ்விரு நிகழ்ச்சிகளின் போதும், பெருஞ்சேதத்தை செய்தி கேட்டு,

மே தினம்! மே தினம்! மே தினம்! (வலப்புறம்) இப்படம் சென்ற ஆண்டு மே 31, ஞாயிறன்று பெருவின் மிக உயர்ந்த மலையாகிய ஹுவாஸ்கரனின் மேற்குப் பகுதியில், பனிப்பாறைச் சரிவில் புதைந்து கிடக்கும் யுங்கே, ரான்ரஹிர்கா ஆகிய இருநகர்களைக் காட்டுகிறது. நிலநடுக்கத்தில் சரிந்த பனிப்பாறைகளும் மலைக்கற்களும் ஹுவாய்லாஸ் பள்ளத்தாக்கில் சரிந்து விரையும் புகை வண்டியின் வேகத்துடனும் ஒலியுடனும் இரு நகர்களையும் தாக்கின. 8 கோடி கன மீட்டர் நீர், மண் பாறை ஆகியவற்றில் நகர்கள் மூழ்கின; 20,000 பேர் மாண்டனர். ‘‘அக்வி எஸ்டுவோ யுங்கே’’ (இங்கேதான் யுங்கே இருந்தது) எனக் குறிக்கப்பட்டுள்ளது (மேலே). ‘X’ எனும் அடையாளம் நடுச் சதுக்கத்தைக் குறிக்கின்றது. இதுபோலவே ரான்ரஹிர்கா புதைந்துள்ள இடமும் காட்டப் பட்டுள்ளது (படத்தின் அடியில்). நடுவிலுள்ள கோடு முன்னால் இரு நகர்களையும் இணைத்த நெடுஞ் சாலையைக் காட்டுகிறது. கீழே: பெருவின் நிலநடுக்கத்தில் பிழைத்தவர்களுக்கு அவசர உதவிகள் விமான மூலம் அளிக்கப்படுகின்றன.

Photo UNICEF, New York

உணர்வும் அக்கறையும் உலகெங்கும் தாமாக எழுந்தன. உதவிகள் ஓடி வந்தன. பல நாடுகளிலிருந்தும் மருந்து, உணவு, உடை, அவசர வீட்மைப்பு உதவி யாவும் வந்தன. மீட்புக்குழுக்கள் வந்தன. தனிப்பட்டோர் மட்டுமின்றி, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அனைத்துலக அமைப்புகளும் உதவின. பாதிப்புற்ற நாடுகளின் அரசுகளுக்கு வந்து குவிந்த உதவிப் பொருள்களை வகைப் படுத்தித் தேவையுள்ள பகுதிகளுக்கு அனுப்பி வைப்பது பெரும் பாடாகப் போயிற்று. பெருங் கருணையினாலும், அரும் முயற்சியாலும் வந்த சேர்ந்த பொருள்களின் ஒரு பகுதி குழப்பம் காரணமாக வீணாகியது.

அவ்விரு நிகழ்ச்சிகளினின்று எழுந்து நம் முன் நிற்கும் தெளிவான கேள்வி இதுதான்: அவ்வாறு இயற்கை விளைக்கும் கேடுகளைத் தடுப்பதற்கு ஒன்றுமே செய்யாது, முன்பெல்லாம் போலவே, நிகழ்ச்சிக்குப்பின் இறந்தவர்களைப் புதைத்தும், காயமுற்றோருக்கு மருந்து போட்டும், உயிர் தப்பினோருக்கு உணவு உடை வீடு அளித்தும் உதவி செய்து கொண்டு மட்டும் இனியும் இருக்க வேண்டுமா? அல்லது, பகுத்தறிவின் அடிப்படையில், கேடுகள் விளையாது சமாளிப்பதற்காக நம்மிடமுள்ள அறிவியல், தொழில்நுட்பம், பொருளியல் ஆகிய வளங்களைத் திரட்டித் தயாராகப் போகிறோமா?

கேடு வாராது காக்க விரும்பினால், நாம் செய்ய வேண்டியவை மூன்று உண்டு. முதலாவது, கேடு விளைக்கும் இயற்கைச் சீற்றங்களின் தன்மைகளை முற்றிலும் அறிதல் வேண்டும். அப்போதுதான் எங்கே, எப்போது, எந்த அளவில் சீற்றம் தாக்கும் என்று துல்லிதமாக முன்கூட்டி அறிய முடியும். புயல், வெள்ளம் இவை பற்றி அறிவியல் ஓரளவு வெற்றி கிட்டியுள்ளது. எரிமலை வெடிப்பு சம்பந்தமாய் அறிவியற் கருவிகள் கொண்டு இடைவிடாது ஆராய்ந்து விவரங்கள் அறிய வாய்ப்புள்ளது. போதுமான விவரக் குறிப்புகள் கிடைத்துவிடின், அழிவு விளைவிக்கும் மலைவீழ் பனிப்பாறை, நிலநடுக்கங்கள், நிலச்சரிவுகள் ஆகியவை இன்ன இடத்தில் நிகழவிருக்கின்றன என்பதை முன்கூட்டி அறிதல் இயலும். இன்னும் தீவிரமாக ஆராய்ந்தால், எப்போது அவை நிகழும் என்பதை அறியவும் கூடும்.

முன்னேறிய நாடுகளில் இவ்வகை ஆராய்ச்சியில் நல்ல வளர்மானம் காண்கிறோம். ஆனால் உலகின் பெரும்பரப்பில் ஆராய்ச்சி வசதி இல்லை. ஆகவே, செயல்திறமிக்க அனைத்துலகக் கூட்டுறவும், உதவியும் அவசரத் தேவையாக உள்ளது.

இரண்டாவது வேலை, இயற்கையின் வன்முறைக் கொடுமைகளினின்றும் பாதுகாத்துக்கொள்ளும் வழிகளைக் கண்டு, அவற்றை விருத்தி செய்வதாகும். புயல், நில நடுக்கம் இவற்றைத் தாங்கி நிற்கவல்ல வீடுகளைக் கட்டுவது எவ்வாறு என்றும், ஆற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு என்றும், பனிப்பாறை வீழ்ச்சி, நிலச்சரிவு போன்ற ஆபத்துகளில் மாட்டிக் கொள்ளமால் தப்பிப்பது எவ்வாறு என்றும் நமக்கு ஏற்கெனவே ஏட்டளவில் தெரியும். ஆனால் ஒருசில இடங்களில் மட்டும் அவ்வறிவைச் செயலில் ஒழுங்கு முறையாகப் பயன் படுத்துகிறார்கள். செயலில் பயன்படுத்தும்போது பொருளியல் பிரச்சினை எழுகிறது. வெள்ளக் கட்டுப்பாட்டிற்காகப் பெருஞ் செலவில் பெருமளவில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்த இரண்டாவது வேலை சம்பந்தமாகக் கற்பிக்கும் பிரச்சினை பெரிதும் உண்டு. புயலையுப் நிலநடுக்கத்தையும் தாங்கி நிற்கும் கட்டங்கள் கட்டுவது பற்றிய விதிமுறைகளையும், ஒழுங்காறுகளையும் வகுத்துவிடலாம். ஆனால் பொறியாளர்களும், கட்டடக் கலைஞர்களும் அவற்றை முற்றிலும் நன்கு கற்று அறியாமல், நடைமுறையில் தெளிந்த திறனோடு பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணராமல் போய்விட்டால், எல்லாம் பயனற்றவையாகி விடும். இந்த இரண்டவது வேலை குறித்தும் திறமான அனைத்துலகக் கூட்டுறவு பெருந்தேவையாக உள்ளது.



Photo © Oficina Nacional de Informacion, Peru

பொருளியல் வளம் குன்றிய முன்னேறும் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பெரிய ஆராய்ச்சி நிலையங்கள் அக்கறை கொள்ளவேண்டும்.

மூன்றாவது வேலை, இயற்கை விளைக்கும் இன்னல்களைச் சமாளிப்பதற்காக விரிந்த அளவுத் திட்டங்களை அறிவியல் தொழில்நுட்ப அடிப்படையில் அமைப்பதாகும். திட்டங்கள் வகுப்பதில் ஐக்கிய நாடுகள் சபையும், செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டகமும் உதவிய போதிலும், நாட்டுக்கு நாடு திட்ட அமைப்பில் வேறுபாடுகள் உள்ளன. விரிவான திட்டங்கள் கொண்டுள்ள நாடுகளில்கூட, இன்னல் விளைந்தபின் மீட்புவேலையும், உதவுபணியும் திட்டங்களாக உள்ளன. முன்கூட்டி அறிவதற்கும், மக்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுப்பதற்கும், தக்க பாதுகாப்பு அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்வதில் போதிய கவனம் இல்லை.

திட்டங்களில் சேர்க்கப்படவேண்டியது ஒன்று உண்டு. ஓரிடத்தில் இயற்கை இன்னல் விளைந்ததும் அவசர உதவிக்கு மீட்புக் குழுக்களும், மருத்துவக் குழுக்களும் சில மணிநேரத்தில் வந்து விடுகின்றன. இன்னல் விளைந்த வெகு விரைவில் பொதுப் பணியத்தினருக்கு இருக்க இடம், பணியாற்றுவதற்கு அலுவல் முறை முதலியனபற்றி அவசர முடிவு எடுக்க வேண்டியுள்ளது. இன்னலுக்குள்ளான இடத்தில் மறு ஆக்கமும் மறு குடியமர்வும் செய்வது பற்றியும் நெருக்கடியான நிலையில் அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவசர உதவித் திட்டத்தில் மீட்புக் குழுக்களுடன், தொழில் நுட்பக் குழுக்களும் சேர்க்கப்படவேண்டும். அவ்வகைக் குழு உடனடிக் காரியத்திற்கும், பிற்கால ஆக்க அமர்வு வேலைகளுக்கும் தொழில் நுணுக்க முறையில் உதவும்.

இந்த மூன்று பணிகளையும் வரிசைப்படுத்திக் கூறிய போதிலும், ஒரே சமயத்தில் மூன்றிலும் ஈடுபடலாம். ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களுக்கிடையிலும், இதர அனைத்துலக நிறுவனங்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும், சம்பந்தப்பட்ட பல தொழில் துறைகளுக்கிடையிலும் பெருமளவில் கூட்டுறவும் கருத்தும் பரிமாற்றமும் மூவகைப் பணிகளையும் நிறைவேற்றுவது இலகுவாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டுரையின் தொடக்கத்தில், மனித உணர்வும், பரிவும், அக்கறையும் பொங்குமாறு செய்வதில் இயற்கை இன்னல்கள் தவறுவதில்லை என்று குறிப்பிட்டோம், இன்னல் சமயங்களில் உதவிகள் தாராளமாக வந்து குவிவதில் குறைவில்லைதான். என்றாலும் நம்மை நாமே ஒரு கேள்வி கேட்கவேண்டும். இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும்கூட, இன்னலுக்குள்ளாகி பொருளியல் சுமை தாங்க முடியாது போகும் நாடுகளுக்கும் சமுதாயங்களுக்கும் இன்னும் சிறந்த வழியில் உதவ முடியாதா? இயற்கை இன்னல் காலங்களின் காப்புக்கு என்று உலக அளவில் இன்சூரன்ஸ் ஏற்பாடு செய்ய முடியாதா? அனைத்துலக நிவாரண ஒன்றியம் இது பற்றி ஏற்கெனவே விவாதித்து ஆராய்ந்துள்ளது. இன்சூரன்ஸ் ஏற்பாடு செய்வதில் உள்ள முக்கிய சிரமம், அளவுப் பெருமமும், நிச்சயமற்ற தன்மையுமாகும். இயற்கை இன்னல் பிரச்சினை பற்றிய புள்ளி விவரங்களைக் இக்காலத்திய சிறந்த கணக்கியல் நுட்ப முறை கொண்டு சேகரித்து, உருப்படியான இன்சூரன்ஸ் திட்டம் வகுப்பதற்கான அடிப்படையை அமைக்கலாம். அறிவியலறிஞர்களும், கணக்கியல் வல்லுநர்களும், இன்சூரன்ஸ் துறை அறிஞர்களும் கூட்டுறவுடன் இயங்கி ஆராய்ந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இதுகாறும் கூறியவற்றால், 1970ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளிருந்து நாம் அறிய வேண்டிய பாடம் யாது என்பது விளங்கும். ஒரு நிலையில்லா இயற்கை வன்முறைச் சீற்றம் விளையப் போவதை முன்கூட்டி அறிவதற்கும், வராமல் காத்தற்கும் அறிவியலும் தொழில் நுட்ப இயலும் வழிவகுக்கக் கூடியவை என்பதனை நாம் உணர வேண்டும். உலகத்து அறிவியல், தொழில்நுட்ப வளம் முழுவதும் ஒருமித்துத் தீவிரமாக முயன்றால், சென்ற ஆண்டு விளைந்தவை போன்ற இன்னல்களை வருங்காலத்தில் நிகழாதவாறு தடுத்துவிட முடியும்.

தமிழில்: கு. ராஜாராம்

உள்ளார்ந்த திறமைகள் —பெற்ருேர் தீர்க்கக்கூடிய புதிர்

புகழ்மிகு பிரெஞ்சு எழுத்தாளரும் மருத்துவருமான ஜார்ஜஸ் டுஹாமெல் ''5 வயது வரை ஒவ்வொரு குழந்தையும் ஓர் அறிஞன்'' என்ருர். பள்ளியில் சேர்வதற்கு முன் குழந்தைகளிடம் கற்கும் திறன் மறைந்துள்ளதெனவும், அதை இப்போதுள்ளதைவிட மிகுதியாகப் பயன்படுத்த முடியுமெனவும் நன்கு தெரிகின்றது. ஆகவே குழந்தையின் இயற்கை ஆர்வத்தைத் தூண்டி அதன் அறிவை விரிவாக்க வேண்டுமென இப்போது கல்வியாளரும் உளவியல் வல்லுநரும் வலியுறுத்தி வருகின்றனர் (புகைப்படம் எதிர்ப்பக்கம்).

Photo © G. Bern, Paris



Photo © Look Magazine, New York

போரிஸ் நிகிட்டின்

சிலருக்கு இருக்கும் செயல் ஆர்வமும், திறமையும் வேறு சிலருக்கு இருப்பதில்லையே ஏன்? சிலர் ஆற்றல் மிக்கோராயும், வேறு சிலர் எவ்விதத் திறமையும் அற்றிருப்பதேன்? சிறு வயதில் அருந் திறமும், மிகைத்த அறிவும் பெற்றிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஏன் மேதையாக வளர்வதில்லை? மனித வாழ்வில் எல்லாத் துறைகளிலும் மேதைகள் அபூர்வமாகவே காணப்படுகின்றனரே ஏன்? மனித ஆற்றல் பற்றிய ஆய்வு எப்பொழுதுமே நம் உன்னிப்பான கவனத்தை ஈர்க்கவல்லது.

விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறைகளின் என்றுமில்லாத வேகமான முன்னேற்றம்; நாம் வாழும் உலகு பற்றிய வளர்ந்து வரும் அறிவு; இந்த அறிவைப் பெற வேண்டிய அவசியம் ஆகிய இவையனைத்தும் கல்வியாளர்களுக்கும், மன இயலாளர்களுக்கும் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

மாணவர்களுக்கு மிகுந்த கல்வியறிவை வழங்க வேண்டுமென்றால், அவர்கள் கல்வி பயிலும் ஆண்டுகளை அதிகமாக்க வேண்டும், அல்லது பள்ளிப் படிப்பிற்குரிய திட்டங்களில் புது அம்சங்களைப் புகுத்த வேண்டும்.

போரிஸ் நிக்கிட்டின் பொறியியல் துறையில் பயிற்சி பெற்ற போரிஸ் நிக்கிட்டின் குழந்தைப் பருவ வளர்ச்சி பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவருக்கு, இப்போது 6 குழந்தைகளுள்ளனர். அவரும் ஆசிரியையாகிய அவர் மனைவியும் சேர்ந்து தமது கொள்கைகளையும் குழந்தைக் கல்வியில் தாம் பெற்ற அனுபவத்தையும் திரட்டி "ஆர் வி ரைட்" எனும் நூல் எழுதியுள்ளனர். இவை பற்றி அவர் அண்மையில் எழுதிய ரஷ்ய நூல் "ஹைபாதெஸிஸ் ஆன் தி எமர்ஜென்ஸ் ஆஃப் கிரியேட்டிவ் எபிலிட்டீஸ்" என்பது.

ஆனால் ஏற்கெனவே வயதுவந்த தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை செய்யும் நேரத்தை விட, பள்ளி மாணவர்கள் கல்வி பயிலும் நேரம் கூடுதலாகவே இருக்கிறது-இந்தப் பளு மாணவர்களின் உடல் நலத்தை பாதிக்கக் கூடியதாகும்.

மேலும், மாணவர்கள் பெறும் கல்வியறிவின் ஆயுள் காலம் குறைந்து கொண்டே வருகிறது அதாவது புத்தறிவு ஏற்கெனவே கற்றதைப் பழமையாக்கி விடுவதால், மாணவர்கள் பெறும் கல்வியறிவை இடையறாது மாற்றியமைத்துக் கொண்டே வரவேண்டியுள்ளது. ஒன்றன் பின் ஒன்றாகப் பழைய தொழில் முறைகள் மறைந்து கொண்டு வருகின்றன; புதுப் புதுத் துறைகள் தோன்றிக் கொண்டும் வருகின்றன. அநேகமாக எல்லாப் படைப்புத் துறைகளிலும், பண்பாட்டுத் துறைகளிலும் செயல் வேகம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே படைப்பாற்றலையும், அறிவு வளர்ச்சியையும் பெருக்குவது கல்வித்துறையின் தலையாய பணியாகும். மேதைகள் எங்கிருந்து, எப்படித் தோன்றுசின்றனர் என்பதை அறிந்துகொள்ள சமுதாயம் விழைகிறது.

இது பற்றி எத்தனையோ விதமான ஊகங்கள் பல நூற்றாண்டுகளாக எடுத்துரைக்கப்பட்டே வந்துள்ளன. மேதைகள் பலரும், ஆற்றல் மிக்க ஆடவர் பெண்டிர், பலரும் சாதாரண மனிதர்களை விட மூளை அதிகமுடையவர்களாக இருந்தமையால், ஆற்றல் மூளையின் அளவைப் பொருத்தது என நம்பப்பட்டு வந்தது. எனினும் சிறிய தலையுடையோர் சிலரும், மூளையின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும் வாய்ப்பை இழந்தோர் சிலரும் மேதைகளாக இருக்கின்றனர்.

தலை சிறந்த ஃபிரெஞ்சு இரசாயன வல்லுநராக இருந்த லூயி பாஸ்டியர் 1868ஆம் ஆண்டில் மூளையில் இரத்தப் பெருக்கால் பெரும் அவதியடைந்தார்; மூளையின் ஒரு பகுதி மட்டுமே இதன் பின்னர் செயல்பட்டு வந்தது; அவர் உறுப்புக்களில் சிலமுடங்கியும் விட்டன. இருப்பினும், அவர் தம் பரிசோதனைகளைத் தொடர்ந்து செய்து வந்ததோடு அடுத்த இருபதாண்டுகளில்தான் அவருடைய அற்புதமான மிகப் பெரிய கண்டுபிடித்தங்கள் நிகழ்ந்தன.

மூளையின் உயிரணுக்களின் அமைப்புப் பற்றியும்—குறிப்பாக மூளை மேலுள்ள சாம்பல் நிறப் பொருள் (கார்டெக்ஸ்) பற்றியும் - சிறப்பாக ஆராயப்பட்டன. இத்தகைய ஆராய்ச்சிகள் மூலமாக மேதைகளின் மூளையணுக்கள் சாதாரண மக்களின் மூளையணு அமைப்பிலிருந்து சில சமயம் சிற்சில மாறுதல்கள் உடையவையாய் இருக்கின்றன என்பது புலனாயிற்று. ஆனால் எந்த மாறுதல்கள் ஒருவரை மேதை என நிர்ணயிக்கின்றது என்பது ஒரு மர்மமாகவே இருந்து வருகிறது.

குடும்பத்தின் தலைப்பிள்ளை தான் ஆற்றல் மிக்கது என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டு வந்தது. இக்கொள்கையை ஆதரித்த பலர்; ஆனால் புள்ளி விபரங்களை இக்கூற்றைப் பொய்ப்பித்து விட்டன. அனைத்துலகிலும் மேதைகளாகவும் பேராற்றல் படைத்தோராகவும் கருதப்பட்டு வரும் எழுபத்து மூவர் பற்றி ஆய்ந்ததில், இவர்களில் நால்வர் தாம் தலைக் குழந்தையாக இருந்துள்ளனர். மில்டன், லியனார்டோ டா வின்ஸி, ஹென்ரிக் ஹொன, அண்டன் ரூபின்ஸ்டைன், பெஞ்சமின் பிராங்க்ளின், மெண்டெலெயெவ் ஆகியோர் குடும்பங்களில் பதினேழாவது குழந்தையாகப் பிறந்திருக்கின்றனர்! இரஷ்ய உயிர் நூல் வல்லுநரான இல்யா மெக்னிகோவ் பதினாறாவது குழந்தை!

திறமை என்பது பாரம்பரியமாகக் கிடைக்கப்பெறுவது என்னும் நம்பிக்கை விடாப்பிடியாக நிலவி வருகிறது. எனினும் மரபுவழிப் பண்பியலின் பாரம்பரியம் பற்றிய இயலின் அண்மைக் காலப் பல கண்டுபிடித்தங்கள் இது பற்றி ஒருமித்த கருத்தைக் கூறவில்லை.





Photos © APN

3 வயதில் வாசிக்க கற்றல் அரிது. ஆனால் சோவியத் கல்வியாளரான போரிஸ் நிக்கிட்டினின் குழந்தைகளுக்கு அஃது இயற்கையாக இருக்கின்றது. கணிதம் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. ''இளமையில் பயிற்சி'' எனும் கொள்கைப்படி நிக்கிட்டின் ஒரு வயதிலே அவர்களுக்கு எழுத்துகளும் எண்களும் வரையப் பெற்ற அட்டைகளையும் கட்டைகளையும் கொடுத்தார். உடல் வளர்ச்சியை அவர் புறக்கணிக்கவில்லை. அவர்கள் தந்தையுடன் வெறுங்காலோடு பனியில் ஓடியாட எப்போதும் தயாராக இருந்தனர்.



கீழே காணும் உண்மைகளுக்கு நாம் என்ன விளக்கங் கூற முடியும்? குழந்தைகள் சிறு வயதிலேயே தம் படைப்பாற்றலினால் வயது வந்தோரை பிரமிப்படையச் செய்கின்றனர். ஆனால் இதே குழந்தைகள் பெரியவர்களாகும் போது மேதைகளாவதில்லை; ஆற்றல் படைத்தோராகக் கூட ஆவதில்லை! குழந்தைப் பருவத்தில் அவர்களிடம் காணப்பட்ட வயதுக்கு மீறிய திறமைகளும், இயல்பாகயிருந்த வலிமைகளும் எங்கே சென்று மறைந்தன? அநாதை நிலையங்களிலும், குழந்தை விடுதிகளிலும் வளரும் பெரும்பாலான குழந்தைகளுக்கு பேச்சுப் பழக்கங்கள் ஏன் மெதுவாகவே வளர்ச்சியடைகின்றன. பள்ளிக்கூடங்களில் அவர்கள் கல்வி கற்பதும் ஏன் திறமையாக இருப்பதில்லை?

இக்கேள்விகளுக்கான விடைகளை நாம் தேடும்போது செயலூக்கம் அல்லது வினைத்திறம் (Faculties) என்று நாம் கூறுவதின் இயல்புதான் என்ன என்பதைச் சிறிது கவனிப்போம்.

காடுகளில் ஓநாய்கள், கரடிகள், வாலில்லாக் குரங்குகள் இவற்றிடையே வாழ்ந்து அல்லது வளர்ந்த பின் எட்டு முதல் பத்து வயதுக்குள் மனித சமுதாயத்தில் வந்து சேர்ந்து விட்ட பலரைப் பற்றி விஞ்ஞானிகள் அறிந்திருக்கின்றனர். இச்சிறுவர்களைப் பேச வைப்பதற்காகப் பெரு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் இக்குழந்தைகளில் ஒன்று கூட இயல்பாகப் பேசக் கற்றுக்கொள்ள முடியவில்லை. கல்கத்தா அருகில், ஓநாய்களின் குகை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட கமலா என்னும் எட்டு வயதுச் சிறுமி, இதன் பின்னர் ஆறாண்டு காலங்களில் முப்பது சொற்கள் தான் உச்சரிக்கக் கற்றுக் கொண்டாள்.

பேசக் கற்றுக் கொள்வது என்பது எந்த வயதிலும் சாத்தியமாகக் கூடியது அல்ல, என்பது இதிலிருந்து புலனாகும். சில சூழ்நிலைகளில், உள்ளார்ந்த ஆற்றல் (Latent Talent) செயலூக்கமாக (Faculty) வளர்ச்சி பெற்று, அதன் காரணமாகக் குழந்தைகள் எளிதில் பேசக் கற்றுக் கொள்கின்றன. வேறு சில சூழ்நிலைகளில், இப்படிப் பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் குறைந்து, முன்னேற்றம் தடைப்படுகிறது. இன்னும் சில சூழ்நிலைகளில் இந்த உள்ளார்ந்த ஆற்றல் செயல்படாமலே நின்று விடுகிறது.

உடல் வலியும், உள நலனும் பெற்றிருக்கும் ஒவ்வொரு குழந்தையும், பிறந்த பொழுதிலிருந்தே தன் படைப்புத் திறனை வளர்த்துக்கொள்ளும் அளப்பரிய ஆற்றல் பெற்றிருக்கிறது. இத்திறனை ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்ய எவ்வளவு சீக்கிரம் முயல்கிறோமோ அவ்வளவு நல்லது என்பது என் கருத்து. ஆனால் படைப்புத் திறன் வளர்ச்சி பெறுவதற்கு, ஒரு குழந்தையின் வாழ்வில் மிக முக்கியமான கால கட்டத்தை அதன் மதிப்பை உணராது புறக்கணித்து விடுகிறோம்.

ஐந்து குழந்தைகளை வளர்த்து ஆளாக்கிய என் அனுபவத்திலிருந்து ஒரு சான்று தருகிறேன். நான் இப்பொழுது வர்ணித்துக் கொண்டிருக்கும் வடிவத்தில், குழந்தைகளின் படைப்புத் திறன் பற்றிய கருத்துக்களே உருவாவதற்கு முன் எங்களுடைய இச்சோதனை துவங்கப்பெற்றது. எங்கள் திட்டமும், அதைச் செயல்படுத்த நாங்கள் வகுத்த முறையும் மிகவும் சுலபமானவை; இதில் அதிசயமான அம்சம் எங்கள் திட்டத்தின் விளைவுதான்!

எல்லாப் பெற்றோரையும் போலவே, நானும் என் மனைவியும், எங்கள் குழந்தைகள் உடல் வலிவிலும், உடல் நலத்திலும் உயர்ந்தவர்களாய் வளர்ச்சி பெற வேண்டும் என விழைந்தோம். இருப்பினும் இத்துறையில் கல்வி—மருத்துவக் கொள்கைகள் பற்றி—அதிலும் குறிப்பாக மன வளர்ச்சி துவங்கும் காலம் பற்றி—எங்களுக்குப் பல ஐயப்பாடுகள் இருந்தன. இக்கொள்கைகள் ஆதார பூர்வமான விஞ்ஞான அடிப்படைகளைக் கொண்டவையா என்று கூட நாங்கள் சந்தேகித்தோம்.

பள்ளி ஆசிரியர் ஒருவரின் குடும்பத்தினால் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்குப் பெரிதும் முயன்று குழந்தையின் உலகை விரிவுபடுத்தி, வயது வந்தோர் உலகை அமைக்க உதவும் உண்மையான பொருள்கள், சாதனங்கள், கருவிகள், புத்தகங்கள் ஆகியவற்றால் நிரப்பி, பலருடன் பழகும் நல்வாய்ப்புக்களையும் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தீர்மானித்தோம்.

கருவிகள் சிறியவைதாம் எனினும், வேலை செய்வதற்குப் பயன்படுத்தும் உண்மைக் கருவிகள் அவை. பேனாக் கத்திகளும், கைக் கோடாரிகளும் கூர்மையானவையாகக் கொடுத்தோம். தராசில் உண்மையான பொருள்களை நிறுத்துப் பார்க்கமுடியும். வளையங்களிலும், கம்பிகளிலும், தொத்துக்கயிறுகளிலும் உடற்பயிற்சி செய்ய வாய்ப்பளித்தோம்.

விளையாட்டுச் சாமான்களும் பயன் தரக்கூடியவையாகவே தேர்ந்தெடுத்தோம். ஒரு குழந்தை ஊர்ந்துசெல்லும் அளவுக்கு மரக் கட்டைகளினாலும், பலகைகளினாலும் சிறு வீடுகள் கட்டப் பயிற்சி தரப்பட்டது. இச்சிறு வீடுகளுக்கு மின்னியல் கருவிகள் மூலம் மின்சார வசதியும் செய்து கொடுக்கப் பெற்றது. தக்க வரைபடங்களை வைத்து விளையாட்டு இயந்திரங்களும் மாதிரிப் படிவங்களும் (மாடல்) அமைக்கப் பட்டன. குழந்தைகளின் அறைகளின் சுவர்களில் தரைப் படங்களும், விளக்க அட்டவணைகளும், அரிச்சுவடிகளும் கட்டித் தொங்க விடப்பட்டன. சுவர் மாடங்களில் பாட நூல்களும், அமைப்புக் கருவிகளும் மேற்கோள் நூல்களும் வைத்திருந்தோம்,

சிறிய - ஆனால் இயற்கையான - இவ்வுலகத்தினுள் குழந்தைகள் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ள முழுச் சுதந்திரம் கொடுத்திருந்தோம். பள்ளிக் கூடங்களில் சாதாரணமாக அமுலிலிருக்கும் விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட்டு, பின் என்ன நடக்கிறதென்று உன்னிப்பாக கவனிக்கலானோம்.

ஆனால் ஒரு குழந்தை எவ்வளவு சீக்கிரம் படிக்கக் கற்றுக்கொள்ள முடியும் என்று இதுவரை எங்களுக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. எல்லோருக்கும் மூத்தவன் ஒரு வயதான போதே அட்டைகளிலும், கட்டைகளிலும் வரையப்பட்டிருந்த எழுத்துக்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். நாங்கள் அவனுக்கு ஒரு கரும்பலகை சாக்பீஸ், தாள், பென்சில்கள், பிளாஸ்டிக்கினாலும், கம்பியினாலும் செய்யப்பட்ட எழுத்துக்கள், குழந்தைகளுக்கான

துவக்கப் புத்தகங்கள் ஆகியவற்றைக் கொடுத்தோம்.

இதன் விளைவு எங்களையே வியப்பிலாழ்த்திவிட்டது. குழந்தைகள் மிகச் சிறு வயதிலேயே படிக்கக் கற்றுக் கொள்ள முடியும் என்பதைக் கண்டோம். மூத்த குழந்தையான அல்யோஷா இரண்டு வயது எட்டு மாதத்திலும் தங்கள் முதல் சொல்லைப் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இவர்களுக்கு மூன்றரை வயதான பொழுது துவக்கப் பள்ளியின் முதல் வகுப்பில் ஒரு குழந்தை எந்த அளவுக்குக் கணக்குத் தெரிந்திருக்குமோ, அந்த அளவுக்குக் கணக்குத் தெரிந்து கொண்டார்கள், (சோவியத் பள்ளிகளில் துவக்கக் கல்வி குழந்தைக்கு ஏழு வயதில் ஆரம்பமாகிறது). படிப்பு முடிந்ததும் வரை படங்களிலும் புத்தங்களிலும்—ஏன் பாட நூல்களிலும் கூட- இவர்கள் ஈடுபாடு கொள்ளலாயினர். இலக்கணம், கணக்கு ஆகியவை பற்றிய தகவல்களை பாட நூல்களிலிருந்தும், உணவருந்தும் போது நிகழும் உரையாடல்களிலிருந்தும் குழந்தைகள் வெகு எளிதில் சேகரிக்கலாயினர். பெற்றோருக்குக் கூட அவர்கள் வகுத்தல் கணக்குப் போட ஆரம்பித்துவிட்டனர். ஆறு வயதில் அவர்கள் பாதைகள் வரையவும், தரைப் படங்களைப் புரிந்து கொள்ளவும், வயல்களிலும், வனங்களிலும், திசை தெரிந்து செல்லவும் கற்றுக் கொண்டனர்.

அல்யோவுக்கு ஐந்து வயதானதும். தன் தங்கைகளுக்கு உணவு பெற்று வருவதற்காக, ஒரு மைல் தொலைவிலிருந்த ''பச்சிளங் குழந்தைகள் உணவு நிலையத்துக்கு'' நடந்து செல்லலானான். போல்ஷெவோவிலிருந்து மாஸ்கோவுக்கு (இருபத்து நான்கு மைல் தொலைவு), அவன் முதன் முதலில் புறநகர் இரயிலில் சென்றபோது அவனுக்கு வயது ஏழரை: தனியாக அவன்சென்றது பற்றி நாங்கள் அச்சப்படவில்லை. இரண்டாண்டுகளுக்கு முன்பு சிறுவர்கள் பள்ளிக்குச் சென்றபோது அவர்களால் பத்து இலட்சம் வரை எண்களைப் படிக்கவும், சுலபமான பின்னக் கணக்குகளைச் செய்யவும், நீளம் - காலம் - எடை ஆகியவைபற்றிய அளவைகளை எளிதில் கையாளவும் முடிந்தது.

அல்யோஷா மூன்றாண்டுப் பள்ளிப் படிப்பை ஒரே ஆண்டில் முடித்தான். மூன்றாவதாண்டு மாணவர்கள் கணக்குப் போட்டியில் அவன் முதலிடம் பெற்றான். ஆண்டன் ஓராண்டு பின்னர் பள்ளியில் சேர்ந்தான். எனினும் அவன் வெகு விரைவில் தன் சகோதரன் இடத்தைப் பிடித்து விட்டான். இப்பொழுது ஒன்பது வயதாகிறது அவனுக்கு; ஆனால் பதின்மூன்று வயதுச் சிறுவர் நடுவிலும் அனாயாசமாகச் செயல் படுகிறான். கடைசியில் நடந்த கணிதப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்துத் தன் தமையனையே விஞ்சி விட்டான்.

துவக்கப் பள்ளிகளில் பெண்களும் சம வேகத்தோடு முன்னேறுவர். மிகச் சிறு வயதிலேயே படிக்கக் கற்றுக் கொள்ளுவதன் மூலம், சரியாக எழுதுவதற்கும் சுலபமாக வருகிறது என்பதை நாங்கள் கண்டோம். இந்த இரு சிறுவர்களும் தங்கள் பள்ளி முதலாண்டிலேயே இலக்கண வழுவின்றி எழுதினர்.

இணைத்தல், இயற்கைத் தொடர்புகளை விளக்குதல், வகைப் படுத்துதல் ஆகியவற்றில் உளவியல் சோதனைகள் இச் சிறுவர்களுக்காக வைத்தேன், பதினைந்து வயதுச் சிறுவர்களுக்கொப்ப அவர்கள் இச்சோதனைகளைச் செய்தார்கள்.

துவக்கப் பள்ளியில் சேர முடியாத குறைந்த வயதுடைய குழந்தைகளுக்கு முக்கியமான புதுப்புதுச் சிக்கல்களைத் தீர்க்கப் பெரும் வாய்ப்புகள் உள்ளன. இதைச் செய்வதற்கு அவர்களுக்கு ஏராளமாக ஓய்வு நேரமும் இருக்கிறது. இதனால் தான் அவர்களுடைய படைப்பாற்றல்கள் முன்னதாகவே துளிர்க்க ஆரம்பிக்கின்றன. ஆனால் அவர்கள் வளர வளர அவர்களை எதிர் நோக்கும் குழப்பமான சிக்கல்களின் தொகை குறைகிறது! புதியனவும், புரியாதனவும் பள்ளியில் விளக்கப்பட்டு விடுகின்றன. மேல்வகுப்புக்களுக்குச் செல்லச் செல்ல அவர்களுக்கு ஈடுபாடுள்ள துறைகளில் கவனம் செலுத்துவதற்குரிய நேரம் குறைந்து கொண்டே வருகிறது. இவையெல்லாம், மலர்ந்து வந்த படைப்பாற்றல்களைக் கட்டுப்படுத்துவதோடு, அவற்றை அணைத்து விடவும் கூடும்.

கணிதத் திறமை இயல்பாகவே அமையும் ஒன்று என்றிருக்குமானால், எல்லாப் பள்ளிகளுமே சம ஆற்றலுடைய கணக்குப் புலிகளைத் தோற்றுவிக்க முடியும். ஆனால் இப்படி எங்கும் நடப்பதில்லையே! எனவே தான் கணிதம் போதிப்பதற்குச் சிறப்புப் பள்ளிகளும், சிறப்பாசிரியர்களும், அதற்கான தனி வழிவகைகளும் இருக்கின்றன. இது கணிதக்கலையியலில் உள்ள ஈடுபாடு வளர்வதற்குரிய நல்வாய்ப்புக்களைப் படைத்தளிக்கின்றது. இத்தகைய நல் வாய்ப்புகள் பிற பள்ளிகளில் கிடைப்பதில்லை.

அறிவியலின் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், ஒன்று சேர்ந்து படிக்கும் குழந்தைகளின் வயது அதிகரிக்க, அதிகரிக்க, அவர்களிடையேயிருந்து ஆற்றலுடையோர் தோன்றுவது மிகக் குறைவாகவேயிருக்கும். மாறாக; ஒன்று சேர்ந்து படிக்கும் குழந்தைகளின் வயது குறைவாக இருந்தால், அவர்களிடையேயிருந்து ஆற்றல் மிக்க குழந்தைகள் தோன்றுவது அதிகமாகயிருக்கும்.

இவ் வகையில் செய்யப்பட்டு வரும் புதுப் புது ஆராய்ச்சிகள் கல்வித் துறையில் அளப்பரிய மாறுதல்களை ஏற்படுத்தக்கூடும். குழந்தைக்குக்கல்வி கற்பிப்பதை அதன் முதல் வயதிலேயே துவங்கி விட வேண்டும் என்ற கருத்துக்கு நல்லா தரவு இருக்கிறது.

குழந்தைப் பருவத்திலேயே கல்வி கற்பிப்பதற்கான அனைத்துலக நிறுவனத்தின் பேரவையில் பேசிய ஃபிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர் ரெனெலாலோ ''குழந்தையின் முதல் சில ஆண்டுகள் அதிமுக்கியம் வாய்ந்தவை என்பதை ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. இச் சில ஆண்டுகள் நாம் எண்ணிப் பார்த்திராச் செல்வங்கள் படைத்தவை, பிறப்புக்கும், இளமைக்கும் நடுவிலுள்ள காலம் குழந்தையின் மூன்று வயதுப் பருவம் தான் என்றும் அவர் குறிப்பிட்டார். அமெரிக்கக் கல்வியாளரான ராபர்ட் எல். நார்ண்டைக்கும் அவருடைய உதவியாளர்களும் தங்களுடைய கணிப்புகளிலிருந்தும் இதே முடிவுக்கு வந்துள்ளனர். ''பிறந்து மூன்று வயதடையும்போது மனிதன் அவனுடைய மனோ வளர்ச்சியின் நேர் பாதிக்கு வந்து விடுகின்றான்'' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

தமிழாக்கம்: எம். அப்துல் வஹ்ஹாப்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரும் நிகழ்ச்சிகளைத் திறனாய்ந்து மதிப்பிடும் ஆற்றல் வளர்ப்பது வருங்கால குடிகளின் கல்வித் திட்டத்தில் இடம் பெற வேண்டும். தொலைக்காட்சியின் தொழில் நுட்பங்களையும் முறைகளையும் நன்கு அறிந்த எவரும், மக்களை மயக்க முயலும் முறைகளைக் கண்டுபிடித்து விடக் கூடுமாதலால், தொலைக்காட்சியைக் கண்டு வளர்ந்து, அதன் நுட்பங்களை அறிந்த சிறுவர்கள், வயதுவந்த பிறகு தொலைக்காட்சியை ஒரு புது விளையாட்டுக் கருவியாகப் பெற்ற முதியோரைப்போல் எளிதில் நம்பும் இயல்புடையவராகவும் சூது அறியாதவர்களாகவும் இரார்.

அவர்கள் தாம் காணும் பலவகை நிகழ்ச்சிகளை இயல்பாகவே மதிப்பிடும் திறமை பெறுவர்; உண்மைக்கும் கற்பனைக்குமுள்ள வேறுபாட்டைக் கண்டறிவர்; இயற்கை, செயற்கைப் பண்புகளைப் பிரித்தறிவர்; உண்மையான கலைப்பொருளுக்கும் போலிக்குமுள்ள வேறுபாட்டைக் காண்பர்.

தொலைக்காட்சி நமது பண்பாட்டைப் பண்டைய குல நிலைக்குக் குறைந்திருக்கலாம். ஆனால் அக்குலம் விரைவில் இன, மத, வகுப்பு வேறுபாடற்ற மனித குலமாக மாறும். புறச்சூழ்நிலை உகந்ததாக இருக்குமெனில், அக்குல மக்கள் அனைவரும் திறனாய்வு, அறிவு, பண்பாடு ஆகியவற்றில் வளர்ச்சிபெறும வாய்ப்பு பெறுவர். மனித அறிவு முழுவதையும் ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்க வல்ல மின்ம செய்தித் தொடர்புக் கருவி வரலாற்றில் முதல் முறையாக இவ் வாய்ப்புகளை அளிக்கின்றது.

நாளடைவில் அளவே மனிதப் பண்பாட்டின் தரத்தையும், அதன் வாயிலாக மனித வாழ்வின் தரத்தையுமே உயர்த்தக் கூடிய அடிப்படையாக அமையலாம்.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்சு

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புக்கு மிகப் பழமையான சாதனமான புத்தகத்தை மேலும் திறமையாகப் பயன்படுத்துவது பற்றியும் யுனெஸ்கோவின் திட்டம் ஆராயும். 1972ஆம் ஆண்டை அனைத்து நாட்டுப் புத்தக ஆண்டாகக் கொண்டாட வேண்டுமென்று பொது மாநாடு உற்சாகமாக ஏற்றுக் கொண்டது. (புத்தகத்தைத் திருப்பி, முந்திய பக்கங்களைப் படிக்கலாம். டெலிவிஷன் கல்வி ஒலிப் பரப்பில் அவ்வாறு செய்ய முடியாது). இப்பொழுது நமக்குக் கிட்டியுள்ள பல சாதனங்களில் விலை குறைவாகவும் வசதி மிக்கதாகவும் உள்ளது புத்தகம் தான். பெருவாரியான மக்களுக்கு அறிவைப் பரப்பக் கூடிய சாதனமாக இன்றும் விளங்குவது புத்தகமே.

புத்தக வளர்ச்சி நிலையங்களைக் கராச்சி, பொகோடா ஆகிய இடங்களில் யுனெஸ்கோ ஏற்கெனவே நிறுவியுள்ளது. தங்கள் புத்தக வெளியீட்டுத் திட்டங்களில் உள்ள குறைகளை ஈடு செய்யப் பிறநாட்டுப் புத்தகங்களின் பதிப்புரிமையைப் பெற்று, அவற்றை வெளியிட, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்ய, பதிப்புரிமைத் தகவல் நிலையம் ஒன்றும் விரைவில் நிறுவப்படும்.

யுனெஸ்கோவின் 16வது பொது மாநாட்டின் மையக் கருத்தைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ‘வளர்ச்சி’ என்ற ஒரே சொல் பொருத்தமானதாக இருக்கும். பழமையின் இழிவுகளைக் களைந்து விட்டு, வளர்ச்சிக்கான எல்லையற்ற வாய்ப்புக்களை வெளிபடுத்திப் பயன்படுத்த, வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டியு அவசிய, அவசரத் தேவை தான், மாநாட்டில் ஒவ்வொரு விவாதத்திலும் ஓங்கி நின்றது.

மாநாட்டின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில், மாநாட்டுத் தலைவரும், ஆர்ஜென்டினாவின் முன்னாள் தேசியக் கல்வி அமைச்சருமான, அட்டிலியோ டெல்ஓரோ மெய்னி பின்வருமாறு கூறினார்:

‘‘வளர்ச்சிக்கான இரண்டாவது பத்தாண்டில்; உறுப்பினர் நாடுகளுக்கு மேலும் உதவி அளிக்கும் வாய்ப்பை யுனெஸ்கோ பெறும். வளர்ச்சிக்கான மூலமும், கருவியும், வளர்ச்சியால் முக்கிய பலன் பெறுபவனும் மனிதன் தான் என்பதையும், அந்த வளர்ச்சியால் சமூகம் முழுவதும் பயனடைய வேண்டும் என்பதையும், உணர்த்துவதில் முக்கிய தொண்டாற்றியுள்ளது யுனெஸ்கோ தான். வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார ஏற்றமோ, பொருள்களைத் வாங்கித் துய்க்கும் சமூகத்தின் பொருள் வசதிப் பெருக்கமோ மட்டுமல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் உயரவும் அவன் நல உரிமைகளும் அவன் கண்ணியமும் போற்றப்படவும் வகை செய்வதே, வளர்ச்சி’’

இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டில் வாசற்படியில் நிற்கும் யுனெஸ்கோ, மாறுதல் இணைந்த தொடர்ச்சி அடிப்படையில் வளர்ச்சி காணும் பாதையை மேற்கொண்டுள்ளது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளின் சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு, வருங் காலத்தின் அறைகூவலைப் புத்தம் புது எண்ணங்களுடன் எதிர்நோக்கும் ஆயத்தமாய் நிற்கிறது யுனெஸ்கோ.

தமிழில் : கா. திரவியம்

யுனெஸ்கோ செய்தியறை

ஐயாயிரம் ஆண்டுகள் மூத்த கொரிய வரலாறு

கொரியாவைப் பற்றி முழுமையாக (ஆங்கிலத்தில் எழுதப்பட்ட) முதல் வரலாறு இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றது. முன்னணி கொரிய வித்தகர்களால் எழுதப்பட்ட, 300 பக்கங்கள் கொண்ட இத் தொகுதி, யுனெஸ்கோவின் உறுதுணையுடன் தயாரிக்கப் பட்டுள்ளது. கொரியாவின் ஐயாயிரம் ஆண்டுகள் மூத்த வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப்பற்றி மற்ற நாடுகள் சிறப்பாக அறிந்து போற்றும் வண்ணம் இது உருவாக்கப் பட்டுள்ளது.

கலைக்கூடம் ஒன்று தோன்றுகிறது

நவீன கலைக்கூடம் ஒன்றிற்கு அடிப்படையாகத் திட்டமிடப்பட்ட கலை நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கான வேலை, கராச்சியின் (பாகிஸ்தான்) மத்தியில் குன்று ஒன்றின் மேலான நிலப் பரப்பில் நடந்து வருகிறது. கூட்டுறவு முறையிலும் தன்னைத் தானே செலவுக்கு ஈடுகட்டிக் கொள்ளும் முயற்சியோடும் இந்தத் திட்டத்தை பாகிஸ்தானத்துக் கலைஞர்களும் மற்றும் கலை-கலாச்சாரப் பணிகள் ஊக்குவிப்போருமாகச் சேர்ந்து நிறைவேற்ற இறங்கியுள்ளார்கள். இலாப நோக்கற்ற ஒரு நிறுவனம் இக் கலைக் கூடத்தை நடத்தும்.

குற்றஞ்செய் ஆறு அம்சங்களைப் பின் தொடர்ந்து பிடித்தல்

காற்று வெளியைச் சுத்தமுள்ள தாக்கும் வழிவகைகளைக் கண்டு நிறுவும் நோக்கத்துடன், காற்று வெளியை அசுத்தமாக்கி வரும் பொதுவான ஆறு பொருள்களான சல்ஃபர்டை ஆக்ஸைடு, புழுதியும் பிற தூசித்துகள்களும், கார்பன் மானோக்ஸைடு, ஆக்ஸிடன்ட்ஸ், நைட்ரஜன் ஆக்ஸைடு மற்றும் ஈயம் ஆகியவற்றை உலக ஆரோக்கிய அமைப்பு (WHO) ஆராய இருக்கின்றது. காற்று வெளியை அசுத்தப்படுத்துவது எது என்பதை முன் நின்று கண்டு பிடிக்கும் பணியில் உலகம் முழுவதும் ஈடுபட்டுள்ள இவ்வமைப்பின் நிலையங்களும் ஆய்வுக்கூடங்களும் திரட்டியுள்ள விவரங்களைக் கொண்டு, மிகவும் அதிகமாக அசுத்தப்படுத்தப் படுகிற பகுதிகளைச் சுட்டிக் காட்டவும், எந்த அளவுக்கு ஆரோக்கியத்திற்கு ஊறு நேருகிறது என்பதைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்தப்படும்.

சயன்ஸ் ஃபார் தி பிலைன்ட்

கண் பார்வையற்ற விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள், பொழுது போக்குக் கலையில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் சாதாரண மக்களுக்குமாக அறிவியல் செய்திகளைத் தருவதற்கும், அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் தொழில் நுட்பக் கருவிகளைக் கண்டு அபிவிருத்தி செய்வதற்குமாக, இலாப நோக்கற்ற ‘சயன்ஸ் ஃபார் தி பிலைன்ட்’ (பார்வையற்றோருக்கு உதவும் அறிவியல்) என்னும் அமைப்பொன்று அமெரிக்காவில் பணியாற்றி வருகிறது. அண்மைப் போக்குகள் வரை அறிவியல் துறையின் இன்றைய வளர்ச்சியைக் கண் பார்வையற்ற விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள-குரல் பதிவு செய்யப் பட்ட சஞ்சிகைகள் 24,000 வெளி வருகின்றன. அமெரிக்கா மற்றும் கனடாவில் ஏறக்குறைய ஆயிரம் பேர்கட்கு இச் சஞ்சிகைகள் உதவி வருகின்றன. 221, ராக்ஹில் ரோடு, பாலாகன்வைடு, பென்சில்வேனியா 19004, அமெரிக்கா-என்னும் முகவரியிலிருந்து ‘‘சயன்ஸ் ஃபார் தி பிலைன்ட்’’ நிறுவனம் இயங்கி வருகிறது.

புறவெளி அசுத்தத்திற்கு எதிரான ‘நீர்க்குமிழித் தடுப்பு’

பெல்ஜியத்தின் மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளிவரும் எண்ணெய்ப் புகையினைத் தடுப்பதற்காக ஆன்ட்வெர்ப் துறைமுகத்தில் ஒரு ‘நீர்க்குமிழித் தடுப்பு’ உபயோகப் படுத்தப் படுகிறது. ஸ்வீடிஸ் நிறுவனமொன்று உருவாக்கியுள்ள இத் தடுப்பு, துறைமுகப் படுகைமீது போடப்படும் துவாரங்கள் நிறைந்த ஒரு தண்ணீர்க் குழாயாகும். திணிக்கப்பட்ட காற்று குழாய்க்குள் செலுத்தப் படும்போது, மேல் பாகத்தில் எழும் குமிழிகள், மிகக் கடினமான எண்ணெய்ப் புகைப் பொருளைப் பரவாது தடுக்கும் சக்தி வாய்ந்த தடுப்பாக ஆகின்றன. நீர்க்குமிழித் தடுப்புகளால் இருவகை அனுகூலங்கள் உள்ளன. முதலாவது அசுத்தமாவதற்கு முன்னமேயே, அந்த இடத்தில் இது அமைக்கப்பட்டு விடுகிறது. இரண்டாவது, புகைப் பொருள் அசுத்த மண்டலத்தூடே இடர்ப்பாடில்லாமல் கலங்கள் கடலில் செல்வதற்கும் வழி செய்து தருகிறது.

மனிதர் தற்போது நுழைய முடியாத உயிரினங்கள் ஆய்வுக்கூடம்

மனிதனால் ஏற்படும் இடையூறுகளால் பாதிக்கப் படாமல் ‘‘இயற்கையின் சமச்சீர் நிலையில்’’ காட்டு உயிரினங்கள் எப்படி ஒன்றோடொன்று எந்தச் சூழலில் வாழ்கின்றன என்பது குறித்து இத்துறை அமெரிக்க வல்லுநர்கள் ஆரேகான், ரிச்லாண்டுக்கு அருகில் 120 கல் பரப்புள்ள ஒரு பாலைவனத்தின் தாழ்ந்த மேட்டுப் பரப்பில், ஆராய்ந்து வருகின்றார்கள். ‘‘விளைச்சலில்லா நிலத்தில் உயிரினங்கள் ஆய்வுக்கூட’மான இப் பகுதி, பெரும்பாலும் விளையாத நிலமாகும்; மான், முயல்கள், பாம்புகள், சுண்டெலிகள், கருந்தேனீக்கள், வல்லூறுகள், மற்றும் ஆந்தைகளே பிரதானமாக இவ்விடத்தில் வாழ்கின்றன. புளூடோனியத் தொழிற்சாலைகளைச்

சுற்றிலும் ஒரு பாதுகாப்புப் பகுதியாக இது அமைந்துள்ளது. இப் பகுதியில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு மனிதர் யாரும் நுழையக்கூடாது என்று அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

'லிட்ரசி டிஸ்கஷன்'

கல்வியறிவு வளர்ப்பது தொடர்பான சிக்கல்களைக் குறித்து ஆராய 'லிட்ரசி டிஸ்கஷன்' என்னும் புதிய காலாண்டு இதழொன்றை, டெஹ்ரானில் (ஈரான்) உள்ள, இன்டர் நேஷனல் இன்ஸ்ட்யூட் ஃபார் அடல்ட் லிட்ரசி மெதட்ஸ்' என்னும் அமைப்பு துவக்கியுள்ளது. வ்யது வந்தோருக்கான கல்வியறிவை வளர்ப்பதற்குத் தேவையான முறைகள், மொழி, பொருள்கள் மற்றும் திறமைகள் குறித்து அறிக்கைகள் தயாரிப்பதற்கும் ஆய்வு நடத்துவதற்கும் பயிற்சி சேவைக்கு ஏற்பாடு செய்வதற்குமாக இந்த அமைப்பானது, யுனெஸ்கோவினுலும் ஈரான் அரசினுலும் கூட்டாக நிறுவப்பட்டது. ''லிட்ரசி டிஸ்கஷன்'' ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் வெளியிடப் படுகிறது. அதன் ''1970 கோடைப் பருவ'' இதழானது, இக் கல்வியறிவு ஆராய்ச்சிக்கெனவே சிறப்பாக வெளியிடப் பட்டுள்ளது. இந்த அமைப்புக்கு எழுதி (மே/பா பெட்டி 1555, டெஹ்ரான்), ஈரான் இதழின் படிகளை இலவசமாகப் பெறலாம்.

பிரித்து ஆயும் இரசாயனத் துறையில் பயிற்சி

பிரித்து ஆயும் இரசாயனத் துறையில் அனைத்து நாட்டளவில் ஒன்பது மாதங்களுக்கு நடக்கும் மேற்படிப்புப் பயிற்சித் திட்டமொன்று 1971 அக்டோபர் 1 இல் துவங்குகிறது. யுனெஸ்கோ உருவாக்கிய இதை, பிரேசிலுள்ள சார்லஸ் பல்கலைக் கழகம் நடத்துகிறது. இத் திட்டம் பல்வேறு அம்சங்களில் பயிற்சியளிக்க இருக்கிறது: வளர்ந்து வரும் நாடுகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கும் சிக்கல்களுக்கு நவீன பிரித்தாயும் இரசாயன முறைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்தும் பயிற்றுவிக்கப்படும். ''ட்ரெயினிங் கோர்ஸ் ஆபீஸ், சார்லஸ் யுனிவர்சி, ஆல்பர்ட்டோவ், 2020, பிரேக்-2, செக்கோஸ்லோவேகியா'' என்னும் முகவரிக்கெழுதி, விண்ணப்பத் தாள்களைப் பெறலாம்; விண்ணப்பத் தாள்களுக்கான இறுதி நாள் ஏப்ரல் 1, 1971 ஆகும்.

மகப் பேற்றுல் இறக்கும் மாதரின் எண்ணிக்கை குறைகிறது

கடந்த 15 ஆண்டுகளில் 36 நாடுகளில் ஆய்ந்தெடுத்த உலக ஆரோக்கிய அமைப்பின் புள்ளி விவரங்கள், மகப் பேற்றினல் இறக்கும் மாதரின் எண்ணிக்கை வியத்தகு அளவில் குறைந்து வருவதைக் காட்டுகின்றன. குழந்தை பிறப்பதற்கான-மிக் மிகப் பாதுகாப்பான இடம் உலகிலேயே ஸ்வீடன்தான். 1,00,000 பிறப்புகளுக்கு 1951இல் 69 பேர் (மாதர்) இறந்தாக இருந்த நிலை மாறி, 1966இல் 10,00,000 பிறப்புகளுக்கு 113 மாதரே இறந்துள்ளனர் என்ற நிலைக்கு முன்னேற்றங் கண்டுள்ளது. இதே காலத்தில், சில நாடுகளில் அதற்கு முன்பிருந்த இந்த இறப்பு விகிதம் பாதியாகக் குறைந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு யுனெஸ்கோவின் உதவி

உலகிலேயே, காற்றுவெளியில் அசுத்தம் அதிகமாகவரும் நகரம், கொரியக் குடியரசின் தலைநகரமான சியோல்தான்; டோக்கியோவோ அல்லது நியூயார்க்கோ அன்று என்று, சான்பிரான் சிஸ்கோவில் உள்ள ஆசியக் கழகம் வெளியிடும் 'ஏசியன் ஸ்டுடண்ட்' என்னும் ஏடு கூறுகின்றது. யாங்டாங்போவின் சியோல் நகர்ப்புற-தொழில் மயப் பகுதியில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பில் மாதமொன்றுக்கு 30 டன் அளவுள்ள தூசித் துகள்கள் விழுகின்றன். என்று அண்மை ஆய்வு ஒன்று காட்டுவதாக அவ்வேடு கூறுகின்றது. பழைய டீசல் இயந்திரங்களால் ஓட்டப்படும் சுமார் 4,000 உந்து வண்டிகள் கக்கும் கருத்த புகையானது, காற்றுவெளியைப் பெரும்பங்கு அசுத்தமாக்குகின்றது.

காற்றுவெளியில் அசுத்தம் நிறைந்துவரும் நகரம்

கீழைப் பாகிஸ்தானின் வெள்ள நாசத்தைத் தொடர்ந்து நடந்துவரும் புனர் நிர்மாணப் பணிக்கு, 50.000 டாலர் பெறுமான உதவியையுனெஸ்கோ அளிக்க இருக்கிறது. இதை அறிவித்த யுனெஸ்கோவின் செயற்குழு, கல்வி மற்றும் கலாச்சாரச் சொத்துக்களின் புனர் நிர்மாணத்திற்காக பாகிஸ்தான் அரசுடன் ஒத்துழைக்குமாறு எல்லா உறுப்பினர் நாடுகளையும் கேட்டுக் கொண்டது. நாசத்தடுப்பு மற்றும் புனர் நிர்மாணம் குறித்து ஆராயுமாறு பாகிஸ்தானத்திலிருந்து வந்த தீர்மானத்தையுஞ் சேர்த்து, மேற்படி உதவித் திட்டம் யுனெஸ்கோவின் அண்மைப் பொது மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செய்திக் கதிர்...

- கீழைப் பாகிஸ்தானில் புயலால் நாசமாகிய பகுதிகளைப் புனர்நிர்மாணஞ்செய்வதற்கு $ 1850 இலட்சங்கள் தேவைப்படும் என்று, இதற்கான விரிவான திட்டமொன்றை வகுத்துள்ள உலக வங்கி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.
- நைஜீரியக் கூட்டாட்சியின் 12 மாநிலங்களிலும் ஒவ்வொரு நிலையமாக, அனைத்து நாட்டு இளைஞர் நிலையங்களை, நைஜீரிய இளைஞர் பேரவை கட்ட விருக்கிறது. ச்சாட் ஏரிக்கு அருகில் முதல் நிலையம் கட்டப்படவுள்ளது.
- டோரண்டோவில் உள்ள மத்திய கணக்கிடு நிலையத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறு நிலையங்களுடன் கூடிய முழுக்க தானே இயங்கும் வானநிலை ஆய்வுச் சாலையொன்றை உலகிலேயே முதன் முறையாக கனடா எழுப்பியிருக்கின்றது.
- இந்தோனேசியாவைப் பார்வையிட வரும் வெளிநாட்டு மாணவர்களுக்குத் துணைசெய்யும் வகையில் சிறப்பான பயண சேவை ஒன்றை, ஜாகர்த்தாவிலுள்ள இந்தோனேசியப் பல்கலைக் கழகத்து மாணவர்ப் பேரவையானது நிறுவியுள்ளது.

புதிய நூல்கள்

'யுனெஸ்கோ ஸ்டாடிஸ்டிக்கல் இயர் புக் 1969'

மக்கட்தொகை, கல்வி, வானெலித் திரைப்பெட்டி, திரைப்படம், அறிவியலும் தொழில் நுட்பமும், வானெலி அறிவிப்பு, செய்தி இதழ்கள், நூல் நிலையங்கள் அரும் பொருள் காட்சிச் சாலைகள், கலாச்சாரச் செலவுகள் போன்றவை குறித்த ஆண்டு நூல்.

ஆங்கிலம் பிரெஞ்சு இருமொழிகளில்: 1970 ($ 26-00, £ 7-80) பக்கம் 14இல் உள்ள கட்டுரைக் காண்க.

பெட்டர் டீச்சர்ஸ்

யு என் ஆர் டபிள் யூ ஏ./யுனெஸ்கோ இன்ஸ்ட்யூட் ஆப் எட்யுகேசன் நடத்தும் உள்சேவை ஆசிரியப் பயிற்சி குறித்த ஓர் அனுபவம் பற்றியது.

1970 ($ 3-50, £ 1-05)

தி எட்யுகேஷன் அண்டு அட்வான்ஸ்மெண்ட் ஆஃப் வுமன்

ஆசிரியர் : ஜாக்விலைன் ச்சாபாத்

1970 ($ 2-00, 60 பக்)

ஆனுவல் சம்மரி ஆஃப் இன்பஃர்மேஷன் ஆன்நேச்சுரல் டிஸ்ஆஸ்டர்ஸ் நெம்பர் 3: 1968

1970 ($ 2-50, 75 பக்)

நியூ ட்ரென்ட்ஸ் இன் மேத்தமேட்டிக்ஸ் டீச்சிங் வால்யூம் II (1970)

இன்டர்நேஷனல் கமிஷன் ஆப் மேத்தமேடிக்ஸ் இன்ஸ்ட்ர்க்ஷன் தயாரித்தது.

காம்போசிட் : ஆங்கிலம் - பிரெஞ்சு

1970 ($ 7-00, £ 2-10)

ஃபங்ஷனல் லிட்ரஸி ஒய் அண்டு ஹௌ?

(யுனெஸ்கோவும் அதன் வேலைத் திட்டமும்) 1970

மெயின் ட்ரெண்ட்ஸ் ஆஃப் ரிசர்ச் இன் தி சோஷியல் அண்டு ஹியூமன் சையன்ஸஸ்

பகுதி 1 : சோஷியல் சையன்ஸஸ்

முன்னுரை : ரெனே மேஹு கூட்டுப் பதிப்பு - யுனெஸ்கோ - மௌட்டன், தி ஹேக், 1970 (துணி அட்டை $ 30-00, £ 9.)

வாட் ஈஸ் எட்யுகேஷனல் பிளானிங் ?

பி. எச். கூம்ப்ஸ்

யுனெஸ்கோ-இன்டர்நேஷனல் இன்ஸ்ட்யூட் ஆப் எட்யுகேஷனல் பிளானிங்

1970 ($ 2-00, 60 பக்.)

ஸ்டுடன்ட்ஸ் ஆஸ் லிங்க்ஸ் பிட்வீன் கல்சர்ஸ

கூட்டுப் பதிப்பு: யுனெஸ்கோ-யூனிவர்சிடெட்ஸ்ஃபார்லாகெட், ஓஸ்லோ

நேஷனல் சயன்ஸ் பாலிசி அண்டு ஆர்கனேசேஷன் ஆஃப் ரிசர்ச் இன் தி பிலிஃப்பைன்ஸ்

(எண். 22 சயன்ஸி பாலிசி ஸ்டடீஸ் அண்டு டாக்குமெண்ட்ஸ்)

1970 ($ 2-50, £ 0-75)

Edited and published by N. D. Sundaravadivelu for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

அண்மை வெளியீடு



666 பக்கங்கள், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளில்
துணி அட்டை 33 டாலர், காகித அட்டை 26 டாலர்

**யுனெஸ்கோ
ஆண்டுத் தகவல்
வெளியீடு 1969
(7ஆம் வெளியீடு)**

கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி 200 நாடுகளிலிருந்து திரட்டப்பெற்ற புள்ளி விவரமடங்கிய அரிய நூல்.

- மக்கள் தொகை
- செய்தித்தாள்கள், இதழ்கள்
- கல்வி
- நூலகங்கள், பொருட்காட்சி மனைகள்
- தொலைக்காட்சி
- பண்பாட்டுச் செலவு
- திரைப்படம்
- அறிவியல், தொழில் நுட்பம்
- நூல் தயாரித்தல்
- வானொலி

14ஆம் பக்கக் கட்டுரை பார்க்கவும்

யுனெஸ்கோ தேசிய குழுக்கள், தேசிய புள்ளி விவரப் பணிகள், ஐ. நா. புள்ளி விவர அலுவலகம், மக்கள் தொகைப் பிரிவு ஆகியவற்றின் துணையுடன் தயாரிக்கப் பெற்றது.

கிடைக்குமிடம் : இந்திய தேசியக் கமிஷன், புதுதில்லி.

(Form IV, See Rule 8)

1.	Place of Publication	Madras
2.	Periodicity of the Publication	Unesco Courier–Tamil Monthly
3.	Printer's Name	B. Venugopal Reddy (Prasad Process P. Ltd)
	Nationality	Indian
	Address	Chandamama Buildings Vadapalani, Madras–26
4.	Publisher's Name Address	Southeren Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras–10
5.	Editor's Name	N. D. Sundaravadivelu
	Nationality	Indian
	Address	Southern Languages Book Trust, 458 Poonamallee High Road, Madras–10
6.	Name and Addresses of individuals who own the newspaper and partners or share–holders holding more than one percent of the total capital	Southern Languages Book, Trust, 458, Poonamallee High Road, Madras–10

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

(Sd.) N. D. Sundaravadivelu
Publisher,
Chairman,
Southern Languages Book Trust
Madras–10